Registered as a News Paper

FREE COPY

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 12 செவ்வாய்க்கிழமை (26.05.2015) பக்கங்கள் 20 ஓசை – 238

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

## யாழ். வன்முறைக்கு அரசியல் பின்னணி

### கண்டிக்கிறார் டக்ளஸ்



(யாழ்ப்பாணம்)

யாழ். புங்குடுதீவு பாடசாலை மாணவி படுகொலைச் சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் நோக்கிலும், குற்றவாளிகள் உயர்ந்தபட்ச தண்டனைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியும் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட மக்களது உணர்வு வெளிப்பாட்டு நிகழ்வானது, ஒரு சில சமூக விரோத சக்திகளால் திசை மாற்றஞ் செய்யப்பட்டதே தவிர, இது பொதுமக்களின் வன்முறைச் செயற்பாடுகளல்ல.

எனவே, இதனை வடக்கில் மீண்டும் ஆயுத வன்முறையைத் தோற்றுவிக்கும் சம்பவமாக உருவாக்கம் செய்யக்கூடாது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தென்பகுதி சிங்கள ஊடகவியலாளர்களுக்கு மேற்படி விடயம் தொடர்பில் தெளிவுபடுத்திய டக்ளஸ் தேவானந்தா, மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இந்தியாவின் புதுடில்லியில் மருத்துவக் கல்லூரி மாணவி

19 ஆம் பக்கம் பார்க்க

## பரவுகிறது வைரஸ் நோய் கர்ப்பிணிகளுக்கு ஆபத்து

### சுகாதார அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் பரவிவரும் இன்ப்ளூவன்சா ஏ.எச்.1 என்.1 வைரஸினால் கர்ப்பிணிப் பெண்களுக்கு பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

வைரஸ் தொற்று அதிகரிக்கும் நிலையில், நிமோனியா ஏற்படும் அபாயம் காணப்படுவதாக அமைச்சின் தொற்றுநோய், ஆய்வுப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் பபா பலிஹவடன கூறினார்.

இந்த வைரஸ் தொற்று ஏற்படுமிடத்து, தடிமன், காய்ச்சல், தொண்டை வலி மற்றும் தலைவலி போன்ற நோய் அறிகுறிகள் காணப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் தென்பகுதியில் குறிப்பாக

19 ஆம் பக்கம் பார்க்க

## காணாமற் போனோர் விவகாரம்

# ஐ.நா. செயலணி கொழும்பு விரைவு

(கொழும்பு)

காணாமற் போனோர் தொடர்பான ஐக்கிய நாடுகள் செயலணியின் நிபுணரும், தலைவருமான ஏரியல் டலிட்ஸ்கி எதிர்வரும் ஆகஸ்ட் 4 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் அழைப்பின் பேரிலேயே அவரது விஜயம் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

போரில் இடம்பெற்ற மனித உரிமைமீறல்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் உள்நாட்டு பொறிமுறைக்கு உதவியளிக்க அவர் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏரியலும் அவரது குழுவினரும் எதிர்வரும் ஆகஸ்ட் 12 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருந்து தமது திட்டங்களை விபரிக்கவுள்ளனர்.

அந்தக்குழுவினர் காணாமற்போனோரின் உறவினர்கள், அரசாங்கத் தரப்பினர் மற்றும் குடியியல் சமூக அமைப்பினரை சந்திக்கவுள்ளனர்.

ஆர்ஜன்டினாவைச் சேர்ந்த ஏரியல் டலிட்ஸ்கி 2010 ஆம் ஆண்டு காணாமற்போனோர் தொடர்பான செயலணிக்கு தலைவராக தெரிவுசெய்யப்பட்டார்.

ஏற்கனவே இந்தக்குழுவின் வருகை குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் கடந்த வாரம் அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நாணய நிதியத்திடம் முறையீடு

விதிமுறை மீறி பிணைமுறி

(கொழும்பு)

மத்திய வங்கியின் ஆளுநர் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்திடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சியினர் இந்த முறைப்பாட்டை செய்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜீ.எல்.பீரிஸ், பந்துல குணவர்தன, டளஸ் அழகப்பெரும மற்றும் உதித்த லொக்குபண்டார ஆகியோர் இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைப் பிரதிநிதியிடம் நேற்று இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சர்ச்சைக்குரிய மத்திய வங்கியின் பிணைப்பத்திரங்கள் தொடர்பில் இவ்வாறு முறைப்பாடு

19 ஆம் பக்கம் பார்க்க

## புதிய அரசின் முறைகேடுகள் இராஜதந்திரிகளுக்கு எடுத்துரைப்பு

### ஜி.எல்.பீரிஸ் முனைப்பு



(கொழும்பு)

மத்திய வங்கி முறி கொடுக்கல் வாங்கல் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினை உட்பட புதிய அரசின் முறைதவறிய செயற்பாடுகள் தொடர்பாக சர்வதேச இராஜதந்திரிகளை தெளிவுபடுத்தவுள்ளதாக முன்னாள் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் இலங்கைக்கான சர்வதேச தூதுவர் காரியாலயங்களை தெளிவுபடுத்தவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே முன்னாள் அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

மத்திய வங்கி முறி தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினை பற்றி தம்மிடம் உள்ள ஆவணங்களின் பிரதிகளை மத்திய வங்கி கட்டடத்தில் அமைந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் காரியாலயத்தில் ஒப்படைக்கவுள்ளதாக தெரிவித்தார்.

தாம் ஆரம்பித்துள்ள இயக்கத்தின் முதல் செயற்பாடாக இதனை கருத முடியும் என முன்னாள் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

# வடமராட்சியில் இன்று கண்டனப் பேரணி

### தடைபோட நீதிமன்று மறுப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனநாயக நாட்டில் ஊர்வலம் நடத்த உரிமையுண்டு. ஊர்வலத்தில் அசம்பாவிதங்கள், வன்முறைகள் ஏற்படாது பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது பொலிஸாரின் கடமை. இவ்வாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி மா.கணேசராசா பருத்தித்துறைப் பொலிஸாருக்குத் தெரிவித்தார்.

இன்று திக்கம் பகுதியில் புங்குடுதீவு மாணவி படுகொலையைக் கண்டித்து ஊர்வலம் ஒன்று நடைபெறவிருப்பதாகவும் அந்த ஊர்வலத்தில் திக்கம், பொலிகண்டி, சக்கோட்டைப் பகுதிகளைச் சேர்ந்தவர்களுடன் திருகோணமலை, கற்பிட்டிப் பகுதிகளைச் சேர்ந்தோரும் கலந்துகொள்ளவிருக்கின்றனர் எனவும் புலனாய்வுப் பொலிஸார் எமக்குத் தகவல் தந்துள்ளார்கள்.

எனவே பாதுகாப்புக் கருதி குறித்த ஊர்வலத்தைத் தடை செய்யவேண்டும் என்று கோரி பருத்தித்துறைப் பொலிஸார்

19 ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் விபத்து; முதியவர் மரணம்

(வவுனியா)

வவுனியா ஈச்சங்குளம் பகுதியில் உழவு வேலைக்காக உழவு இயந்திரத்தை சீர் செய்துகொண்டிருந்த போது, தன்னிச்சையாக உழவு இயந்திரம் இயங்கியதையடுத்து ஒருவர் ஸ்தலத்தில் உயிரிழந்ததுடன் மற்றையவர் ஆபத்தான நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

நேற்றுக் காலை உழவு வேலைக்காக உழவு இயந்திரத்தில் கலப்பையை பொருத்திக் கொண்டிருந்த போது, உழவு இயந்திரம் திடீரென முன்னோக்கி செல்லத் தொடங்கியுள்ளது.

இந்நிலையில், உழவு இயந்திரத்துக்கு அருகில் அமர்ந்திருந்த 80 வயதான முதியவர், உழவு இயந்திரம் மோதி ஸ்தலத்திலேயே பலியானார்.

மேலும், உழவு இயந்திரத்துக்குள் அகப்பட்டுக்கொண்ட உழவு இயந்திர உரிமையாளரான சி. செல்வரட்ணம் ஆபத்தான நிலையில் தற்போது வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# வாக்குப் பலத்தால் அதிகாரத்தில் இருப்பவர்களே மக்களை சமூக ரீதியாக ஒடுக்குகின்றனர்

## நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தெரிவிப்பு



(பச்சிலைப்பள்ளி)

முப்பது வருடகால கொடிய யுத்தம் மற்றும் பாரிய இழப்புக்கள் ஆகியவற்றுக்குப்பின்னும் மக்களை சமூகரீதியாக ஒடுக்கு முறைக்குட்படுத்தும் நிலைமை மாறவில்லை என நாடாளுமன்ற உறப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலை வருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார். பச்சிலைப்பள்ளியில் பனைதென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கப் பணியாளர்களுடனான சந்திப்பில் நேற்று கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்.

இன்று கூட்டுறவு அமைப்புக்களைக் கூட வர்க்க ரீதியாக பாகுபடுத்தி சில கூட்டுறவாளர்களின் வாழ்வாதாரத்திற்கே பங்கம் ஏற்படுத்தும் வகையில் சிலரின் செயற்பாடுகள் அமைந்துள்ளன இதனால் கூட்டுறவு சார்ந்து செயற்படும் பணியாளர்கள் உட்பட பலர் வாழ்வாதாரத்தை இழக்கும் நிலைகூட ஏற்பட்டுள்ளது. ஆனால் கூட்டுறவு அமைப்புக்களைப்பற்றியோ அதனை நம்பி வாழ்ந்துகொண்டிருக்கும் அங்கத்தவர்களின் குடும்ப நிலைகளைப்பற்றியோ அவர்களின் வாழ்வாதாரம் பற்றியோ அறிந்திராதவர்கள் இன்று வடக்கு மாகாணத்தில் கூட்டுறவுக்கு பொறுப்பக நியமிக்கப்பட்டுள்ளனர் அவர்கள் தமது மித வாதப்போக்கை பிரயோகித்து வர்க்கரீயாக சமூகத்தை பிளவு படுத்துவதோடு சமூக ரீதிக்கான ஒடுக்குமுறைகளையும் கட்ட விழ்த்துவிட்டுள்ளனர். ஆனால் தேர்தல் காலங்களில் தேசியம் என்ற போர்வையில் அனைத்து மக்களின் வாக்குகளையும் சூறையாடுவதற்கும் அவர்கள் தயங்குவதில்லை.

ஆனால் தமிழர் பிரதேசத்தில் ஆயுதப்போராட்டம் ஆரம்பித்த காலத்தில் நாம் இன அடக்கு முறைக்கு எதிராக மட்டுமன்றி சமூகத்தில் புரையோடிப் போயிருந்த வர்க்கரீதியான அடக்கு முறைகளுக்கு எதிராகவும் குரல்கொடுக்க வேண்டிய கட்டாயச் சூழல் காணப்பட்டது. அதற்கமைவாக நாம் அதனை எமது தலையாய கடமையாகக்கருதி செயற்பட்டுவந்தோம் இன்று வரை அந்த கொள்கையிலிருந்து நாம் விலகியதில்லை தொடர்ந்தும் ஆயுதப்போராட்டங்கள் முற்றுப்பெற்றபோதும் எமது கொள்கையில் உறுதியுடனும் அந்த இலக்கு நோக்கியும் செயற்பட்டுவருகின்றோம்.

ஆனால் மக்களின் வாக்குப் பலத்தால் தொடர்ந்தும் அரசியல் இருப்புக்களை தக்க வைத்துவருபவர்கள் இன்றும் மக்களை சமூகரீதியாக அடக்கு முறைக்குட்படுத்தியே வருகின்றனர் கடந்த முப்பதுவருட காலமாக பாரிய யுத்தத்தை மக்கள் எதிர்கொண்டு பாரிய உயிரிழப்புக்களை சந்தித்து இன மத பாகுபாடுகளுக்கு அப்பால் மனித குலம் ஒன்றே என்ற இறுதிக்கட்டங்களை எட்டி மக்கள் மீண்டுள்ளனர். எனினும் அவர்கள் சுதாரித்துக்கொண்டு மீண்டெழ முன்னரே அவர்களை மீளவும் சமூகரீதியாகவும் தொழில் ரீதியாகவும் அடக்குவதற்கு சில சக்திகள் முனைகின்றன. எனினும் நாம் இவ்வாறான அனைத்து சவால்களுக்கும் முகம் கொடுத்து அனைத்து மக்களின் மேம்பாட்டையும் இலக்காகக் கொண்டு உழைத்துவருகின்றோம் அந்த உழைப்பில் நாம் வெற்றியும் கண்டுள்ளோம்.

எனவே எமது மக்களை சமூகரீதியாக பிளவுபடுத்தி ஒன்றுபட்ட மக்கள்சக்தியை இல்லா தொழித்து அரசில் ஆதாயம் தேட முயற்சிக்கும் நபர்கள் தொடர்பில் மக்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும் அது மட்டுமன்றி தமிழினம் அனைத்து அடக்கு முறைகளிலிருந்தும் விடுபடவேண்டுமாயின் கல்வி ரீதியான முன்னேற்றம் அவசியம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

பச்சிலைப்பள்ளி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைவரின் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் பச்சிலைப்பள்ளி பிரதேசசபை உறுப்பினர் இராசதுரை மற்றும் பனைதென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்கள், சங்கத்தின் அங்கத்தவர்கள், பணியாளர்கள், பணிப்பாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# நாவற்காடு சந்திரன் முன்பள்ளி சீராக இயங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(கரைதுறைப்பற்று)

முல்லைத்தீவு கரைதுறைபற்று பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட முள்ளியவளை வடக்கு நாவற்காடு கிராமத்தில் இயங்கிவரும் சந்திரன் முன்பள்ளி சீராக இயங்குவதில்லை என மக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, குறித்த முன்பள்ளியில் கல்விகற்கும் சிறார்களை பெற்றோர்கள் கிரமமாக அனுப்புவதில்லை எனவும் பெரும்பாலான பெற்றோர்கள் தமது நேரசூசியின்படி வந்து சத்துணவு தயாரிப்பதில்லை.

குறித்த முன்பள்ளியை கண்காணிக்கும் இணைப்பாளரோ அல்லது முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளரோ இவை தொடர்பாக கவனத்தில் எடுப்பதில்லை எனவும் அறியமுடிகிறது எனவே குறித்த தரப்பினர் அனைவரும் இவ்விடயம் தொடர்பாக கூடிய கவனமெடுத்து மன்பள்ளியை சீராக இயக்கி மாணவச் செல்வங்களின் கல்வியை வளங்க முன்வரவேண்டுமென சமூக ஆர்வலர்களும் பொதுமக்களும் கேட்டக்கொள்கின்றனர் (125)

# கடலில் மூழ்கிய சிறுவன் ஆபத்தான நிலையில்

முல்லைத்தீவு சிலாவத்தையில் கடலில் மூழ்கிய சிறுவன் ஒருவர் மீட்கப்பட்டு அவரச சிகிச்சைக்காக வவுனியா வைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில், வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தினை வருடாந்த பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு நேற்று சிலாவத்தை கடற்கரையில் தீர்த்தம் எடுக்கும் நிகழ்வு இடம்பெற்றது. தீர்த்தம் எடுக்கும் நிகழ்விற்கு சுமார் ஒரு மணி நேரத்திற்கு முன்னதாகவே சிறுவர்கள் சிலர் கடலில் இறங்கியுள்ளனர்.

இந்நிலையில் முல்லைத்தீவு உண்ணாப்பிலவைச் சேர்ந்த தமிழழகன் தர்சிகன் (வயது - 14) என்ற சிறுவன் கடலில் மூழ்கியுள்ளார்.உடனடியாக இவர் மீட்கப்பட்டு முல்லைத்தீவு மாஞ்சோலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உடனடியாக மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல் லப்பட்டுள்ளார். (125)

# நீண்ட காலமாக புனரமைக்கப்படாத அல்லாரை முதலாம் குறுக்கு ஒழுங்கை

(மீசாலை)

தென்மராட்சி, மீசாலை அல்லாரை 1ஆம் குறுக்கு ஒழுங்கை நீண்டகாலமாக புனரமைக்கப்படாத நிலையில் போக்குவரத்திற்கு ஒவ்வாத நிலையில் உள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் பெய்த மழையால் போக்குவரத்துச் செய்ய முடியாது மாணவர்களும் மக்களும் நீண்டதூரம் சுற்றிபிரதான வீதிக்குச் செல்லவேண்டிய துர்ப்பாக்கியநிலை ஏற்பட்டதாக தெரிவித்தனர். மீசாலை புகையிரதக் கடவை பாதுகாப்பில்லாததனால்



நூற்றுக்கணக்கான மாணவர்கள் இப்பாதையினையே பாவித்து புத்தூர்ச்சந்தியின் புகையிரதப்பாது காப்புக் கடவையினைக் கடந்து சாவகச்சேரி கொடிகாமம் பாடசாலைகளுக்கும் வீரசிங்கம்மத்தியகல்லூரிக்கும் சென்று வருகின்றனர். சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் பல முறை முறையிட்டும் எதுவித நடவடிக்கையும் இதுவரை மேற் கொள்ளப்பட வில்லைஎன தெரிவித்தனர்.

மழை காலம் நெருங்குவதற்கு முன்னர் இவ் வீதியை செப்பனிட்டுத்தருமாறு அவ்வூர் மக்கள் சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினரை வேண்டி நிற்கின்றனர். (11)

# தமிழில் உரையாடக்கூடிய பொலிஸார் போக்குவரத்து கடமையில் அவசியம்

(திருநெல்வேலி)

தமிழில் உரையாடக்கூடிய பொலிஸார் போக்குவரத்துக் கடமையில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என பலராலும் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

வீதிக்கு வீதி நின்று வாகனதாரிகள் போக்கவரத்து வீதிகளை மீறினார்கள் எனக் குற்றம் சாட்டிக் குற்றப் பத்திரம் தாக்கல் செய்யும் போக்குவரத்துப் பொலிஸார், குற்றம் சாட்டப்பட்டவர்கள் எதையும் விளங்கிக் கொள்ள முடியாமலே தண்டப் பணத்தை செலுத்த வேண்டியுள்ளதாகத் தெரிவக்கப்பட்டுள்ளது.

ஒரு குற்றத்தை ஒருவர் புரிந்தார் என்றால் அவர் புரிந்த குற்றம் என்ன என்பது அவருக்குத் தெரிந்திருக்க வேண்டியது அவசியமாகும் என்பதுடன் இது அவருடைய அடிப்படை உரிமையும்கூட. இதனை மீறும் வகையில் போக்குவரத்துப் பொலிஸாரின் செயற்பாடு அமைநதிருப்பதாக குறை கூறப்படுகிறது.

சிங்களத்தில் எழுதப்படும் குற்றச்சாட்டுக்குத் தமிழ் மொழியெர்ப்பு எதுவும் வழங்கப்படுவதில்லை. அதனைப் பெற்றுச் செல்லும் குற்றம் சாட்டப்பட்டவர் குற்றப் பத்திரத்தில் என்ன எழுதியிருக்கின்றது எனத் தெரியாமலே தண்டப் பணத்தை செலுத்தி விட்டு வர வேண்டிய அவலம் உள்ளது.

தமிழ்ப் பகுதிகளில் போக்குவரத்துக் கடமையில் உள்ள பொலிஸார் தமிழில் உரையாடும் அல்லது எழுதும் ஆற்றல் நிறைந்தவர்களாக இருப்பது அவசியம். தமிழ் தெரிந்த பொலிஸாரின் எண்ணிக்கை போதலில்லையானால் அதனை அதிகரிக்க வேண்டியது பொலிஸ் திணைக்களத்தின் கடமையாகும்.

வாகனதாரிகள் போக்குவரத்து விதிகளை மீறும்போது அவர்கள் விளங்கக்கூடிய மொழியில் குற்றத்தைப் போக்குவரத்துப் பொலிஸார் எழுதி வழங்க வேண்டும் என வாகனதாரிகள் பலர் கோரிக்கை முன்வைத்துள்ளனர். (137)

# இலங்கை – நோர்வே கூட்டில் யாழில் இசை விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை - நோர்வே இசைக் கூட்டுத் தாபனத்தின் படைப்பில் யாழ். இசை விழா எதிர்வரும் சனிக்கிழமை யாழ். நகர சபை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

நோர்வே இசைக் கச்சேரி, அருகிரி சூர்ட் தியேட்டரின் கலைத்திறன் வழிகாட்டி அமைப்புடன் இணைந்து ரோயல் நோர்வே தூதரகத்தின் நிதிப் பங்களிப்புடன் சேவாலங்கா மன்றத்தினால் இந்நிகழ்வு நடாத்தப்படவுள்ளது.

மூன்றாவது முறையாக இந்த இசை விழா இடம்பெறவுள்ளது. இதில் 8 தொடக்கம் 10 வரையான உள்நாட்டுக் குழுக்களும், இந்தியா மற்றும் பங்களாதேஷிலிருந்து 3 சர்வதேச குழுக்களும் பங்குபற்றவுள்ளனர். இதுவரை இடம்பெற்ற இசை விழாக்களின் புகைப்பட கண்காட்சி பிற்பகல் 3 மணி முதல் ஆரம்பமாகும். தொடர்ந்து பிற்பகல் 4 மணி முதல் இரவு 11 மணி வரை நடைபெறவுள்ளது. பங்குரபான் - மதுகம, சப்புரகமுவபாலி, இரத்தினபுரி, யாழ். கிராமிய சங்கமம் - யாழ்ப்பாணம், சூபி - அம்பாறை, பாலி பொனிக்ஸ் - கொழும்பு, புலிக்கூத்து - மட்டக்களப்பு, உடப்பு - புத்தளம் ஒன்றிணைந்த பல்கலைக்கழக நிகழ்ச்சி மற்றும் தப்பு - கிளிநொச்சி, இத்துடன் 3 சர்வதேச குழுக்களும் பங்குபற்றுகின்றன.

தவிர்க்க முடியாத காரணத்தினால் சிறுவர்களுக்கான நிகழ்வு இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் பின்னர் இது குறித்து அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.



அரியாலையூர் மிஷாந்தி செல்வராஜாவின் மூன்றாம் முத்தம் குறுநாவல் நூல் வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றதைக் காணலாம். (90)

# ஹோட்டல் முறையில் வழங்கப்பட்ட பிரசித்திபெற்ற கோவில் அன்னதானம்

## எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர் இந்து ஆர்வலர்கள்

(வவுனியா)

வவுனியாவில் குருமன்காட்டுப் பகுதியில் உள்ள கோவில் ஒன்றில் அன்னதானத்திற்கு ஹோட்டலில் வழங்கப்படுவது போன்று நவீன முறையில் பொதி செய்யப்பட்ட பார்சல்கள் வழங்கப்பட்டமை தொடர்பில் இந்து ஆர்வலர்கள் தமது கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்துள்ளதாவது,

வவுனியாவில் குருமன்காட்டில் பிரசித்தி பெற்ற கோவில் ஒன்றில் கடந்த சனிக்கிழமை கொடியேற்றத் திருவிழாவின் போது அன்னதானத்திற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

எனினும் வாழை இலை அல்லது தாமரை இலை போட்டு வழங்கப்பட வேண்டிய அன்னதானம் எனப்படும் மகேஸ்வர பூஜையின் பின்னரான பிரசாதம் கலாசாரத்திற்கு முரணான முறையில் உடனடியாக பொதி செய்யும் பெட்டியில் இடப்பட்டு அரசியல் கூட்டங்களில் வழங்கப்படுவது போன்று வழங்கப்பட்டுள்ளது.

கலாசார மண்டபம் உட்பட இடவசதிகள் கொண்ட இக்கோவிலில் இவ்வாறான முறையில் அன்னதானம் வழங்கப்பட்டுள்ளமை இந்து கலாசாரத்தை அவமதிக்கும் செயலாகும். எனவே இது தொடர்பில் வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் மற்றும் இந்து அமைப்புக்கள் கவனம் செலுத்த வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

# நிரந்தர வைத்தியர் இன்மையால் விசனமடையும் இலுப்பைக்குளம் மக்கள்

வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களின் எல்லையில் அமைந்துள்ள இரணை இலுப்பைக்குளத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நிரந்தர வைத்தியர் இன்மையால் அப்பகுதி மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

மடு பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள இவ் ஆரம்ப சுகாதார நிலையம் யுத்தத்தால் அழிவடைந்து 2010 ஆம் ஆண்டு மீளமைக்கப்பட்ட போதிலும் நிரந்தர வைத்தியர் நியமிக்கப்படவில்லை.

23 கிராமத்தவர்கள் இவ் வைத்தியசாலையையே பயன்படுத்தும் நிலையில் தொடர்ச்சியாக வைத்தியர் நியமிக்கப்படாமையினால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

இந் நிலையில் இவ் விடயம் தொடர்பாக வட மாகாண சுகாதார அமைச்சருக்கு தெரியப்படுத்தியபோதிலும் இதுவரை எவ்வித பலனும் இல்லை என மக்கள் தெரிவித்தனர்.

# விண்ணப்பம் கோரல்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையானது யாழ்ப்பாண மாவட்டத்தில் முழு நேர மற்றும் பகுதி நேர தொழிற்பயிற்சி கற்கை நெறிகளை நடாத்தி வருகின்றது. இக்கற்கைநெறிகள் யாழ்ப்பாணம், கைதடி, காரைநகர், சுன்னாகம், வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, சண்டிலிப்பாய், ஊர்காவற்றுறை ஆகிய தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைபெற்றுவருகின்றது. அனைத்து முழு நேர கற்கை நெறிகளும் தொழில் தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சிகளாகும்.

இக்கற்கைநெறிகளை கற்க விரும்புவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் நேரிலோ அல்லது தபாலிலோ எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் உதவிப்பணிப்பாளர், மாவட்ட அலுவலகம் 1 ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க முடியுமென யாழ்.தொழிற்பயிற்சி அதிகாரசபை உதவிப்பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார்.

❖ ❖ ❖

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் வடமாகாணத்தில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் கற்பிப்பதற்கு பகுதி நேர ஆங்கில போதனாசிரியர்களிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கு ஓய்வுபெற்றுள்ள பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க விரும்புவோர் தமது சுயவிபரக் கோவையுடன் சான்றிதழ்களின் பிரதிகளையும் இணைத்து உதவிப்பணிப்பாளர் மாவட்ட அலுவலகம், இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, இல.12/1 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் வடமாகாணத்தில் உள்ள மாவட்ட அலுவலகங்களிற்கு நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர்களிற்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது.

இப்பதவிக்கு பல்கலைக்கழக ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டதாரிகள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க விரும்புவோர் தங்கள சுயவிபரக்கோவையுடன் சான்றிதழ்களின் பிரதியையும் இணைத்து உதவிப்பணிப்பாளர், மாவட்ட அலுவலகம், இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை, இல.12 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் சனிக்கிழமைக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்.மக்களின் ரசனைக்கு விருந்தளிக்கும் யாழ்.எவ்.எம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பிராந்திய ஒலிபரப்பான யாழ்.எவ்.எம், வடபகுதி மக்களின் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து தனது சேவையை வழங்கிவருவதாக, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் சேவைப் பணிப்பாளர் ஆர்.கணபதிப்பிள்ளை தெரிவித்தார்.

எதிர்வரும் நாட்களில் நேயர்களின் இரசனைக்கேற்ப நிகழ்ச்சிகளை சிறப்பாகத் தொகுத்து வழங்க யாழ்.எவ்.எம் தயாராகிவருவதாகவும் அவர் மேலும் கூறினார்.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த சமூக பிரமுகர்களுடன் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலில் தலைமைதாங்கி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அதன் பிராந்திய சேவையான யாழ்.எவ்.எம் இல் புதிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. வட பகுதி மக்களின் கலை, பண்பாட்டு விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் இந்த மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. சிறுவர், மகளிர் நிகழ்ச்சிகள் மற்றும் யாழ்ப்பாண பேச்சுவழக்கில் அமைந்த நாடகங்கள் என்பன ஒலிபரப்பாகவுள்ளன.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சட்டத்தரணி சரத் முத்தட்டுவேகம, பணிப்பாளர் நாயகம் ஏரானந்த ஹெட்டியாராச்சி, பிரதிப் பணிப்பாளர் நாயகம் மயூரி அபயசிங்க ஆகியோரின் முயற்சியில் புதிய மாற்றங்களுடன் யாழ்.எவ்.எம் நிகழ்ச்சிகளை வழங்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கலந்துரையாடலுக்கு வருகை தந்திருந்த யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், தேசிய கல்வியியற்கல்லூரி விரிவுரையாளர்கள், யாழ்.மாவட்ட பாடசாலை அதிபர்கள் சமூக சேவை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் நிகழ்ச்சிகளை திறம்பட தயாரித்து வழங்குவதற்கு தங்களாலான ஒத்துழைப்பினை வழங்குவதாகவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# புங்குடுதீவு மாணவிக்கு முச்சக்கரவண்டி சாரதிகள் அஞ்சலி



(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் கொலையினை கண்டித்து மாணவிக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட அஞ்சலி நிகழ்வு மன்னார் முச்சக்கர வண்டி தரிப்பிடத்தில் கடந்த சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இடம் பெற்றது.

மன்னார் முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வு, சங்கத்தின் செயலாளர் ஏ.நசூருதீன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, உயிரிழந்த மாணவி வித்தியாவுக்கு மன்னார் முச்சக்கர வண்டி தரிப்பிடத்தில் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

குறித்த மாணவி துஷ்பிரயோகப்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டமையினை வன்மையாக கண்டிப்பதோடு, குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

குறித்த அஞ்சலி நிகழ்வில் மன்னார் முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்க உறுப்பினர்கள், மன்னார் தனியார் பஸ் சங்க உறுப்பினர்கள், தமிழீழ விடுதலை இயக்கம் (டெலோ) முக்கியஸ்தர் ஜஸ்ரின் ஆகியோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

நீ எந்த மாற்றத்தை விரும்புகிறாயோ அந்த மாற்றத்தை உன்னில் இருந்தே தொடங்கு. - அண்ணல் காந்தி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## மற்றமையை மதித்தல்!

அறிஞர் வோல்டயர் சொல்லியிருக்கும் அந்த பிரபலமான வாசகம் எல்லோரும் அறிந்ததே. "உனது கருத்தோடு எனக்கு உடன்பாடில்லை. ஆனால் அந்தக் கருத்தைச் சொல்ல உனக்குள்ள உரிமையைக் காப்பதற்காக என் உயிரையும் கொடுத்துப் போராடுவேன்".

மக்களின் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றிருக்கும் கட்சியினர் என்ற ஹோதாவில் ஏனைய கட்சிகள் மீது வாய்க்கு வந்தவாறான அவதூறுகளை எல்லாம் பேசலாம் என்று கருதிக் கொள்பவர்களையும் அவ்வாறுதான் விட்டுவிட வேண்டியிருக்கிறது.

சாவகச்சேரியில் பொதுநிகழ்வொன்றில் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், இன்னொரு நாடாளுமன்ற உறுப்பினரின் தலைமையிலான கட்சிதான் யாழ்நகரில் நடந்த வன்முறைக்குக் காரணம் என்று ஆதாரங்களில்லாமலே அடித்துவிட்டிருக்கிறார்.

வழக்கம்போல எந்த சாட்சியமும் இல்லாமலே இன்னொருவரை கொலைகாரன் என்று சொல்லலாம்; துரோகி என்று சொல்லலாம்; கொன்றழிக்கப்பட வேண்டியவர் என்றும் ஆவேசமூட்டலாம் என்பதுதான் தமிழ் ஆதிக்கவியலாளர்களின் 'கருத்துச் சுதந்திரம்' ஆக இருக்கிறது.

இந்த சுதந்திரத்தையும் அவர்களுக்கு மற்றவர்கள் அனுமதித்துவிட்டு, முடிந்தால் பின்னர் சட்ட ரீதியாகத்தான் அவர்களது அவதூறை மறுப்பதற்குப் போராட வேண்டியிருக்கிறது.

அது ஒருபுறமிருக்க, மற்றவர்களை அவதூறு செய்யவோ துரோக முத்திரை குத்தவோ சற்றும் தயங்காத நாம் மற்றவர்களின் மாற்றுக் கருத்துகளை ஏற்றுக்கொள்ள முடியாமல் அவர்கள் பேச்சை அமுக்கிவிடப் பார்க்கிறோம்.

"நாங்கள் கூறும் வாதமே சரியானது, நாம் கூறிய பொருளே எல்லோரும் ஏற்றுக்கொண்ட உண்மை, எனவே எங்கள் தரப்பை எங்களைப் போலவேதான் நீங்களும் பேசவேண்டும், அதுதான் சமூகப் பொதுக்கருத்துமாகும்" என்று போதிப்பதிலேயே பதற்றமாயிருக்கிறோம்.

மற்றதெல்லாம் மூடர்கள் நிரம்பிய உலகம், அதைச் சரிப்படுத்த வேண்டிய பொறுப்பு நம்முடையது, ஏனென்றால் நாம்தானே சரியாக இருக்கிறோம், சமூகப் பெரும்பான்மையும் அதைத்தானே சரியென்கிறது... என்கிறவிதமான எண்ணங்களுக்கே பழக்கப்பட்டிருக்கிறோம்.

இன்றிருக்கும் இந்தச் சமூக அமைப்போ நிறுவனங்களோ சரியாயில்லை, அதுவே இத்தனை குற்றங்களுக்கும் மானுட இழிவுகளுக்கும் காரணம் என்கிறபோது, இந்தச் சமூகத்தின் கருத்து, இந்தச் சமூகத்தின் அறம் என்றெல்லாம் சொல்லிக்கொண்டு மாற்றுக் கருத்துக்களை அடக்க முற்படுவது எத்தனை அபத்தம்!

ஒருவரது போக்கும் வழியும் நாம் ஒப்புக்கொள்ள முடியாததாக இருக்கலாம். அவரது நம்பிக்கைகளும் எண்ணங்களும் நமக்குக் கேலிக்குரியவையாய்க் கூடத் தோன்றலாம். அப்படியிருந்தாலும், அவை வெளியாவதை நசுக்கிவிடுவதற்குப் பதற்றமுறுவது ஜனநாயகப் பண்பல்ல.

அவரது சிந்தனை மற்றும் அவரது வாழ்க்கையும் மக்கள் பார்வைக்குக் கிடைக்கட்டும். நாம் அவராக முடியாது. அவரை நாமாக மாற்றிவிடவும் அந்தரப்பட வேண்டியதில்லை.

என் நம்பிக்கை எனக்கு; உங்களுடையது உங்களுக்கு. நீங்கள் சொல்வதே ஒருவேளை உண்மையாக இருக்கலாம்; அல்லது நான் சொல்வதே கூட உண்மையாகவும் இருக்கலாம். அல்லது நாம் இருவருமே தவறாகவும் இருக்கலாம்....

அல்லது நம்முடைய எண்ணப்போக்கில் சரியும் பிழையும் கலந்தும் இருக்கலாம். இதையெல்லாம் திறந்த மனத்தோடு நாம் பார்க்க முடிந்தால் மட்டுமே மற்றவர்களை மதித்தலும், சகமனிதர்களாக உறவுகொள்ளுதலும் சாத்தியமாகும்.

நாம் எவ்வளவுதான் அறிஞர்களாக இருந்தாலும், நம் கருத்து எவ்வளவுதான் சரியாக இருந்தாலும், ஒவ்வொரு உயிரும் தான் கண்ட ஒளியில் நடந்து செல்வதே நியாயம்.

நம் அனைவரின் ஒருங்கிணைந்த வாழ்விற்கு நாம் செலுத்த வேண்டிய கடன் அது.

- ஆசிரியர்

# புங்குடுதீவு படுகொலை வழக்கு

# விசாரணைகளில் திருப்தி இல்லை

## சர்வதேச உதவி நாட முயற்சி

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மாணவியின் படுகொலை வழக்கில் பொலிஸார் முன்னெடுத்துவரும் விசாரணைகள் திருப்தியளிக்கக்கூடிய வகையில் இல்லை என மகளிர் விவகார பிரதியமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

சர்வதேச வானொலி ஒன்றுக்கு நேற்று வழங்கிய சிறப்பு நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"இது குறித்த விசாரணைகள் இனியும் சரியான முறையில் முன்னெடுக்கப்படாத பட்சத்தில் சர்வதேச அமைப்புக்களின் உதவியை நாட வேண்டிய அவசியம் ஏற்படும் என்றும் பிரதியமைச்சர் கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தப் படுகொலை தொடர்பான விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றனவா? என்ற சந்தேகம் தற்போது எழுந்துள்ளது.

அத்துடன் பிரதமர் கடந்த வாரம் பொலிஸாருக்கு திடீர் இடமாற்றங்களைச் செய்திருக்கிறார். இடைநிறுத்த வேண்டியோரை இடைநிறுத்தாமல் அப்பாவி பொலிஸ் அதிகாரிகளே இங்கு இடமாற்றம் செய்யப்பட்டிருக் கின்றனர். இதனை நான் நிராகரிக்கின்றேன்.

யாழ்ப்பாணத்தில் இந்தச் சம்பவம் மட்டுமல்ல, இதுபோன்ற பல துஷ்பிரயோக சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

எங்களது அரசாங்கம் ஆட்சிக்கு வந்திருக்கும் சூழ்நிலையிலும் மாணவி படுகொலை மற்றும் அதற்கு முன்னரான இதுபோன்ற சம்பவங்கள் தொடர்பிலான விசாரணைகள் மந்த கதியிலேயே உள்ளன. எனினும் விசாரணைகளில் தொடர்ந்தும் அதிருப்தி நிலை காணப்பட்டால் சர்வதேசத்தை நாட வேண்டிய நிலை ஏற்படும் என்றார்.

# கொழும்பில் ஹோட்டல் திருவிழா

# மைத்திரி நேரடியாக பங்கேற்பு

(கொழும்பு)

கொழும்பில் ஆரம்பிக்கப்பட்ட ஹோட்டல் ஷோ கொழும்பு - 2015 ஆம் ஆண்டுக்கான நிகழ்வு நேற்று முன்தினத்துடன் வெற்றிகரமாக நிறைவடைந்தது. 10 ஆவது பதிப்பான ஹோட்டல் ஷோ ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் சுற்றுலாத்துறை விளையாட்டுத்துறை அமைச்சர் நவீன் திஸாநாயக்கவின் பங்குபற்றுதலுடன் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சிலோன் ஹோட்டல் பாடசாலை பட்டதாரி சங்கம் மற்றும் CDC அமைப்புக்கள் இணைந்து ஏற்பாடு செய்த இம் மாபெரும் நிகழ்வு மூன்று நாட்கள் நடைபெற்றது. கடந்த 22, 23 மற்றும் 24 ஆகிய திகதிகளில் இடம்பெற்ற இந்நிகழ்வு சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு துறைகளிலுள்ளவர்களினால் பெரிதும் விரும்பப்படுகின்ற ஒரு நிகழ்வாகும்.

இத்துறையுடன் தொடர்புடைய சாதனங்கள் மற்றும் பொருள்கள், வசதிகள், சேவைகள் என்பன காட்சிக்கு வைக்கப்பட்டு இடம்பெறுகின்ற இந்நிகழ்வின் மூலம் துறைசார் தொழிலாளர்களுக்கு மிகப்பெரிய வரப்பிரசாதமாக சந்தர்ப்பங்கள் அமையும் என்பதில் ஐயமில்லை.

இம்முறைக்கான இந்த ஹோட்டல் ஷோ உள்ளக மற்றும் சர்வதேச பங்காளர்களை மையப்படுத்தி ஏற்பாடு செய்யப்பட்டது.

இவ்வாண்டுக்கான இக்கண்காட்சி தெற்காசியாவில் மட்டுமன்றி குறிப்பாக நாட்டின் சுற்றுலாத்துறை விருந்தோம்பல் பற்றி தெளிவாக சர்வதேசங்களுக்கு விளக்கியுள்ளது.

இடம்பெற்ற கண்காட்சியோடு இணைந்து மேலும் பல நிகழ்வுகளும் இடம்பெற்றன. விருந்தோம்பல், சகோதரத்துவம், வீதி உணவுகளுக்கான கண்காட்சி, போட்டி நிகழ்வுகள், விமானப் பயணிகளுக்கு இடையிலான போட்டி நிகழ்வு, பயிற்சிப்பட்டறைகள் எனப் பல நிகழ்வுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# பசிலின் மனு மீது விசாரணை பின்னடிக்கிறார் வனசுந்தர

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை பரிசீலனைக்கு உட்படுத்தும் குழுவில் பங்கேற்கமாட்டேன் என உயர்நீதிமன்ற நீதியரசர் ஈவா வனசுந்தர தெரிவித்துள்ளார்.

நிதி மோசடி விசாரணைப் பிரிவினால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தன்னை விடுவிக்குமாறு கோரி முன்னாள் அமைச்சர் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்துள்ளார்.

இக்குழுவிலேயே தான் பங்கேற்கமாட்டேன் என உயர்நீதிமன்ற நீதியரசர் தெரிவித்துள்ளார்.

# விசா மோசடி; யாழ். வாசி கைது

(கொழும்பு)

ஐக்கிய இராச்சிய நுழைவிசைவிற்காக விண்ணப்பித்திருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 30 வயதான நபர், முன்னர் வேறுபட்ட ஓர் அடையாளத்தில் விண்ணப்பித்திருந்து, பின் தனது தற்போதைய விண்ணப்பத்தில் மோசடியான தகவல்களை பயன்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஐக்கிய இராச்சிய நுழைவிசைவுகள் மற்றும் குடிவரவுப் பிரிவினரால் நுழைவிசைவு விண்ணப்பதாரி கொழும்பிலுள்ள மோசடி புலன்விசாரணை பணியக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இதே பெயருடன், வேறுபட்ட பிறந்த திகதி மற்றும் குடும்ப விபரங்களை உபயோகித்து ஐக்கிய இராச்சியத்துக்கான ஒரு நுழைவிசைவுக்கு அவர் விண்ணப்பித்த போது ஏற்கனவே அவருக்கு அது மறுக்கப்பட்டிருந்தது.

விண்ணப்பதாரிக்கு நுழைவிசைவு விண்ணப்பம் மறுக்கப்பட்டதுடன் அவர் ஐக்கிய இராச்சியத்துக்கு 10 வருட கால பிரயாணத்தடையையும் கொண்டிருப்பார்.

இதற்கு மேலதிகமாக தனது நடவடிக்கைகளுக்காக இலங்கை அதிகாரிகளினால் சட்ட நடவடிக்கைகளையும் அவர் எதிர்கொள்வார்.

இதேவேளை ஐக்கிய இராச்சியத்தின் குடிவரவு விதிகளின் துஷ்பிரயோகித்தலை நாங்கள் சகித்துக் கொள்ள மாட்டோம் என ஐக்கிய இராச்சிய நுழைவிசைவுகள் மற்றும் குடிவரவு செயற்பாடுகள் முகாமையாளர் டொனி வில்லியம்ஸ் தெரிவித்துள்ளார்.

துஷ்பிரயோகங்களை காணும் இடத்தில் அதனுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக நாங்கள் நடவடிக்கை எடுப்போம் என கொழும்பில் உள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களில் ஒளிவுமறைவின்றியும் மற்றும் நேர்மையாகவும் இருப்பதற்கு நாம் கடுமையாக அறிவுறுத்துகிறோம்.

சகல விண்ணப்பங்களும் அதன் சொந்த தகுதியின் அடிப்படையில் கவனத்தில் கொள்ளப்படுமென்பதுடன் முன்னர் நுழைவிசைவு மறுக்கப்பட்டமை புதிய நுழைவிசைவு விண்ணப்பமும் மறுக்கப்படும் என்பதை அவசியம் கருதவில்லை.

எவ்வாறெனினும் ஏமாற்றும் அல்லது மோசடி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படும் சந்தர்ப்பங்களில் விண்ணப்பதாரியின் விண்ணப்பத்தை நிராகரிப்பதுடன் இச்சம்பவத்தில் இடம்பெற்றதை போன்று பரந்ததான விளைவுகளும் இருக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து நுழைவிசைவு விண்ணப்பங்களும் மோசடி தொடர்பாக பயிற்றுவிக்கப்பட்ட அதிகாரிகளால் தீவிரமான பரிசோதனைக்கு உட்படுமென்பதுடன், இந்த ஏமாற்று மோசடி இந்த கிரமமான சோதனைகளின் போது கண்டுபிடிக்கப்பட்டதாக கொழும்பில் உள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.







# நேர்மையான இ-மெயில் சேவை!

**சைபர் சிம்மன்**

புதிதாக ஒரு இ-மெயில் சேவை அறிமுகமாகி இருக்கிறது. அதுவும் இலவசமில்லை: கட்டண மெயில் சேவை - இருந்தாலும் இந்தப் புதிய இ-மெயில் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். யாருக்குத் தெரியும், இணையத்தில் இலவசம் வேண்டாம், கட்டண சேவைக்கு நாங்கள் தயார் என பலரும் சொல்லும் காலம் வரலாம்!

கட்டண சேவை எனும்போது, இணைய சமநிலை விவாதத்தில் சொல்லப்படும் வாட்ஸ்அப், ஸ்கைப் போன்ற சேவைகளுக்கு கட்டணம் வசூலிக்கப்படலாம் என சொல்லப் படுவது போன்ற கட்டணம் அல்ல; இந்தக் கட்டணம் தனியுரிமை சார்ந் தது. அதன் மகத்துவம் புரிந்ததால் இணையவாசிகளே விரும்பி செலுத்தக்கூடியது.

சோவ்ரின்.நெற் (https://soverin.net/)

அது தான் புதிதாக அறிமுகமாகி இருக்கும் இ-மெயில் சேவை! ஜி-மெயில் இருக்க வேறு மெயில் சேவை எதற்கு என்று பலரும் நினைக்கலாம். ஆனால் ஜி-மெயிலும் சரி; இன்னும் பிற இலவச இ-மெயில் சேவைகளும் சரி, பயனாளிகளின் தனி உரி மையை மதிப்பதில்லை என்று சொல்லப்படுகிறது.

அவை பயனாளிகளின் ஒவ்வொரு மெயிலின் உள்ளடக்கத்தையும் கண்காணிக்கின்றன. இதன் அடிப்படையில் இன்பொக்சில் விளம் பரங்களை தோன்றச் செய்கின்றன. இந்த விளம்பரங்கள்தான் அவற்றின் வருவாய் ஆதாரம். விளம்பரம் தவிர வேறு விதங்களிலும் கூட மெயி லில் பரிமாறப்படும் தகவல்கள் பயன் படுத்தப்படும் அபாயம் இருப்பதாக சொல்கின்றனர்.

சராசரி இமெயில் பயனாளிகள் இதைப் பற்றி எல்லாம் பெரிதாக அலட்டிக்கொள்வதில்லை. என் மெயி லில் என்ன பெரிய இரகசியம் இருக்கப்போகிறது என அவர்கள் நினைத்துக்கொண்டிருக்கலாம். அல்லது நம்மால் என்ன செய்ய முடியும் என்ற எண்ணமாகவும் இருக்கலாம்.

ஆனால், ஸ்நோடன் வீசிய குண் டுக்குப் பிறகு இதைப்பற்றி எல்லாம் கவலைப்பட வேண்டியிருக்கிறது. அமெரிக்காவில் என்.எஸ்.ஏ. அமைப்பில் ஒப்பந்ததாரராகப் பணியாற்றிய ஸ்நோ டன், ஒவ்வொரு இ-மெயிலும் அரசு அமைப்பால் கண்காணிக்கப்படுகிறது என ஆதாரங் களோடு அம்பலமாக்கி திகைப்பை ஏற்படுத்தியது உங்களுக்கு நினைவு இருக்கலாம்.
ஸ்நோடன் விவகாரத்துக்குப் பிறகு இமெயில் பரிமாற்றத்தைச் சங்கேத மொழியில் அனுப்புவதன் அவசியம், அதாவது என்கிரிப்ட் செய்வது பற்றி எல்லாம் பெரிதாக பேசப்படுகிறது.

இப்படி என்கிரிப்ட் செய்து மெயில் அனுப்ப உதவும் இமெயில் சேவை-களும் இருக்கின்றன.

இந்த வரிசையில்தான் சோவ்ரின்.நெற் மெயில் சேவை அறிமுகமாகி இருக் கிறது. சோவ்ரின் சேவை பலவி தங் களில் ஆச்சர்யம் அளிக்கிறது. முதலில் அதன் பெயர்! சோவ்ரின் என்றால் இறையாண்மை என்று பொருள். சோவ்ரின் குறிப்பிடுவது பயனாளிகளின் இறையாண் மையை. அதாவது அவர்கள் மெயி லின் உள்ளடக் கத்தைப் பயனாளி மற்றும் அதைப் பெறுபவர் மட்டுமே அறிந்திருக்கும் உரிமை. இன்னொரு ஆச்சர்யம், சோவ்ரின், தனது சிறப்பை புரிய வைக்க இணைய யுகத்தில் பலரும் மறந்துவிட்ட தபால் சேவையுடன் தன்னை ஒப்பிடுவதுதான். தபால் சேவை பழங்காலத்து சங்கதியாக இருக்கலாம், ஆனால், தபாலைக் கொண்டு வருபவர் அதை ஒருபோதும் பிரித்து படித்ததில்லையே. இந்த அம்சத்தைத்தான் சோவ்ரின் சுட்டிக் காட்டி, இ-மெயில் விஷயத்திலும் பயனாளி கள் தங்கள் மெயிலின் உள்ளடக்கம் படிக்கப்படுவதை ஏன் அனுமதிக்க வேண்டும் என கேட்கிறது.

ஒவ்வொரு நாளும் உங்கள் இலவச மெயில்கள் கண்காணிக்கப்பட்டு, அதன் தகவல்கள் தரவுகளாக விளம்பர நிறுவனங்களுக்காக விற்கப்படுவதைச் சுட்டிக்காட்டி, இதற்குத் தீர்வாக தனிப் பட்ட இணைய முகவரியில் பிரத்யேக இ-மெயில் கணக்கு வசதியை முன்வைக்கிறது.

உங்கள் இ-மெயில் அனுபவத்தை நினைத்துப்பாருங்கள். ஜி-மெயிலில் மெயிலை அனுப்பும்போது அல்லது வந்த மெயிலை படிக்கும்போது மேல் பகுதியில் அல்லது பக்கவாட்டில் விளம்பரங்கள் தோன்றுவதைப் பார்த் திருக்கலாம். அவை எல்லாம் உங்கள் மெயில் வாசகத்தில் இருந்து எடுக்கப் பட்ட குறிச்சொற்களின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட விளம்பரங்கள். இதைத்தான் அந்தரங்க மீறல் என்று தனியுரிமைவாதிகள் வாதிடுகின்றார்கள். நிறுவனங்கள் தரப்பிலோ தனிநபர் அடை யாளத்தை அறியாமல் வெறும் வார்த்தைகளே ஸ்கான் செய்யப்படுவ தாக விளக்கம் அளிக்கப்படுகிறது.

இலவச மெயில்களில் இருக்கும் இந்த ஊடுருவல் இல்லாமல் நீங்கள் இ-மெயிலை அந்தரங்கத் தன்மையுடன் பயன்படுத்தலாம் என்கிறது சோவ்ரின் சேவை.

இதுவும் மற்ற மெயில் சேவை போலத் தான், ஆனால் முற்றிலும் அந்தரங்க மானது என்கிறது. இதில் உங்கள் இமெயில் பரிவர்த்தனைகளை நீங்களே கட்டுப்படுத்திக்கொள்ளலாம் என்றும் உறுதி அளிக்கிறது. இதைத்தான் நடு-வழியில் கடிதத்தைப் பிரித்துப் படிக் காத தபால்காரர் போல் உங்கள் மெயிலுக்குள் எட்டிப்பார்க்காத நேர்மையான சேவை என்று வர் ணித்துக்கொள்கிறது. தனியுரிமையை விரும்பி இதற்கு மாற விரும்பினால் எந்தச் சிக்கலும் இல்லை, ஏற் கெனவே பயன்படுத்திவரும் இ-மெ யில் செயலியிலேயே இதையும் பயன்படுத்தலாம் என்கிறது.

இதற்கான கட்டணம் ஆண்டுக்கு 29 டொலர். கூடுதலாக பத்து டெ-ாலர் எனில் ஒருவர் தனக்கான தனி இணையம் முகவரியை யும் பெற்றுக்கொள்ளலாம்.

இலவச இ-மெயிலில் இருந்து சுதந்திர மெயிலுக்கு மாறுங்கள் என்கிறது சோவ்ரின்.

நெதர்லாந்தைச் சேர்ந்த இணைய முனைவோர் இந்த மெயில் சேவையை நடத்தி வருகிறார்கள்.

உங்கள் தரவுகளை நீங்களே கட்டுப் படுத்தக் கூடியவராக இருக்க வேண் டும். உங்கள் இமெயில் முகவரிப் பெட்டி, உங்கள் வாழ்க்கைக்கான தரவுக ளின் ஆவணம் போன்றது. எனவே, உங்கள் இ-மெயில் பரிமாற்றத்தை உங்கள் பார்வைக்கானதாக மட்டுமே வைத்திருக்க வேண்டும் என்பதே இந்தச் சேவை முன்வைக்கும் கருத்தாக்கம்.

இணைய யுகத்தில் கட்டாயம் அறிந்து கொள்ள வேண்டிய கருத்தாக்கம்தான் இது.

இணையத்தில் இலவச சேவைக்கு பழ கிய உள்ளங்களுக்கு கட்டண மெயில் சேவை என்பது கசக்கவே செய்யும்.

ஆனால், நம்முடைய தகவல்கள் நம் கட்டுப்பாட்டில் இல்லாமல் இணைய நிறுவனங்களால் இஷ்டம்போல பயன் படுத்தப்படும் நிலையில், என்ன செய்வது? அதிலும் புகைப்படங்கள் முதல் எல்லா வகையான கோப்புகளை யும் கிளவுட் சேவைகளில் சேமித்து வைக்கும் யுகத்தில் நம்முடைய தகவல் கள் இணையவெளி முழுவதும் சிதறிக் கிடக்கின்றன. இந்தத் தகவல்களின் தனி யுரிமையை முக்கியமாக கருதுபவர்கள் அந்தத் தன்மையைக் காக்க கட்டணச் சேவையைப் பயன்படுத்த முன்வரலாம்.

சமூக வலைப்பின்னல் சேவையான ஃபேஸ்புக் உதாரணம் மூலம் தனியுரிமைக்கான தேவையை இன்னும் அழகாக புரிந்து கொள்ளலாம்.

பயனாளிகளின் உள்ளடக்கத்தைப் படித்து அதற்கேற்ற விளம்பரங்களை இடம்பெறச்செய்வதில் ஃபேஸ்புக் கூகுளையே மிஞ்சிவிட்டது என்று சொல்லலாம். சந்தேகம் இருந்தால் ஃபேஸ்புக் ரைம் லைனுக்குப் பக்கத்தில் தோன்றும் விளம்பரங்களைக் கொஞ்சம் கவனித்துப்பாருங்கள். எல்லாமே நண்பர்கள் வட்டத்தில் நீங்கள் பகிர்ந்து கொண்ட தகவல்களுடன் தொடர்புடையவைதான். உங்கள் பகிர்வுகளை நண்பர்கள் கவனிக்கிறார்களோ இல்லையோ ஃபேஸ்புக் சதா கவனித்துக்கொண்டே இருக்கிறது. இலவசத்துக்குக் கொடுக்கும் விலை என்று வைத்துக்கொள்ளுங்கள். நமது இணைய இருப்பு அதிகரித்துக்கொண்டே இருக்கும் நிலையில் இது பற்றி எல்லாம் நாம் யோசிப்பது நல்லது.

## இ-மெயில் திவால்

இணைய உலகில் உலாவும்போது இ-மெயில் திவால் எனும் பதத்தை நீங்கள் எப்போதாவது எதிர்கொண்டிருக்கலாம். அதென்ன இ-மெயில் திவால்? திவால் என்றவுடன் கடனாளியாவது பற்றி எல்லாம் நினைத்து மிரள வேண்டாம். இது இமெயில் நிர்வாகம் சார்ந்தது. இ-மெயில் பயன்பாடு அதிகரித்து அதன் சுமையும் கூடும்போது ஒரு கட்டத்தில் இ-மெயில்களைச் சரியாக நிர்வகிக்க முடியாமல் போகலாம். அப்போது இன்பொக்சில் படிக்கப்படாத, பதில் அளிக்கப்பட வேண்டிய மெயில்கள் எக்கச்சக்கமாகக் குவிந்து கிடக்கும். மெயில்களை படிக்கவும் நேரம் இருக்காது. அதுவே ஒரு வித குற்ற உணர்வை ஏற்படுத்தும் என்றால் இன்னொரு பக்கம் புதிதாக மெயில்கள் வந்து கொண்டிருக்கும். இப்படி ஒரு நிலையில் என்ன செய்வது? எல்லாவற்றையும் டெலிட் செய்யுங்கள்; மீண்டும் புதிதாக துவங்குங்கள்! இந்த முடிவு எடுத்தபிறகு, மன்னிக்கவும், இ-மெயில் சுமை தாங்க முடியாமல் பழைய மெயில்களை எல்லாம் டெலிட் செய்து விட்டேன், நீங்கள் முக்கிய மெயில் ஏதேனும் அனுப்பி பதிலுக்குக் காத்திருந்தால் தயவுசெய்து அதை மீண்டும் அனுப்பவும் என உங்கள் தொடர்பு வட்டத்தில் உள்ளவர்களுக்கு ஒரு மெயில் அனுப்ப வேண்டும். இவ்வாறு பழைய மெயில்களை நீக்கி புதிதாக துவக்குவதைத்தான் இ-மெயில் திவால் அறிவிப்பு என்கிறனர். இணைய வல்லுநரான பேராசிரியர் லோரன்ஸ் லெசிங் தான் இந்த யோசனையை முதலில் முன்வைத்து செயற்படுத்தியதாக கருதப்படுகிறது.

## எதிர்கால இ-மெயில்

நீங்கள் விரும்பினால் உங்களுக்கு நீங்களே இமெயில் அனுப்பிக்கொள்ளலாம் தெரியுமா? இதற்கான இணையத்தளம் தான் https://www.futureme.org/ இந்தத் தளத்தில் இமெயிலை டைப் செய்து உங்கள் முகவரிக்கே வரச்செய்யலாம். எதிர்காலத்தில் எப்போது இந்த மெயில் வரவேண்டும் என தேதி, மாதம் மற்றும் ஆண்டை குறிப்பிட்டால் போதுமானது. இதை உங்களுக்கான நினைவூட்டல் சேவையாக பயன்படுத்தலாம். வேறு சுவாரசியமான விதங்களிலும் பயன்படுத்தலாம். எல்லாம் உங்கள் கையில்தான் இருக்கிறது.

– மாணவி வித்தியா படுகொலை –

# பொலிஸாரின் செயற்பாடு கோரப்பட்டது அறிக்கை

புங்குடுதீவு மாணவி வித்தியா பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில், பொலிஸாரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அமைச்சு மட்ட அறிக்கை கோரப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ஜோன் அமரதுங்க, பொலிஸ் மா அதிபரிடம் இந்த அறிக்கையை கோரியுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்திருந்த நிலையில், நீதிமன்ற வளாகத்தில் குழப்பம் விளைவித்த நபர்களை தடுக்காத காரணத்தினால் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் எவ்வாறு நடந்து கொண்டுள்ளார்கள் என்பது குறித்து விசாரணை நடாத்தி அறிக்கை கோரப்பட்டுள்ளதாக அமைச்சர் ஜோன் அமரதுங்க கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

அறிக்கையில் பொலிஸார் குற்றமிழைத்துள்ளமை நிரூபிக்கப்பட்டால் தராதரம் பாராது அவர்கள் தண்டிக்கப்படுவர் என குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இடமாற்றம் செய்யப்பட்ட உயர் பொலிஸ் உத்தியோகத்தர்களில் சிலர் இன்னமும் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறவில்லை என கொழும்பு ஊடகம் தெரிவித்துள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர்களில் ஒருவரை கைது செய்த பொலிஸார் அவர்களை விடுவித்திருந்ததாகவும், பின்னர் வெள்ளவத்தையில் வைத்து கைது செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஒரேநாளிலேயே தேர்தல்

## அமைச்சர் கரு தெரிவிப்பு



உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நாடு முழுவதிலும் ஒரே நாளில் நடாத்தப்படும் என பொது நிர்வாக அமைச்சர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

தனித் தனியாக சில பிரிவுகளுக்கு மட்டும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடாத்தி தேர்தல் நிகழ்ச்சி நிரலை விகாரப் படுத்தப் போவதில்லை.

தொகுதிவாரி அடிப்படையிலேயே உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடாத்தப்படும்.

எதிர்வரும் காலங்களில் உள்ளூராட்சி மன்றங்களின் எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் மக்களுக்கும்சேவையாற்றத் தேவையான நிதி ஒதுக்கீடுகளும் அதிகாரங்களும் வழங்கப்படும்.

வரி செலுத்தும் மக்களுக்கு நியாயமான சேவை வழங்கப்பட வேண்டுமென்ற காரணத்தினால் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது என அமைச்சர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்ல பிரதேசத்தில் அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றங்களுக்கு பெக்கோ இயந்திரங்கள் வழங்கும் நிகழ்வின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# ஐ.தே.க.வின் எழுவர் விரைவில் எதிர்க்கட்சிக்கு

ஐக்கிய தேசியக் கட்சியின் ஏழு பேர் எதிர்க்கட்சியில் இணைந்து கொள்ள உள்ளதாக முன்னாள் அமைச்சர் டி.பி. ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களை எதிர்க்கட்சியில் இணைத்துக் கொள்வது தொடர்பில் ஏற்கனவே இரண்டு சுற்று பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் நடவடிக்கைகளினால் இந்த தரப்பு கடும் அதிருப்தி அடைந்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் பிரதமராக பதவி வகித்தால் நாட்டுக்கும் கட்சிக்கும் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படக் கூடும் என கருதுகின்றனர்.

தற்போதைய அரசாங்கத்தில் ராஜாங்க அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர் பதவிகளை வகிக்கும் சிலரும் இதில் உள்ளடங்குகின்றனர்.


குறித்த உறுப்பினர்களின் பாதுகாப்பை கருத்திற் கொண்டு இறுதி நேரம் வரையில் அவர்களது பெயர்கள் வெளியிடப்பட மாட்டாது.

எதிர்க்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தி வருகின்றனர்.

பேச்சுவார்த்தை வெற்றியளித்தால் எதிர்வரும் பொதுத் தேர்தலில் அவர்கள் எதிர்க்கட்சியின் சார்பில் போட்டியிடுவார்கள் என டி.பி. ஏக்கநாயக்க சிங்கள பத்திரிகையொன்றுக்கு அறிவித்துள்ளார்.

# சிங்கள சமூகத்தை இழிவுபடுத்திய அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ

## அபயதிஸ்ஸ தேரர் விசனம்



(கொழும்பு)

நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச சிங்கள சமூகத்தை இழிவுபடுத்தியுள்ளதாக பெப்பலியான சுனேத்ரா தேவி விஹாரையின் விஹாராதிபதி மெதகொட அபயதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

'இந்த நாடு சிங்களவர்களுடையது என எங்கு குறிப்பிடப்பட்டுள்ளது' என அண்மையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் நீதி அமைச்சர் விஜயதாச கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்த கூற்று வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது என அவர் தெரிவித்துள்ளார்.

விஜயதாச ராஜபக்ஷவின் இந்தக் கூற்றானது சிங்கள இன சமூகத்தை கடுமையாக இழிவுபடுத்தும் வகையிலானது.

இந்தக் கருத்தை நான் முழுமையாக நிராகரிக்கின்றேன்.

இவ்வாறான கருத்துக்களை சமூகத்தில் வெளியிடுவதனால் பிரிவினைவாத சக்திகள் மேலும் வலுப்பெறும்.

இது சிங்கள தேசம் என்பதனை வலியுறுத்த விரும்புகின்றேன்.

இது குறித்து விளக்கமளிக்க எந்தவொரு அலைவரிசை ஊடாகவும் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவுடன் விவாதம் நடாத்த தயார்.

இது சிங்களவர்களின் தேசமில்லை என கூறிய விஜயதாச ராஜபக்ச, சிங்கள மக்களிடம் பகிரங்க மன்னிப்புக் கோர வேணடுமென அபயதிஸ்ஸ தேரர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ளார்

# ஜனாதிபதிக்கு ஒத்துழைப்பு



நாட்டை முன்னோக்கி கொண்டுசெல்வதற்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்துள்ளார்.


ஜனாதிபதியின் நியமனம், முறையான ஒன்றெனவும் அவர் கூறினார்.

ஜனாதிபதி பெற்றுக்கொண்ட 62 இலட்சம் வாக்குகளும் தூய்மையானவை எனவும், எவரையும் அச்சுறுத்தி வாக்குகள் பெற்றுக்கொள்ளப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டை அராஜகத்தில் இருந்து மீட்பதற்கு ஜனாதிபதிக்கு ஒத்துழைப்பு வழங்குவது அனைத்து பிரஜைகளினதும் பொறுப்பு என சோமவன்ஸ அமரசிங்க மேலும் தெரிவித்துள்ளார். அண்மையில் ஜே.வி.பி.யிலிருந்து வெளியேறிய சோமவன்ச விரைவில் புதிய கட்சியொன்றை ஆரம்பிக்க உள்ளதாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# புலம்பெயர் தமிழ் அமைப்புகளுடன் இணைந்து செயற்படத் தயார்

## அரசாங்கம் அறிவிப்பு



(கொழும்பு)

புலம்பெயர் தமிழ் அமைப்புகளுடன் இணைந்து செயற்பட தாம் தயாராக இருப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக வெளிநாடுகளில் உள்ள முன்னணி புலம்பெயர் தமிழ் அமைப்புக்களை இணைத்துக்கொள்வதற்கும், அவர்களுடன் நெருக்கமாக செயற்படுவதற்கும் அரசாங்கம் தயாராக இருப்பதாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

ஜேர்மனுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமைச்சர் மங்கள தனது விஜயத்தின் இறுதியிலேயே இந்தக் கருத்தை முன்வைத்துள்ளார்.

இலங்கையுடன் பொருளாதார உறவுகளைப் பேணும் பிரதான ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான ஜேர்மனியுடன் மேலும் உறவுகளை கட்டியெழுப்பும் நோக்கில் விஜயம் செய்துள்ள மங்கள சமரவீர,

ஜேர்மன் வெளிவிவகார அமைச்சர் வோல்டர் ஸ்டீன்மிய உட்பட முக்கிய பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது புதிய அரசாங்கம் ஆட்சிபீடம் ஏறி 100 நாட்களுக்குள், நல்லிணக்கம், ஸ்திரமான பொருளாதார அபிவிருத்தி மற்றும் புதிய அரசியல் கலாசாரமொன்றை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன்போது இந்த நடவடிக்கைகளுக்கு புலம்பெயர் தமிழ் அமைப்புக்களையும் இணைத்துக் கொள்ளத் தயார் என்றும், இதற்கு தான் தலைமையிலான வெளிவிவகார அமைச்சு தலைமையேற்கும் என்றும் அமைச்சர் மங்கள குறிப்பிட்டுள்ளார்.

# ஐ.நா. அறிக்கைக்கு முன் குற்றவாளிகளுக்கு தண்டனை

## வலியுறுத்தும் மஹாநாமஹேவா

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் விசாரணை அறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்னதாக குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் பிரதிபா மஹாநாமஹேவா தெரிவித்துள்ளார்.

காணாமற் போதல்கள் மற்றும் கடத்தல்கள் தொடர்பில் குற்றவாளிகள் என நிருபிக்கப்பட்டவர்களுக்கு எதிராக குற்றவியல் சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கும் ஓர் பொறிமுறைமையை அரசாங்கம் முடுக்கிவிட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையினால் இலங்கை தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணை அறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்னதாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடத்தல்கள் காணாமற் போதலகள் தொடர்பில் நம்பகமான உள்ளக விசாரணைப் பொறிமுறைமையின் ஊடாக, குற்றவாளிகள் என நிருபிக்கப்பட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்க பாணியிலான உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினைப் போன்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென குறிப்பிட்டுள்ளார். சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

# குற்றவாளிகளுக்கு உச்சதண்டனை வழங்குமாறு

# ஆளுநரிடம் ஆசிரியர் சங்கம் மகஜர் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மகாவித்தியாலய மாணவி சிவலோகநாதன் வித்தியாவின் கொலையைக் கண்டித்தும், கொலையாளிக்கு உச்ச தண்டனை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையையும் முன் வைத்து கடந்த புதன்கிழமை யாழ்.மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக ஆயிரக்கணக்கானவர் களை ஒன்றுசேர்த்து இலங்கைத தமிழர் ஆசிரியர் சங்கம் முன்னெடுத்த அமைதிக் கோரிக்கை முன்வைப்புப் போராட்டத்தின் முடிவில் வடமாகாண ஆளுநரிடம் அனைத்து அமைப்புகள் சார்பாகவும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஜனாதிபதிக்கான மகஜரைக் கையளித்தது.

அதனை ஏற்றுக் கொண்ட வடமாகாண ஆளுநர் தான் இந்தக் கோரிக்கையை வரவேற்பதாகவும், இப்பாதகச் செயலைச் செய்தவர்களுக்கு உரிய தண்டனை வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும், நாளை ஜனாதிபதியைச் சந்திக்கும் போது வடமாகாணத்தின் முழுச்சமூகமும் முன்வைத்துள்ள கோரிக்கையை தான் எடுத்துக்கூறுவதாகவும் உறுதியளித்தார்.

அதேவேளை வடமாகாணத்தை அச்சுறுத்தி வருகின்ற போதைப்பொருள் பாவனையை முற்றாக ஒழிப்பதற்கும் தான் ஒத்துழைப்பதாகவும் கூறியுள்ளார். இதேவேளை மற்றுமொரு மகஜர் யாழ்.மாவட்ட செயலரிடம் கையளிக்கப்பட்டது.

முன்னதாக வடமாகாண முதலமைச்சருக்கான மகஜர் வடமாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானத்திடம் கையளிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# இரத்ததான நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறையில் நேற்றுமுன்தினம் 2 பெண்கள் உட்பட சுமார் 40 பேர் வரையானோர் இரத்ததானம் செய்துள்ளனர். வல்வெட்டித்துறை சந்தியில் அமைந்துள்ள நகரசபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் காலை இந்த இரத்ததான நிகழ்வு நடைபெற்றது.

வல்வை ஒன்றியத்தின் அனுசரணையில் பல அமைப்புக்கள் இந்த இரத்ததான நிகழ்வுக்கு ஒத்துழைப்பு நல்கியிருந்தனர். இங்கு நடைபெற்ற இரத்ததான முகாம் வல்வெட்டித்துறையில் 50 ஆவது இரத்ததான முகாம் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்து இளைஞர் பேரவையால் கற்றல் உபகரணங்கள் வழங்கல்



வவுனியா, ஸ்ரீராமபுரம் மாணவர்களுக்கு சர்வதேச இந்து இளைஞர் பேரவையால் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

கடந்த கால யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் இம் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை விருத்தி செய்யும் நோக்கில் அப் பகுதி மக்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க 67 மாணவர்களுக்கு பாடசாலை கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் தலைவர் சிவ.கஜேந்திரகுமார்

யுத்தம் கடந்த காலங்களில் எமக்கு அதிக வலிகளை தந்துள்ளது. அதிக இழப்புக்களை நாம் சந்தித்துள்ளோம். இந்த நிலமைகளுக்குள்ளும் எமது மாணவர்கள கல்வியில் சாதித்து வருகிறார்கள்.

அவர்கள் தொடர்ந்தும் சாதிக்க வேண்டும். ஒழுக்க முள்ள ஒரு மாணவ சமுதாயம் கல்விச் சிறப்புடன் எழுச்சி பெறுவதை ஒவ்வொரு பெற்றோரும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். அதற்காக சர்வதேச இந்து இளைஞர் பேரவையும் எவ்வேளையிலும் உதவத்தயாராக இருக்கின்றது. விரைவில் தரம் 5 இற்கு உட்பட்ட இப்பகுதி மாணவர்களுக்கு இலவச கல்வி நிலையம் ஒன்றும் அமைத்துத்தரப்படும் எனவும் தெரிவித்தார். இந் நிகழ்வில் பிரபல சட்டத்தரணிகளான வி.மணிவண்ணன், எஸ்.சோபிகன் மற்றும் சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# வாத்தியக் கலையகத்தின் 3 ஆம் ஆண்டு கலைவிழா



(யாழ்ப்பாணம்)

வயலின் இசைக் கலைஞர் சு.கோபிதாசின் சங்கமம் வாத்தியக் கலையகத்தின் மூன்றாம் ஆண்டு நிறைவுக் கலைவிழா நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங் கில் நடைபெற்றது.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் வரவேற்புரையை ரஞ்சுதமலர் நந்த குமார் ஆற்றினார்.

தெல்லிப்பளை துர்க்கை அம்மன் தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆசியுரை வழங்கினார்.

இசைத்துறைக்கான முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கணபதிப்பிள்ளை மதிப்பீட்டுரையாற்றினார். கிளிநொச்சி கல்வி வலய இசைத்துறை உதவிக் கல்விப் பணிப்பாளர் சிவசிவா நன்றியுரை நல்கினார்.

இருபத்தைந்திற்கும் மேற்பட்ட இளம் வயலின் இசைக் கலைஞர்கள் பங்குகொண்ட வயலின் இசை ஆற்றுகைகள் மேடையேற்றப்பட்டன. சிறப்பு நிகழ்வாக கொழும்பு கட்புல அரங்கக் கலைகளுக்கான பல்கலைக்கழக விரிவுரையாளர் சாஸ்திரபதி இசுறு ஹொந்தசிங்கவின் ஹிந்துஸ்தானிய வயலின் இசைக் கச்சேரியும் இடம்பெற்றது.இதற்கு தென்னிலங்கைக் கலைஞர் பிரசங்க கலாவேதி பாவர நவமின தபேலா இசை வழங் கினார்.

இசைக் கலைஞர்களை முன்னாள் உதவிக் கல்விப்பணிப்பாளர் கலாபூஷணம் எஸ்.கணபதிப்பிள்ளை, யாழ்.பல்கலைக்கழக இசைத்துறைத்தலைவர் கலாநிதி எஸ்.ஸ்ரீதர்ஷனன் ஆகியோர் சான்றிதழ்கள் வழங்கியும் நினைவுப் பரிசில் வழங்கியும் கௌரவித்தனர். (11,48)

## முரசின் இன்றைய பலன்

(26.05.2015 செவ்வாய்க்கிழமை)

மன்மத வருஷம் வைகாசி மாதம் 12 ஆம் திகதி.
சித்த யோகம். அட்டமி திதி.
மக நட்சத்திரம் காலை 06.49 வரை. பின் பூரம்.
இராகுகாலம் 02.52-04.22 வரை சுபநேரம் 10.22-11.52 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
அஷ்டமத்துச் சனி இருப்பதினால் கோரிய கடனைக் கொடுக்க விரும்பாமை.

**ரிஷபம்**
எதிரியின் தொல்லை நீங்க முறையிட விரும்புதல்.

**மிதுனம்**
பரீட்சைச் சித்தியினால் தொழில் முன்னேற்றமும் சம்பள ஏற்றமும் உண்டாதல்.

**கடகம்**
பெற்றோரின் தேகநலனை முன்னிட்டு பயணத்தைக் கைவிடல்.

**சிம்மம்**
கடனை அடைக்க சொத்தின் ஒருபகுதியை விற்க முயலுதல்.

**கன்னி**
ஈகோ வைக் கைவிட்டு குடும்பக்கவின் நிலையை ஏற்படுத்தல்.

**துலாம்**
தனித்துச் சென்றமையினால் திருடர் கைவரிசைக்கு ஆட்படுதல்.

**விருச்சிகம்**
நாட்டின் எல்லையைக் கடக்க முற்படுகையில் பிடிபடும் அபாயமுண்டாதல்.

**தனுசு**
பணியின் தேக்க நிலையைப் போக்க சகஊழியர்களைத் தட்டிக்கொடுத்தல்.

**மகரம்**
தம்பதியர் சகிதம் விழாக்களில் பங்கேற்றல்.

**கும்பம்**
நீதி மன்றத்தின் முடிவு சாதகமாக இருக்கும் நம்பிக்கை பிறத்தல்.

**மீனம்**
இழந்த ஆவணம் மீண்டும் கைக்கு வந்து சேருதல்.

# மும்பை அணியைக்கட்டுப்படுத்த கடைசி வரை முடியவில்லை

## தோல்வி குறித்து டோனி

(கொல்கத்தா)

எங்கள் அணியின் முதல் ஓவர் சிறப்பாக அமைந்தது. 2ஆவது ஓவர் மோசமாக அமைந்தது. கடைசி வரை அதில் இருந்து மீள இயலவில்லை. 2ஆவது ஓவரில் அதிரடியாக விளையாடிய மும்பை அணியை எங்களால் கடைசி வரை கட்டுப்படுத்த இயலவில்லை. இது மிகப்பெரிய சரிவை ஏற்படுத்திவிட்டது என சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக் கப்டன் டோனி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஆடுகளம் துடுப்பாட்ட வீரர்களுக்கு ஏற்ற வகையில் தான் இருந்தது. வெளிப்புறப் பகுதி வேகமாக இருந்தது. ஆனாலும் 180 ரன்னுக்கு மேல் என்பது சவாலே. மிகப்பெரிய ஸ்கோரை சேஸ் செய்யும் போது தொடக்கம் சிறப்பாக அமைவது முக்கியம். ஆனால் முதல் 6 ஓவரில் நாங்கள் 31 ரன்கள் மட்டுமே எடுத்தோம். இதனால் இதில் இருந்து அணியை உயர்த்துவது மிக கடினமே.

எங்கள் அணி வீரர்கள் முழு திறமையுடன் விளையாடவில்லை. அதிரடி வீரர் மக்கலம் இல்லாதது மிகப்பெரிய இழப்பே. பிளேஓப் சுற்றில் இருந்து அவர் ஆடவில்லை. இதுபோன்ற ஆடுகளங்களில் அவர் மிகவும் அபாரமாக ஆடக்கூடியவர்.

இந்த போட்டித்தொடர் முழுவதும் நாங்கள் சிறப்பாகவே ஆடினோம். வீரர்களின் கூட்டு முயற்சி நன்றாக இருந்தது. ஆனால் இறுதிப்போட்டியில் தான் சில வீரர்களின் திறமை வெளிப்படவில்லை.

ஒட்டுமொத்தமாக எங்கள் அணியின் செயல்பாடு நன்றாக இருந்தது. மேலும் முன்னேற்றம் இருந்தால் தான் கோப்பையை வெல்ல இயலும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். கோப்பையை வென்றது குறித்து மும்பை கப்டனும், ஆட்டநாயகன் விருது பெற்றவருமான ரோகித் சர்மா கூறும்போது, நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். எங்கள் அணியின் கதை முடிந்து விட்டதாக கருதினார்கள். ஆனால் நாங்கள் அதில் இருந்து மீண்டு சிறப்பாக ஆடி கோப்பையை வென்றுள்ளோம். இந்த வெற்றி மறக்க இயலாத ஒன்றாகும் என்றார்.

## மதிப்பு மிக்க வீரர் ரஸல்

(கொல்கத்தா)

ஐ.பி.எல். போட்டியில் இளம் வீரர்கள், சிறப்பாக விளையாடும் வீரர்கள் அடையாளம் கண்டு அவர்கள் கௌரவிக்கப் படுகிறார்கள். இதன் அடிப்படையில் இந்த சீசனில் பெப்சி எமர்ஜிங் வீரராக டில்லி அணியின் இளம் வீரர் ஸ்ரேயாஸ் அய்யர் தேர்வு செய்யப்பட்டார். அவர் 14 போட்டியில் விளையாடி 439 ரன்கள் குவித்தார். அதில் 4 அரை சதம் அடங்கும்.

மிகவும் மதிப்புமிக்க வீரராக கொல்கத்தா அணியைச் சேர்ந்த ரஸல் தேர்வு செய்யப்பட்டார். அவர் 13 போட்டிகளில் விளையாடி 14 விக்கெட் வீழ்த்தியதுடன் 35 பவுண்டரிகள், 19 சிக்சர்கள் அடித்துள்ளார். இதனால் 315 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்து இந்த விருதை பெற்றார். இவருக்கு அடுத்த படியாக சென்னை அணியின் பிராவோ 284 புள்ளிகள் பெற்று இரண்டாவது இடம் பெற்றார்.

சிறந்த பிடிக்கான விருதை சென்னை வீரர் பிராவோ தட்டிச் சென்றார்.

இந்த ஐ.பி.எல். தொடரில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரருக்கான ஒரேஞ்ச் தொப்பியை வென்றுள்ளார் டேவிட் வோர்னர். அதிக விக்கெட் எடுத்த வீரருக்கான ஊதா தொப்பியை வென்றுள்ளார் சென்னை அணியின் டுவைன் பிராவோ.






கட்டாரின் டோஹாவில் நடைபெற்ற அங்குரார்ப்பண ஆசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டிகளில் இலங்கைக்கு பதக்கங்களை வென்று கொடுத்த வீர, வீராங்கனைகளுக்கான கௌரவிப்பும் பணப் பரிசு வழங்கும் நிகழ்வும் கடந்த வியாழக்கிழமை விளையாட்டுத்துறை அமைச்சில் நடைபெற்றபோது....

## இந்தியா வருகிறது தென்னாபிரிக்கா

(கொல்கத்தா)


தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி எதிர் வரும் அக்ரோபர்-நவம்பர் மாதங்களில் இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 4 டெஸ்ட், 5 ஒரு நாள் போட்டி மற்றும் மூன்று 20 ஓவர் போட்டிகளில் விளையாடுகிறது. போட்டி நடக்கும் இடங்களை இந்திய கிரிக்கெட் சபை நேற்று முன்தினம் அறிவித்தது.

இதன்படி இந்தியா-தென்னாபிரிக்கா இடையிலான 4 டெஸ்ட் போட்டிகள் டில்லி, பெங்களூர், ஆமதாபாத், நாக்பூர் ஆகிய இடங்களில் நடைபெறுகிறது. ஒரு நாள் போட்டிக்கு சென்னை, கான்பூர், ராஜ்கோட், மும்பை மற்றும் மத்திய பிரதேசம் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இதில் மத்திய பிரதேசத்தில் இந்தூர், குவாலியர் ஆகிய இரு ்மைதானங்களில் ஒன்றில் போட்டி நடைபெறும்.

சென்னை சேப்பாக்கத்தில் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டி நடந்து 2 ஆண்டுகள் ஆகிவிட்டது. கடைசியாக 2012ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இந்தியா-பாகிஸ்தான் இடையிலான ஒரு நாள் போட்டி அங்கு நடந்தது. தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்று 20 ஓவர் போட்டிகள் கொல்கத்தா, மொகாலி, தர்மசாலாவில் நடைபெறும்.

## பிரெஞ் ஓப்பன்

### பெடரருக்கு முதல் வெற்றி



(பரிஸ்)

கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற போட்டிகளில் ஒன்றான பிரெஞ் ஓப்பன் டென்னிஸ் திருவிழா பரிஸ் நகரில் நேற்று முன்தினம் தொடங்கியது. இது களிமண் தரை ஆடுகளத்தில் நடக்கும் போட்டியாகும். ஆண்கள் ஒற்றையர் முதலாவது சுற்றில் 2ஆம் நிலை வீரர் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் 6-3, 6-3, 6-4 என்ற நேர் செட்டில் அலெக்சாண்ட்ரோ பல்லாவை (கொலம்பியா) தோற்கடித்து 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

வெற்றியை பெற பெடரருக்கு 1 மணி 49 நிமிடங்கள் தேவைப்பட்டது. மற்றொரு சுவிட்சர்லாந்து வீரர் வாவ்ரிங்கா 6-3, 6-2, 6-3 என்ற நேர் செட்டில் மார்சல் இலானை (துருக்கி) எளிதில் வீழ்த்தினார். பாவ்டிஸ்டா அகுத்(ஸ்பெயின்), பிலிப் கோல்ஸ்ரீபர் (ஜேர்மனி), மார்கோஸ் பாக்தாதிஸ் (சைப்ரஸ்) உள்ளிட்டோரும் தங்களது ஆட்டங்களில் வெற்றி கண்டனர்.

பெண்கள் ஒற்றையர் முதலாவது சுற்றில் 3ஆம் நிலை வீராங்கனை ருமேனியாவின் சிமோனா ஹலேப் 7-5, 6-4 என்ற நேர் செட்டில் எவ்ஜெனியா ரோ-டினாவை (ரஷ்யா) போராடி வென்றார். இந்த ஆண்டில் ஹாலெப் பதிவு செய்த 30ஆவது வெற்றி இதுவாகும். கடந்த ஆண்டு பிரெஞ் ஓப்பனில் இறுதிப்போட்டி வரை முன்னேறியவரான ஹாலெப் இதுவரை எந்த கிராண்ட்ஸ்லாமும் வென்றதில்லை.

இன்னொரு மோதலில் 9ஆம் நிலை வீராங்கனை ரஷ்யாவின் மகரோவா 6-4, 6-2 என்ற நேர் செட்டில் லூயிசா கிரிகோவை (அமெரிக்கா) வீழ்த்தினார். இதே போல் வளர்ந்து வரும் நட்சத்திரம் ஸ்பெயினின் கார்பின் முகுருஜா 6-2, 7-5 என்ற நேர் செட் கணக்கில் பெட்ரா மார்டிச்சை (குரோஷியா) தோற்கடித்தார்.

## செல்பியால் கடுப்பு

(பரிஸ்)

17ஆவது முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற உலகின் முன்னணி ரென்னிஸ் வீரரான ரோஜர் பெடரருக்கு, மைதானத்திற்குள் அத்துமீறி நுழைந்து செல்பி எடுக்க முயன்ற வாலிபர் ஒருவர் கடுப்பை ஏற்படுத்தியுள்ளார்.

பரபரப்பாக நடைபெற்று வரும் பிரெஞ்சு ஓப்பன் டென்னிஸ் போட்டியில் நேற்று முன்தினம் ரோஜர் பெடரர் - பல்லா இருவரும் மோதினர். இந்தப் போட்டி முடிந்ததும், இளம் ரசிகர் ஒருவர் பாதுகாப்பையெல்லாம் மீறி, பெடரர் அருகில் சென்றார். திடீரென அந்த ரசிகர் பெடரருடன் செல்பி எடுக்க முயன்றார். இது, போட்டி முடிந்த களைப்பில் இருந்த பெடரருக்கு கடுப்பை ஏற்படுத்தியது.

இதனால் பெடரர் கடும் அதிருப்தி அடைந்தார். இது குறித்து அவர் கூறுகையில், நடந்த சம்பவம் எனக்கு மகிழ்ச்சி அளிக்கவில்லை. பயிற்சியின்போதும் இப்படித்தான் நடந்தது. முதலில் ஒரு சிறுவன் வந்தான். பின் நான்கைந்து பேர் வந்து விட்டனர். நேற்று முன்தினம்



இரசிகர்கள் யாரும் எளிதில் நுழைய முடியாத பிரதான மைதானத்துக்குள் ஒருவர் அத்துமீறி வந்து விட்டார். அசம்பாவிதம் எதுவும் நடக்கவில்லை எனினும், நடந்தது எனக்கு திருப்தி அளிக்கவில்லை என்றார்.

இந்தச் சம்பவத்தால் கடும் விமர்சனத்துக்கு உள்ளான போட்டி ஏற்பாட்டாளர்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளை தற்போது மேலும் தீவிரப்படுத்தியுள்ளனர்.



எட்டாவது ஐ.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் கொல்கத்தாவில் நடைபெற்றது. இதில் சென்னை அணியை வீழ்த்தி கிண்ணம் வென்ற மும்பை அணி வீரர்கள் கிண்ணத்துடன் காட்சி கொடுப்பதைக் காணலாம்.

## வேக நடைப்போட்டியில் தங்கம் வென்ற மாணவன்



(வவுனியா)

வவுனியா மாவட்ட மெய்வல்லுநர் சம்மேளனம் நடாத்திய 1000 மீற்றர் வேக நடைப்போட்டியில் பங்குபற்றி கே.ரசிகரன் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

மேற்படி மாணவ்ன் நெடுங்குளம் கலைமகள் வித்தியாலயத்தில் கல்வி கற்பவராவர்.

# கிரிக்கெட் இறுதிப் போட்டி இளவாலை கலைஒளி சம்பியன்



(யாழ்ப்பாணம்)

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் யாழ்.மாவட்ட ரீதியாக நடாத்திய அணிக்கு 08 பந்து பரிமாற்றங்களுடன் 9 வீரர்களை கொண்ட கிரிக்கெட் சுற்று போட்டியின் இறுதியாட்டத்தில் 44 ஓட்டங்களால் இணுவில் கலைஒளி விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று சம்பியனானது. மேற்படி போட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை 4.00 மணிக்கு மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் ஆரம்பமானது.

அளவெட்டி ஞானவைரவர் அணியை எதிர்த்து இணுவில் கலை ஒளி அணி மோதிய இந்த இறுதியாட்டத்தில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற ஞான வைரவர் அணி முதலில் களத் தடுப்பைத் தெரிவு செய்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய இணுவில் கலை ஒளி அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடி 8 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றனர்.

அணியின் சார்பாக முதலில் துடுப்பெடுத்தாடிய மோகன்ராஜ் 24 ஓட்டங்களையும் கோகுல்ராஜ் 15 ஓட்டங்களையும் சனந்தன் ஆட்டமிழக்காமல் 19 ஓட்டங்களையும் பெற்றனர்.

அளவெட்டி ஞான வைரவர் அணிசார்பான பந்துவீச்சில் சயந்தன் 2 விக்கெட்டுக்களையும் கிரிஷாந்த், சுகந்தன்,கஜமுகன் ஆகியோர் தலா ஒருவிக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 104 என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய ஞானவைரவர் அணி பிரதீசின் பந்து வீச்சை எதிர் கொள்ளமுடியாமல் சகல விக்கெட்டுக்களையும் இழந்த நிலையில் 59 ஓட்டங்களையே பெற்று தோல்வியை தழுவ 44 ஓட்டங்களால் இணுவில் கலை ஒளி வெற்றியை தனதாக்கியது.

அளவெட்டி அணிக்காக கஜமுகன் 18 ஓட்டங்களை பெற்றார்.

பந்துவீச்சில் கலை ஒளி அணியில் பிரதீஸ் 3 விக்கெட்டுகளையும் சனந்தன் 2 விக்கெட்டுகளையும் தீபன் வாமணன்,கோகுல்ராஜ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இறுதியாக இடம்பெற்ற பரிசளிப்பு நிகழ்வில் ஆட்ட நாயகனாக இணுவில் கலை ஒளி அணியின் பிரதீஸ் தெரிவு செய்யப்பட்டார், தொடர் ஆட்ட நாயகனாக ஞான வைரவர் அணியின் சுகந்தன் தெரிவுசெய்யபட்டார். மற்றும் முதலிடம் பெற்ற இணுவில் கலைஒளி அணிக்கு 10,000 ரூபா பணப் பரிசிலும் இரண்டாம் இடம்பெற்ற அளவெட்டி ஞானவைரவர் அணிக்கு 5000 ரூபா பணப் பரிசிலும் வெற்றிகிண்ணமும் வழங்கப்பட்டது.

விளையாட்டுத்துறை பொறுப்பாளர் நவராஜ தலைமையில் ஆரம்பமான நிகழ்வுக்கு மண்ணின் மைந்தர் பொறியியலாளர நர்த்தனன் , தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையின் மாவட்ட முகாமையாளர் த.பிரதீபன், மெய்கண்டான் மகாவித்தியாலய அதிபர் இரங்கநாதன் ஆகியோர் விருந்தினர்களாக வருகைதந்ததுடன் இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய மாணவர்கள் மேலைத்தேய வாத்திய அணி வகுப்பு மரியாதையை வழங்கியிருந்தனர்.

(48)

## லீக் முறைச்சுற்றுப் போட்டி தீருவில் இளைஞர் வெற்றி

வல்வை தீருவில் இளைஞர் விளையாட்டுக்கழகம் நடாத்தும் வல்வைக்கு உட்பட்ட கழகங்களுக்கிடையிலான 9 நபர் கொண்ட லீக் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் தீருவில் இளைஞர் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுள்ளது.

இந்த ஆட்டத்தில் வல்வை உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வை தீருவில் இளைஞர் விளையாட்டுக்கழகம் மோதியது. இதில் 1:0 என்ற கோல் கணக்கில் தீருவில் இளைஞர் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.



2 ஆவதாக நடைபெற்ற ஆடடத்தில் வல்வை றெயின் போ விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து இளங்கதிர் விளையாட்டுக்கழகம் மோதியது. இந்த ஆட்டம் முடிவடையும் நேரம் வரை இரு அணிகளும் கோல்களை பெறாத நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தன.

இப்போட்டிகள் அனைத்தும் வல்வை தீருவில் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

# விளையாட்டுத்துறையில் பல விடயங்கள் திருத்தப்படவேண்டி உள்ளது


## அர்ஜுன ரணதுங்க தெரிவிப்பு

(கொழும்பு)

விளையாட்டுத்துறையில் இன்னும் பல விடயங்கள் திருத்தப்படவேண்டியுள்ளதாக உலகக் கிண்ணத்தை வென்ற இலங்கை அணிக்கு தலைமை தாங்கிய அர்ஜுன ரணதுங்க குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய சூழலில் விளையாட்டுத்துறை நல்லாட்சியை நோக்கி நகர்கின்றதா என்பது குறித்து தான் கேள்விக்குறியுடன் இருப்பதாக அர்ஜுன மேலும் கூறியதாக அவரது ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

""கடந்த காலத்தில் எமது நாட்டின் விளையாட்டுத்துறை படுமோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தது. நாடு முழுவதும் விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்பட்டன. ஆனால், அம் மைதானங்களின் மூலம் வீரர்கள் உருவாக்கப்படவில்லை.



மாறாக அவற்றில் "உறிஞ்சல்களும் ஊழல்களுமே அதிகமாக இடம்பெற்றன. இவற்றை நினைத்து இன்றும் விளையாட்டுத்துறை நல்லாட்சியை நோக்கித்தான் செல்கின்றதா என என்னை கலக்கம் அடையச் செய்கின்றது.

உதாரணத்திற்கு கிரிக்கெட் விளையாட்டை எடுத்துக்கொண்டால் அங்கு இடைக்கால நிர்வாக சபை நியமிக்கப்பட்டுள்ளது. இடைக்கால நிர்வாக சபை நலம்தான். ஆனால் அதற்கு பொருத்தமானவர்கள் நியமிக்கப்படவேண்டும்.

கிரிக்கெட் நிர்வாகத்தில் நிதி சார்ந்த பிரச்சினைகள் பல இருப்பதாக விளையாட்டுத்துறை அமைச்சர் குற்றஞ்சாட்டினார்.அதனால்தான் இடைக்கால நிர்வாக சபை நியமிக்கப்பட்டது.

ஆனால் கடந்த கால நிர்வாகத்தில் பொருளாளராக இருந்தவரையும் இடைக்கால நிர்வாகத்தில் நியமித்திருப்பது மிகப் பெரிய தவறாகும். ஏனெனில் களவுகள் இடம்பெறும்போது அவற்றுக்கு பொருளாளர்தான் பதில்கூறவேண்டும்.

இதன் பிரகாரம் பார்க்கும் இதனைத் தவறாகவே நான் காண்கின்றேன் என அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

மேலும், "இடைக்கால நிர்வாக சபை நியமிக்கப்படுவதால் சர்வதேச கிரிக்கெட் பேரவை யிடமிருந்து பிரச்சினை எழுவதற்கு வாய்ப்புள்ளது.

கிரிக்கெட் அரசியலாகி விட்டது என நாங்கள் கடந்த காலங்களில் கூறியிருந்தோம்.

இப்போது எமது அரசினாலேயே இடைக்கால நிர்வாக சபை நியமிக்கப்பட்டுள்ளதால் எங்கள் மீதும் ஆட்காட்டி விரல் நீட்டப்படாலம்"" என்றார்.

"கிரிக்கெட்டில் சூறையாடும் முதலாளிகள் இருப்பதை நான் அறிவேன். இவர்கள் கிரிக்கெட் நிர்வாகிகள் தேர்தல்க ளின்போது காசுக்கு வாக்குகளை வாங்குபவர்கள்.

இதன் காரணமாக இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்திற்கு நேர்மையானவர்களை நியமிக்கமுடியும் என என்னால் நம்பமுடியாமலுள்ளது என அர்ஜுன ரணதுங்க மேலும் தெரிவித்துள்ளார்.




8 ஆவது ஐ.பி.எல் கிண்ணத்தை கைப்பற்றிய மும்பை இந்தியன்ஸ் அணி வீரர்கள் கிண்ணத்துடன் வெற்றிக் களிப்பில்



# உணர்ச்சியை விடுத்து யதார்த்தத்தை அறிய வேண்டும்!

—— புருஜோத்தமன் தங்கமயில் கட்டுரையிலிருந்து.



1990களின் இறுதியிலும், 2000களின் ஆரம்பத்திலும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதப் போராட்ட ரீதியில் பெற்று வந்த வெற்றிகள் இலங்கை அரசினை மட்டுமல்ல, பிராந்திய வல்லரசான இந்தியாவையும் பெருமளவு அச்சுறுத்தின.

அந்த அச்சுறுத்தலின் அளவினை அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளும் உணர்ந்து கொண்டன. அதுவும், விடுதலைப் புலிகளை தோற்கடிப்பதற்கான நிகழ்ச்சி நிரலினை வேகம் பெற வைத்தன. விடுதலைப் புலிகளை 2002இல் போர் நிறுத்தத்துக்கு இணங்க வைத்தது.

போர் நிறுத்தமும், தொடர்ந்து வந்த சமாதானப் பேச்சுவார்த்தைக் காலமும் இராணுவ ரீதியில் விடுதலைப் புலிகளை பலமிழக்கச் செய்வதற்கான கால இடைவெளியாக கையாளப்பட்டது. அதனை விடுதலைப் புலிகளோ, அவர்களின் ஆதரவு சக்திகளோ உணராமல் இல்லை. ஆனாலும், தவிர்க்க முடியாத நிலையில் சிக்கிக் கொண்டார்கள்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது செய்து கொள்ளப் பட்ட ஒப்பந்தங்களின் போக்கில் இணக்கப்பாட்டுக்கு விடுதலைப் புலிகள் வந்திருந்தாலும் கூட, அவர்கள் வேறொரு வடிவில் போராட்டக் களத்திலிருந்து அகற்றப்பட்டிருப்பார்கள் என்பது வேறுவிடயம்.

ஆனால், அதற்கான வாய்ப்பை வழங்காமல் மீண்டும் ஆயுதப் போராட்டம் எனும் விடயத்தினை தெரிவு செய்ததன் மூலம், குறுகிய காலத்துக்குள் விடுதலைப் புலிகள் தமிழ்ப் போராட்ட அரங்கிலிருந்து முற்றுமுழுதாக அகற்றப்பட்டார்கள்.

குறிப்பாக, 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை வெற்றிபெற வைக்க வேண்டும் என்று இந்தியாவும், மேற்கு நாடுகளும் விரும்பின. ஆனால், அதற்கான ஒத்துழைப்பை வழங்குவதற்கு விடுதலைப் புலிகள் இணங்கவில்லை.

மாறாக, தமிழ் மக்கள் வாக்களிப்பைப் புறக்கணிக்க வேண்டும் என்கிற கோரிக்கை, சீனா சார்பு மகிந்த ராஜபக்ஷவை ஆட்சிபீட மேற்றியது. தங்களினால் ரசிக்க முடியாத ஒருவர் ஆட்சிபீடமேற்றப் பட்டது இந்தியாவுக்கும், மேற்குநாடுகளுக்கும் இன்னும் இன்னும் எரிச்சலை ஊட்டின. அது, தாம் ரசிக்காத மகிந்த ராஜபக்ஷவுக்கே பெரும் ஒத்துழைப்புக்களை வழங்கி விடுதலைப் புலிகளை விரைவாக அழிக்க வைத்தது.

அமெரிக்கா உள்ளிட்ட மேற்குநாடுகளுக்கு எதிரான பூகோள அரசியல் சக்திகள் (சீனா சார்பு என்றும் கொள்ளலாம்) இலங்கை அரசியலில் வெளிப்படையாக அல்லது நேரடியாக தலையிடுவது போல எப்போதுமே காட்டிக்கொண்டது இல்லை.

ஆனால், அவர்களின் தலையீடு என்பது தொடர்ச்சியாக இருந்து வந்திருக்கின்றது. இலங்கையில் எந்த அரசாங்கம் ஆட்சி பீடமேறினாலும் மறைமுகமாக அதற்கு ஒத்துழைத்து வந்திருக்கின்றன. 2005 தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுக்குப் பதில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்றிருந்தாலும் கூட, சீனா இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கியிருக்கும்.

ஆனால், அந்த ஆதிக்கத்தில் அளவு குறைந்திருக்கும். இந்தியப் பிராந்தியத்தில் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குநாடுகள் வெளிப்படுத்தும் மேலாதிக்கம் என்பது காலனித்துவ காலத்து மனநிலை. அந்தக் கையாள்கையே சில நேரங்களில் அவர்களை பூகோள அரசியலில் தோற்றுப்போகவும் வைத்திருக்கின்றது. இன்றைய சூழ்நிலைக்கு வந்தால் இலங்கையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் வரையிலான காலம் வரை தமிழ் மக்களின் தேவை என்பது இந்தியா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளுக்கு அவசியமாக இருந்தது.

ஆனால், ஆட்சி மாற்றத்தின் பின்னரான மனநிலை என்பது தமிழ் மக்களை அடக்கி வைத்துவிட்டு தனக்குச் சார்பான ஆட்சியாளரை தாங்கிப் பிடிக்க வைத்திருக்கின்றது. இப்போது, இந்தியா மற்றும் மேற்கு நாடுகளுக்கு மிச்சமிருக்கும் தேவை, பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை உருவாக்கிவிடுவது. அதற்கான ஒத்துழைப்பையும் தமிழ்த் தரப்பிடமிருந்து பெற்றுக்கொள்ளும்.

பேரழிவுகளிலிருந்து மீட்சி குறித்து சிந்திக்கத் தலைப்பட்டிருக்கும் தமிழ் மக்கள் பூகோள அரசியலின் போக்கினை உணர வேண்டும்.

தமிழ் மக்களிடம் காலம் காலமாக யதார்த்த சூழ்நிலைகளைப் புரிந்து கொண்டு செயலாற்றுவதற்கான கால அவகாசம் இருந்ததில்லை. ஏனெனில், அதனை முந்திக்கொண்டு உணர்ச்சி மேலிடுகை முடிவுகளை எடுத்துவிடும். உணர்ச்சி மேலிடுகைக்கு பதிலாக யதார்த்த களத்தினை முன்னிறுத்தி இயங்க வேண்டும். அதுவே, வெற்றிகரமான புள்ளியை நோக்கி நகர்த்தும்!

---

# “தொடைகளுக்கு நடுவே ஒளிந்திருக்கும் நரகம்” - 3000 ஆண்டுகால கறுப்பின அடிமை வரலாறு!

“இந்த ஆளுக்கு என்னதான் வேணுமாம்?” ஓய்வு நேரம் ஒன்றில், போட்டோகிராபரின் விசிட்டிங் கார்டை காட்டி ஹல்வுவிடம் கேட்டேன்.

“அதை அவரிடமே கேள். போனைப் போடு”

“மைக் கோஸ்.” அவர்தான் அந்த அன்புக்குரிய போட்டோகிராபர். அன்று, மைக்கின் ஸ்டுடியோவுக்குள் நுழைந்தபோது, நான் வேறொரு உலகத்தில் விழுந்ததுபோல் உணர்ந்தேன். சுவர் முழுக்க அழகழகான பெண்கள் தொங்கிக் கொண்டிருந்தார்கள்.

மைக் என்னிடம், “யூ ஹாவ் தெ மோஸ்ட் பியூட்டி.்.புல் ப்ரொ.்.பைல். நான் உன்னை போட்டோ எடுக்க விரும்புகிறேன்” என்றார்.

“இதைப் போலவா? இந்தப் பெண்களைப் போலவா?”

“ஆமாம்”

எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

“எவ்வளவு பணம் தருவீங்கள்?”

“ஹ.. ஹ..! வா, இப்படி வந்து நில்” மைக், தன் கமெராவை கையில் எடுத்தார்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு... ஸ்பொன்ச், பிரஷ், க்ரீம், பெயின்ட், பவுடர். எல்லாம் என் முகத்தில் விளையாட ஆரம்பித்தன. எனக்கு மேக்கப் போட்ட பெண், சற்று பின் நகர்ந்து சென்று என்னைப் பார்த்தாள்.

“ஓகே. போய் கண்ணாடியைப் பார்”

“வாவ்”! நானா இது?” பட்டுப்போன்ற மேனி, பளபளக்கும் கன்னம்... அங்கிருந்த வெளிச்சத்தில் நான் தங்கம்போல மின்னினேன்.

“ஓகே வாரிஸ். லிப்ஸை இப்படி வைச்சுக்கொள், இங்க பார்” க்ளிக், க்ளிக், க்ளிக்...” - மைக்கின் விரல்கள் க்ளிக்கிக்கொண்டே இருந்தன.

வேலைக்கார வாரிஸ், இப்படியாகத்தான் ஒரு மொடல் அழகியாக மாறினாள்.

ஒரு மொடலாக, நான் வேகவேகமாக வளர்ந்தேன். பாரிஸ், மிலன், நியூயோர்க் என்று பறந்தேன். பணம், மழைபோல் கொட்ட ஆரம்பித்தது. மிகப் பெரிய கமர்ஷியல் விளம்பரங்கள் தேடி வந்தன. “ரெவ்லான்” விளம்பரத்தில் சின்டி, கிராவ்.்.போர்ட், கிளாடியா ஸ்கி.்.பர், லோரன் ஹுட்டன் ஆகியோருடன் காட்சியளித்தேன்.

எல்லீ, கிளாமர், இத்தாலியன் வாக்ய் மற்றும் பிரிட்டிஷ், அமெரிக்கன் வாக்ய் போன்ற உலகின் முன்னணி .்.பாஷன் பத்திரிகைகளில் இடம் பிடித்தேன். ஜேம்ஸ்பொண்ட் படத்தில் கூட நடித்தேன்.

ஆனால், வெற்றிகரமான இந்த வாழ்க்கைப் பயணத்தில், என் பழைய தழும்புகள் எதுவும் மறையவில்லை. எல்லாம் அப்படியே இருந்தன. அந்த சின்னஞ்சிறிய துவாரம் வழியே ஒரு சொட்டு யூரின் மட்டுமே வெளியேறியது. ஒவ்வொரு முறை சிறுநீர் கழிக்கும்போதும் எனக்கு பத்துப் பதினைத்து நிமிடங்கள் தேவைப்பட்டது.

மாதவிடாய் நேரம் என்றால், இந்தக் கொடுமை பலமடங்கு வீரியத்தோடு இருக்கும். படுக்கைக்குச் செல்லும் ஒவ்வொரு இரவும், “தூக்கத்தின்போதே செத்துவிட்டால் நல்லது” என்று நினைப்பேன்.

முன்பு ஒருநாள் சித்தப்பா வீட்டில் இருந்தபோதே, மாதவிடாய் நேரத்தில் மயங்கி விழுந்துவிட்டேன். சித்திதான் என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றாள். ஆனால், உண்மைக் காரணம் என்னவென்பதை நான் டொக்டரிடம் சொல்லவில்லை.

“உதிரப்போக்கை நிறுத்தவேணும் என்றால், கர்ப்பத்தடை மாத்திரை ஒன்றுதான் தீர்வு. வேறு வழியில்லை” என்றார் டொக்டர்.

எல்லா டொக்டர்களும் இதையேதான் சொன்னார்கள்.

இந்த மாத்திரைகள் எனக்குள் வேறு மாதிரியான விளைவுகளை உண்டு பண்ணியது.

மீண்டும் வலி.

“சித்தி! விசேட மருத்துவரைப் பார்த்தால் நல்லா இருக்கும்”




“பார்த்து? என்னவென்று அவரிடம் சொல்வாய்?”

சித்தியின் கேள்விக்கு என்ன் அர்த்தம் என்பது தெரியும்.

“ஆபிரிக்க பழங்குடிப் பெண், தன் அந்தரங்கத்தை வெள்ளைக்காரனிடம் காட்டுவதா? எவ்வளவு பெரிய குற்றம்!”

இப்போது நான் சொந்தக் காலில் நிற்கிறேன். வை.எம்.சி.ஏ தோழியை அழைத்துக்கொண்டு டொக்டர் “மக்ரே”வை சந்தித்தேன்.

“டொக்டர், நான் சோமாலியாவில் இருந்து வருகிறேன். எனக்கு...” வாக்கியத்தை முடிக்கவில்லை.

“இட்ஸ் ஓகே. சரி பண்ணிவிடலாம். போய் உடையை மாத்திக்கொண்டு வா” என்றார்.

நேர்ஸை கூப்பிட்டு, “இங்கே, சோமாலி தெரிஞ்ச யாரையாவது கூட்டி வாங்க.” என்றார்.

வந்தது ஒரு ஆம்பிளை.

அவன் முகத்தில் மகிழ்ச்சியே இல்லை.

“உண்மையிலேயே உனக்கு விருப்பம் என்றால், இவர்கள் திறந்து விடுவார்கள். ஆனால், இது நம்

# சுவாசிக்க சிரமப்படும் ஒரு குழந்தை நமக்கு தெரிந்திருக்க வேண்டியவை

**மருத்துவர் ந.ஸ்ரீசரவணபவானந்தன்**
**குழந்தை நல வைத்திய நிபுணர்**
**யாழ்.போதனா வைத்தியசாலை.**

சாதாரணமாக நாம் சுவாசிக்கும் போது யாராவது அதை உணருகிறோமா? இல்லை. ஆனால் பல்வேறு நோய் நிலைமைகளில், தேவையான அளவு பிராணவாயுவை (ஓட்சிசனை) எமது சுவாசப்பை யானது மூளை உட்பட உடலுறுப் புகளுக்கு வழங்க முடியாவிடின் சுவாச விகிதம் அதிகரிப்பதுடன் மூச்சு விடுவதிலும் சிரமம் ஏற்படுகின்றது. சுவாசிப்பதில் சிரமம் ஏற்படுவதற்கு பலவிதமான காரணங்கள் உள்ளன.

### சுவாசத் தொகுதியுடன் தொடர்பான காரணங்கள்

நாசி தொடக்கம் சுவாசப்பையிலுள்ள குழாய்கள் வரை காற்று போய் வருவதில் தடைகள் ஏற்படின் சுவாசிப்பதில் சிரமம் ஏற்படும். உதாரணமாக அதிகளவு சீதம் (Mucons) சுவாசக் குழாய்களில் படிந்திருத்தல், சுவாசக் குழாய்களின் உட்பக்கம் வீங்கியிருத்தல் அல்லது சுவாகச் குழாய்கள் சுருங்குதல் இந்த நிலைமைகள் மிகப் பொதுவான அஸ்துமா (Astgma) வருத்தம் உள்ளவர்களில் காணப்படும்.

அதே போல் குழந்தைகளின் சுவாசக் குழாய் களில் கிருமித் தொற்றுக்கள் ஏற்படும் போதும் ஏற்படலாம். இதை விட, பிற பொருட்கள் (Doreith body) சுவாசப்பாதை அடைப்பினும் மூச்சு விடுவதில் கஷ்டம் ஏற்படலாம். குறிப்பாக 1 - 3 வயதுக்குட்பட்ட குழந்தைகள் விளையாட்டுப் பொருட்களிலுள்ள சிறு பகுதிகளை விழுங்கினாலும் அல்லது கடலை, பருப்பு போன்ற உணவுத் துணிக்கைகள் புரக்கேறினாலும் திடீரென மூச்சு விடுவதில் கஷ்டமும் இருமலும் ஏற்படலாம்.


பிறப்பின் போதே ஏற்படும் சில குறைபாடுக-ளால் சுவாசப் பாதையினூடாக காற்று உட்சென்று வருவதில் தடைகள் ஏற்பட்டால் பிறப்பிலிருந்தே மூச்சு விடுவதில் சிரமம் காணப்படுவதுடன் அசாதாரண சத்தமும் சுவாசிக்கும் போது கேட்கலாம்.

சுவாசப்பையினுள்ளே உள்ள காற்றறைகளில் கிருமித்தொற்று (Pneumonaia) கடுமையாக ஏற்பட்டாலும் சுவாசிப்பதில் சிரமம் ஏற்படும்.

நாம் சுவாசிப்பதற்கு தேவையான நெஞ்சறை தசைகள் என்பவற்றில் குறைபாடு ஏற்படினும் மூச்சுவிட கஷ்டம் ஏற்படலாம்.

### குருதிச் சுற்றோட்டத் தொகுதியுடன் சார்பான காரணங்கள்

சுவாசிப்பதில் கஷ்டம், தனியே சுவாசத் தொகு தியில் ஏற்படும் பிரச்சினைகளால் மட்டுமன்றி இதயத்திலும் அதனோடு தொடர் பான இரத்தக் குழாய்களிலும் பிறப்பின் போதே ஏற்படும் குறை பாடுகளாலும் ஏற்படலாம்.




ஏனெனில் இரு தொகுதிகளும் ஓட்சிசனை உடலுறுப்புகளுக்கு வழங்குவதற்கும். காபனீ ரோட்சைட்டை அகற்றுவதற்கும் இன்றியமையாதவையாகும்.

அதே போல் சிறுவர்களில் ஏற்படும் மூட்டுவாதக் காய்ச்சலால் இருதய வால்வுகள் பாதிப்படைந்தாலும், சிறுநீர்த் தொகுதி நோய்களால் இரத்த அழுத்தம் அதிகரிப் பினும் சுவாசிப்பதில் சிரமம் ஏற்படலாம்.

மேற்குறிப்பிட்ட இரு தொகுதிகளிலும் ஏற்படும் பாதிப்புகளால் மட்டுமின்றி சலரோக கடுமையான வயிற்றோட்டத்தால் நீரிழிப்பு ஏற்பட்டாலும் சலரோக வருத்தம் கடுமையாயினும் அல்லது சிறுநீரகத் தொழிற்பாடு கடுமையாகப் பாதிப்படையினும் சுவாச விகிதம் அதிகரித்து சுவாசிப்பதில் சிரமம் ஏற்படலாம்.

### இனி சுவாசிப்பதில் சிரமம் என்பதை ஏவ்வாறு அறிந்து கொள்ளலாம் என்பதை பார்ப்போம்:

ஒரு நிமிடத்தில் சுவாசிக்கும் வீதம் அதிகரித்தல் குழந்தைகளில் அவர்களின் வயதிற்கேற்ப சுவாச

| வயது | சுவாச விகிதம் (நிமிடத்திற்கு) |
|---|---|
| பிறந்த குழந்தைகளில் | 40 - 60 |
| 1 மாதம் தொடக்கம் 1 வருடம் வரை | 30 - 40 |
| 1 வருடம் தொடக்கம் 2 வருடங்கள் | 25 - 35 |
| 2 வருடங்கள் தொடக்கம் 5 வருடங்கள் | 25 - 30 |
| 5 வருடங்கள் தொடக்கம் 12 வருடங்கள் | 20 - 25 |

விகிதம் மாறுபடும்.

மேற்குறிப்பிட்ட சுவாச விகிதத்தை விட அதிகரித்து காணப்படின் உடனடி வைத்திய சிகிச் சை தேவையாகும்.

விலா என்பு களுக்கிடை யேயான தசை கள், வயிற்றுத் தசைகள் மற்றும் கழுத்துத் தசைகள் சுவாசிக்கும் போது அதிகமாக உட்சென்று வெளி வரின் குழந்தைகளுக்கு மூச்சுவிடுவதில் சிரமம் உள்ளது எனலாம் சுவாசிப்பதில் சிரமம் உள்ள குழந்தை சுவாசிக்கும் போது இழுப்பு (wheezing) போன்ற சத்தங்கள் காணப்படலாம்.

பாலருந்துவதில் அல்லது உணவு உட்கொள்வதில் சிரமப்படல்.

சுவாசக் க்'டம் மிகமிக அதிகமாயின் குழந்தை அழமுடியாமலோ கதைக்க முடியாமலோ அவதிப்படுவதுடன் அதன் நிறம் வெளிறியோ (Pallor) அல்லது நீலம் பாரித்தோ (Cyanosis) காணப்படலாம். இந்த நிலைமை மிக அபாயகரமான கட்டத்தை குழந்தை அடைந்து விட்டது என்பதைக் காட்டும்.

எனவே பல்வேறு காரணங்களால் சுவாசிப்பதில் சிரமம் ஏற்பட்டாலும் அதன் ஆரம்ப அறிகுறிகளை முன்னதாகவே கண்டறிந்து உரிய காலத்தில், தகுந்த சிகிச்சையைப் பெற்றுக்கொள்வதன் மூலம் குழந்தைகளைப் பாதுகாக்க முடியும்.

(நன்றி: Jaffna Diabetic Centre)

---

பண்பாட்டுக்கே விரோதம். இது உன் வீட்டுக்கு தெரியுமா?" என்றர்ன்.

"தெரியாது"

"முதல்ல அவர்களிடம் பேசு." -அவன் ஒரு அக்மார்க் சோமாலியன். போய்விட்டான்.

டொக்டர் மக்ரே மிகவும் நல்லவர். "நீ மட்டும் இல்லை வாரிஸ். குடும்பத்துக்குத் தெரியாமல் எகிப்திலிருந்தும், சூடானிலிருந்தும், சோமாலியாவிலிருந்தும் ஏராளமான பெண்கள் இங்கு வருகிறார்கள். பாவம், சில பெண்கள் கர்ப்பமாகக்கூட இருப்பார்கள். என்னால் எவ்வளவு முடியுமோ, அவ்வளவு சிறப்பாக செய்கிறேன். நீ கவலைப்பட வேண்டாம்" என்றார்.

சிகிச்சை முடிந்து மூன்று வாரங்கள் ஆகியிருக்கும்.

ஒருநாள், கழிவறையில் உட்கார்ந்து நான் சிறுநீர் கழித்தபோது..

"உஷ்ஷ்ஷ்ஷ்"

ஆஹா! என்ன ஒரு அற்புதம். நான் அடைந்த மகிழ்ச்சியை, அந்த சுதந்திரத்தை... வர்ணிக்க வார்த்தைகளே இல்லை. இந்த உலகில் இதைவிட மகிழ்ச்சியான ஒரு அனுபவம் இருக்கவே முடியாது.

1995ஆம் ஆண்டு. என்னுடைய வாழ்க்கையை ஆவணமாக்குவதென்று பி.பி.சி தீர்மானித்தது.

"நல்லது. ஆனால், சோமாலியாவுக்குச் சென்றதும் என் அம்மாவைக் கண்டுபிடிக்க நீங்கள் உதவவேண்டும்" -இயக்குநர் கெரி பொமிராயிடம் கோரிக்கை வைத்தேன். அவர் ஒப்புக்கொண்டார்.

என் குடும்பம் நகர்ந்ததாக சந்தேகிக்கப்படும் பல்வேறு இடங்களில் பி.பி.சி குழுவினர் தேடத் துவங்கினர்.

சிலர், "நான்தான் உன் அம்மா" என்று வந்தனர்.

"உனக்கும் உன் குடும்பத்துக்கும் மட்டுமே தெரிந்த ரகசியங்கள் என்று சிலது இருக்கும். அது என்ன என்று யோசி" என்றார் கெரி.

"ஓ"! என்னை "அவ்டஹொல்" என்று அம்மா கூப்பிடுவாங்க"

"இந்தப் பேரை அவங்களுக்கு ஞாபகம் இருக்குமா?"


"நிச்சயமா"

இப்போது அவ்டஹொல் என்கிற வார்த்தை சீக்ரட் பாஸ் வேர்டாக கொண்டு செல்லப்பட்டது. ஒருநாள் பி.பி.சி ஊழியர்கள் என்னை அழைத்து, "அநேகமா உன் அம்மாவை கண்டுபிடிச்சிட்டோம் என்று நினைக்கிறோம். அந்தம்மாவுக்கு அவ்டஹோல் என்கிற வார்த்தை மறந்துபோச்சு. ஆனால், தனக்கு வாரிஸ் என்று ஒரு பெண் இருந்ததாகவும், அவ லண்டன் தூதரகத்தில வேலை பார்த்ததாகவும் சொல்றாங்க" என்றனர்.

(தொடரும்)

---

# இமெயில் கடன் இனிதே தீர்ந்தது!




நீங்கள் இமெயில் கடன்பட்டிருக்கிறீர்களா? என யாரேனும் கேட்டால் கோபிக்க வேண்டாம். கேட்கும் நபர் இமெயில் கடன் மன்னிப்பு தினம் பற்றி அறிந்திருக்கிறார் என்று பொருள்!

அதென்ன இமெயில் கடன் மன்னிப்பு தினம்? புதிதாக இருக்கிறதே என குழம்ப வேண்டாம். இமெயில் சுமை குறைப்பதற்காக இணையத்தில் முன் வைக்கப்பட்டுள்ள யோசனை தான் இது.

அதாவது நீண்ட நாட்களாக பதில் அளிக்காமல் வைத்திருக்கும் மெயில்களுக்கு, அவற்றை இதுவரை கவனிககாமல் இருந்துவிட்டோமே என்ற குற்ற உணர்வு இல்லாமல் பதில் மெயில் அனுப்பி வைப்பதற்கு என்று இந்த தினத்தை தேர்வு செய்துள்ளனர். இணையத்தில் ரிப்ளை ஓல் எனும் பாட்காஸ்டிங் நிகழ்ச்சியை வழங்கி வரும் கிம்லெட்மீடியா (http://gimletmedia.com/2015/04/email-debt-forgiveness-day/) இணையத்தளம், ஏப்ரல் 30ஆம் திகதியை இவ்வாறு இமெயில் கடன் மன்னிப்பு தினமாக அறிவித்துள்ளது.

உங்கள் முகவரிப் பெட்டியில் பழைய மெயில்கள் இருந்தால் அதற்குத் தயக்கம் இல்லாமல் பதில் அளியுங்கள் என்றும் ஊக்குவித்திருந்தது. இப்படித் தாமதமாக பதில் அனுப்புவதற்கான விளக்கம் அளிக்க வேண்டிய கவலையும் வேண்டாம், எங்களுக்கு இணைப்பு கொடுங்கள் போதும் என்றும் தெரிவித்திருந்தது.

இமெயில் பெட்டியைத் தூசி தட்டி சுத்தமாக்க நல்ல வழி தான் இல்லையா? சரி, உங்கள் மெயில் பெட்டியில் எத்தனை மெயில்கள் தேங்கிக் கிடக்கின்றன என்று ஒரு பார்வை பார்த்துக்கொள்ளுங்கள்.

---

# ஆபத்தான உடை!



மேல்நாட்டு பொதுநிகழ்ச்சிகளில் விதவிதமாக உடை அணிந்து, பார்ப்பவர்களை அதிர்ச்சிப்படுத்துவதுதான் இப்போது ஃபாஷன். பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்க வரும் பிரபலங்கள் செய்யும் அலம்பல்கள் எல்லை மீறிப் போவதாக புகார் எழுந்துள்ளது. சர்ச்சைகளை உருவாக்கி பிரபலம் தேடும் உத்தியாகவும் இது மாறியிருக்கிறது.


இங்கிலாந்தைச் சேர்ந்த பிரபல, தொலைக்காட்சி மற்றும் திரைப்பட நடிகை ஸ்ரிஃபானி டேவிஸ், சமீபத்தில் செய்த அலம்பல் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இங்கிலாந்தின் மான்செஸ்டர் நகரில், புதிய கடை திறப்பு விழாவுக்காக ஸ்ரிஃபானியை சிறப்பு விருந்தினராக அழைத்திருந்தனர். தன், நண்பர்கள் சிலருடன் அந்த நிகழ்ச்சிக்கு வந்த ஸ்ரிஃபானி அணிந்திருந்த உடையை பார்த்த பலரும், வாய் பிளந்து நின்றனர்.

திரைச்சீலையை தொங்க விட்டது போல், இரண்டு கால்களின் அடிப் பகுதியிலிருந்து, இடுப்பு வரை தெரியும்படி, ஒரு உடையை அணிந்து வந்தார்: காற்று அடித்தபோது, திரைச்சீலை போன்ற அந்த உடை காற்றில் பறந்து, ஸ்ரிஃபானியின் மானத்தை கப்பலேற்றியது. ஆனால், இதைப்பற்றி, அவர் சற்றும் அலட்டிக் கொள்ளாமல், "என் உடை எப்படி இருக்கு... இதற்குப் பெயர் தான், டேஞ்சரஸ் கட்டிங் உடை..." என, அக்கம் பக்கத்தில் இருந்தவர்களிடம் விளக்கமளித்துக் கொண்டிருந்தாராம்.

# அன்பா, செல்வமா, வெற்றியா சிறந்தது?





ஒரு ஊரில் குமரன் தன் தாய் தந்தையுடன் வசித்துவந்தான். அப்போது அவன் வீட்டின் முன் மூன்று வயதானவர்கள் வந்து "உள்ளேவரலாமா" என்று கேட்டனர்.

தந்தை "வாருங்கள்" என்றார்.

"நாங்கள் மூவரும் ஒன்றாக வரமுடியாது...யாராவது ஒருவர் தான் வரமுடியும்...என் பெயர் பணம்...இவர் பெயர்வெற்றி...இவர் பெயர் அன்பு..எங்கள் மூவரில் ஒருவர் தான் ஒரு வீட்டிற்குள் செல்லமுடியும்...எங்கள் மூவரில் உங்களுக்கு யார் வேண்டுமோ அவரை அழைத்துக் கொள்ளுங்கள்" என்றார் பணம் எனப்படுபவர்.

குமரனின் தந்தை " வெற்றியை அழைக்கலாம். நாம் எந்த வேலையைச் செய்தாலும் அதில் வெற்றியடையலாம்" என்றார்.

ஆனால் குமரனோ ..."அப்பா பணத்தையே உள்ளே அழைக்கலாம்...நம்மிடம் பணம் சேர்ந்து விட்டால்... எல்லாவற்றையும்..வெற்றி ..உட்பட ...அனைத்தையும் வாங்கலாம்" என்றான்.

ஆனால் குமரனின் தாயோ "வேண்டாம்...அன்பையே அழைக்கலாம். அன்பு தான் முக்கியம்" என்றாள்.

பின் மூவரும், "அன்பு உள்ளே வரட்டும்" என்றனர்.

அன்பு உள்ளே வர, அவரைத் தொடர்ந்து வெற்றியும், பணமும் கூட உள்ளே நுழைந்தனர்.

உடன் குமரனின் அம்மா"அன்பை மட்டும் தானே உள்ளே அழைத்தோம்" என்றார்.

அன்பு சொன்னார்," நீங்கள் பணத்தையோ, வெற்றியையோ அழைத்திருந்தால்..மற்ற இருவரும் வெளியே நின்றிருப்போம்.

ஆனால் அன்பான என்னை வரச் சொன்னதால்.. நான் இருக்கும் இடத்தில் தான் பணமும், வெற்றியும் இருக்கும்..ஆகவே அவர்களும் உள்ளே வந்து விட்டனர்"

அன்பு உள்ளம் இருந்தால்..நம் வாழ்வில் வெற்றியும்,தேவையான வசதிகளும் தானாகவே வந்துவிடும்.

அன்பே சிவம்...அன்பே முக்கியம்.

இதையே வள்ளுவர்..

அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு

அன்பு நெஞ்சத்தின் வழியில் இயங்குவதே உயிருள்ள உடலாகும். இல்லையேல் ,அது வெறும் எலும்புத்தோல் போர்த்திய வெறும் உடலாகும். சுருங்கச் சொன்னால்..அன்பு மனம் கொண்டவர்களே மனிதர்கள் ஆவர்.

# சின்னச் சின்ன துளிகள்

விமானப்படை தினம் கொண்டாடப்படும் நாள் ஒக்ரோபர் 8.

இரத்த ஓட்டத்தைக் கண்டுபிடித்தவர், வில்லியம் ஹார்வே.

இந்திராகாந்தி முதன்முதலில் இந்தியப் பிரதமரான ஆண்டு, 1966.

டில்லியின் பழைய பெயர், இந்திர பிரஸ்தம்.

வானத்தில் இருந்து பார்க்கும்போது வானவில் முழு வட்டமாகத் தெரியும்.

நவீன ஓவியக்கலையின் தந்தை என்று அழைக்கப் படுபவர், பிகாசோ.

மோனாலிசா ஓவியத்தில் உள்ள பெண்ணுக்கு கண் புருவங்கள் கிடையாது.

கழுதைப்புலி, நாய் இனத்தைச் சேர்ந்தது.

ஈசலின் வாழ்வு ஒருநாள் மட்டுமே.

ரங்கன்திட்டு பறவைகள் சரணாலயம் உள்ள இடம் - கர்நாடகா

குருதேவ் என்று அழைக்கப்படுபவர் - ரவீந்திரநாத் தாகூர்

இந்தியாவின் முதுபெரும் மனிதர் - தாதாபாய் நவுரோஜி

இரண்டாம் சந்திரகுப்தர் காலத்தில் வந்த சீனப்பயணி - பாஹியான்

அக்னி, பிருத்வி ஏவுகணைகளை வடிவமைத்தவர் - ஏ.பி.ஜே.அப்துல்கலாம்

இந்தியாவில் உள்ள இளஞ்சிவப்பு நகரம் - ஜெய்ப்பூர்

புயலடிக்கும் நகரம் என்று அழைக்கப்படுவது - சிகாகோ

டி.என்.ஏ.வை ஒட்ட வைக்க பயன்படும் நொதி - லிகேஸ் நொதி

முதன் முதலில் வைரசைக் கண்டறிந்தவர் -பெய்ஜரிங்க்.

அலாவுதீன் கில்ஜியின் அரசவைப் புலவர் - அமீர் குஸ்ரு

உலக சுற்றுச்சூழல் தினம் என்று கொண்டாடப்படுகிறது? யூன் 5.

இதய நோயாளிகள் பயன்படுத்த வேண்டிய எண்ணெய்? சூரியகாந்தி எண்ணெய்.

தாவரங்களில் ஒளிச்சேர்க்கையின் போது எந்த காற்று வெளியேற்றப்படுகிறது?
ஒட்சிசன்

# விஞ்ஞானி கலிலியோ உண்மையை உலகிற்கு எடுத்துக்கூறியவர்



விஞ்ஞானி கலிலியோ உண்மையை உலகிற்கு எடுத்துக் கூறியவர் !! உண்மையே சொன்ன அவர் என்ன ஆனார் ??

கலிலியோ கலிலி இத்தாலிய விஞ்ஞானி. நமது சூரிய குடும்பத்தின் அமைப்பு, வானசாஸ்திரம் ஆகியவை குறித்து புதிய விஷயங்களை கண்டுபிடித்து அறிவித்தவர். அவருடைய கண்டுபிடிப்புகள்தான் புதிய சிந்தனையை உருவாக்கின. அவரைப் பற்றிய மிகவும முக்கியமான சில உண்மைத் தகவல்களைப் பார்க்கலாம்....

* இத்தாலியின் பிசா நகரில் 1564 ஆம் ஆண்டு பெப்ரவரி 15 ஆம் திகதி கலிலியோ பிறந்தார். 1642 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி இறந்தார். முற்காலத்தில் அரிஸ்ரோட்டில் எழுதிவைத்தபடி ஆண்களுக்கு 32 பற்கள் உண்டு என்றும், பெண்களுக்கு 28 பற்கள தான் உண்டு என்றும் நம்பிவந்தனர். அதையே, கலிலியோவின் பள்ளியிலும் பாடமாகச் சொல்லிக் கொடுத்தார்கள். கலிலியோ அதை பரிசோதனை செய்துபார்த்தார். வீட்டில் அவரது அம்மா மற்றும் பக்கத்துவீட்டுப் பெண்களின் பற்களையும், ஆண்களின் பற்களையும் எண்ணிப்பார்த்து அரிஸ்ரோட்டில் கூறியது தவறு. ஆண், பெண் அனைவருக்கும் 32 பற்கள் உண்டு என்ற உண்மையைக் கூறினார்.

* வானவியல் அறிஞர், வேதியியல் வல்லுநர், கணிதவியலாளர், தத்துவஞானி, கண்டுபிடிப்பாளர் என பன்முக ஆற்றல் பெற்றவர். தொலைநோக்கி, காம்பஸ், தெர்மாமீற்றர் ஆகியவை இவரது கண்டுபிடிப்புகளில் முக்கியமானவை. இயற்பியலின் தந்தை, நவீன அறிவியலின் தந்தை, நவீன வானியலின் தந்தை என்றெல்லாம் அழைக்கப்படுகிறார்.

இன்று விஞ்ஞானிகளுக்கு சமூக அங்கீகாரம் கிடைக்கிறது அரசு மரியாதை செய்கிறது அறிவியல் உலகத்திற்கு சிறந்த பங்களிப்பு செய்யும் விஞ்ஞானிகளுக்கு நோபல் பரிசு கூடக் கிடைக்கிறது 16–17ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த விஞ்ஞானிகளின் நிலைமை இவ்வளவு இனிமையாக இல்லை. அவர்களது கண்டுபிடிப்புகள் மதநம்பிக்கைகளுக்கு விரோதமானதாகக் கருதப்பட்டால் கண்டு பிடிப்புக்களை அவர்கள் வெளியிட முடியாது. மீறி வெளியிட்டால், அவர்களது உயிருக்கே கூட ஆபத்து காத்திருந்தது. இப்படிப்பட்ட சிக்கலை இந்த உலகம் கண்ட மாபெரும் விஞ்ஞானி கலிலியோ தன் வாழ்நாளில் சந்தித் தார். நவீன விஞ்ஞானத்தை உருவாக்கியதில் அவரது பங்கு மகத்தானது. வானவியல், இயற்பியல் மற்றும் கணிதவியலில் அவரது கண்டுபிடிப்புகள் ஒரு அறிவியல் புரட்சியையே ஏற்படுத்தின. ஆனாலும் மதவாதிகளின் தண்டனையை அவர் எதிர் கொள்ளவேண்டி வந்தது.

* பிசாவில் உள்ள பல்கலைக்கழகத்தில் மருத்துவப் பட்டப் படிப்பில் சேர்ந்தார். ஆனால், அதனை முடிக்காமல், கணிதத்தை தேர்வு செய்து படித்தார்.

*இந்த தொலைநோக்கி மூலம், அதற்கு முன் வானியலாளர்கள் வானில் கண்டதைவிட நீண்ட தொலைவுக்கு அப்பாலும் கலிலியோவால் காண முடிந்தது. 1610 ஆம் ஆண்டு, வியாழக் கிரகத்தை 4 பொருட்கள் சுற்றுவதைக் கண்டுபிடித்தார். இவை, வியாழனின் மிகப்பெரிய நிலவுகளாகும். லோ, கலிஸ்டோ, ஈரோப்பா, கனிமீடு என்று இவை அழைக்கப்படுகின்றன.

* பல நூற்றாண்டுகளாக பூமி நடுவில் இருப்பதாகவும் சூரியன் உள்ளிட்ட மற்ற எல்லாக் கோள்களும் பூமியைச் சுற்றி வருவதாகவும் நம்பப்பட்டது. ஆனால், கலிலியோ, கோபர் நிகோலஸ், ஜோகன்னஸ் கெப்லர் ஆகியோரின் ஆய்வுகள் முதன்முறையாக சூரியனை நடுநாயகமாகக் கொண்டு பூமி உள்ளிட்ட கோள்கள் சுற்றி வருவதாக நிரூபித்தன. இது, கிறிஸ்தவ மதத்தின் நம்பிக்கைக்கு எதிரானது என்று கூறி கலிலியோவை கிறிஸ்தவ தலைமையகம் தண்டித்தது. அவருடைய பல கருத்துக்களை திரும்பப் பெறும்படி வற்புறுத்தியது. சாகும்வரை வீட்டுச் சிறையில் வைத்தது என்று கூறுகிறார்கள். அவரை கல்லால் அடித்து தீயில் போட்டதாக முன்பு கூறப்பட்டது.

* பூமியில் கடல் அலைகள் உருவாவதற்கு நிலவுதான் காரணம் என்ற கெப்லரின் கோட்பாட்டை ஏற்க கலிலியோ மறுத்தார். மாறாக, பூமியின் சுழற்சியால் இயற்கையாகவே அலைகள் உருவாவதாக நம்பினார். (இது தலைசிறந்த மனிதர்களும் தவறு செய்வார்கள் என்பதை உறுதிசெய்ய உதவியது).

*** கலிலியோவின் பிரபலமான கருத்துக்கள்**

* அறிவியல் கேள்விகளுக்கு ஆயிரம் பேர் சேர்ந்து அளிக்கும் பதில்கள் அதிகாரபூர்வமானவை அல்ல. மாறாக ஆதாரங்களுடன் தகுந்த காரணங்களுடன் ஒருவர் அளிக்கும் பதில் மட்டுமே உண்மையானது.

* உண்மையின் சக்தியை இப்போது உணருங்கள்: ஆய்வின் ஆரம்பகட்டத்தில் ஒரு விடயம் தோன்றும். மீண்டும் மீண்டும் கவனமாக ஆய்வை மேற்கொள்ளும்போது, அதில் மாறுபட்ட கருத்துகள் உருவாகும்.

மாபெரும் விஞ்ஞானி கலிலியோ கலிலி

1992 – இல் – கலிலியோ மறைந்து 350 ஆண்டுகள் கழித்து – கலிலியோவைத் தண்டித்தது தவறு என போப் ஏற்றுக் கொண்டு மன்னிப்புக் கோரினார் அறிவியல் உண்மைகள் அவை வெளி யிடப்படும் காலத்தில் ஏற்கப்படா விட்டாலும், என்றாவது ஒரு நாள் ஏற்கப்படும் என்பதற்கு கலிலியோவின் வாழ்க்கை ஓர் உதாரணம்....



# முதியோர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண

# பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுப்பு

## கைதடி அரச முதியோர் இல்ல அத்தியட்சகர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

சனத்தொகையில் 22 வீதமாக அதிகரிக்கவுள்ள முதியோர்களின் பிரச்சினைகள் தொடர்பில் பெரும் சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என்ற வகையில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக கைதடி அரச முதியோர் இல்ல அத்தியட்சகர் ரி.கிருபாகரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தற்போது முதியோர் இல்லம் ஒரு விழிப்புணர்வு நிலையமாக மாற்றப்பட்டுள்ளது. முதியோர் ஒருவருக்கு பிரச்சினை என்று வந்தால் அறை தீர்க்கக்கூடிய குறைக்கக்கூடிய வகையில் ஆலோசனைகள் வழங்கப்படுகிறது. அவருக்கு பிரச்சினை என்றால் கட்டாயம் முதியோர் இல்லத்தில் சேர்க்கவேண்டும் என்று இல்லை இறுதிக்காலங்களில் தங்களுடைய உறவுகளைத் தான் தேடுகிறார்கள். இதனால் அதற்கான சூழலில் தான் அவர்கள் இருக்கவேண்டும் இதனால் அவர்களை உறவுகளுடன் மீளிணைப்புச் செய்கின்றோம். இதனால் முதியோரின் இறுதிக் காலகட்டங்களில் ஆத்ம திருப்தியை பெறுகின்றனர். கடந்த 3 வருடகாலத்தில் 193 பேரை நாம் குடும்பங்களுடன் மீள்இணைப்புச் செய்துள்ளோம். இதமட்டுமல்ல முதியோரை மகிழ்வூட்டும் செயற்றிட்டங்கள், சுற்றுலாப் பயணங்கள், முதியோர் சங்கங்கள், பகல் நிலையங்கள் என்பவற்றை ஊக்குவிக்கின்றோம். அது மட்டுமல்லாமல் இங்கு பாடசாலை மாணவர்கள், பொது அமைப்புக்கள், நிறுவனங்கள் என பலரையும் நிகழ்வுகளில் கலந்து கொள்ளச்செய்வதன் மூலமாக எதிர்காலத்தில் முதியோரை பராமரிக்கக்கூடிய ஒரு சமூகம் உருவாக்குவதற்கான வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம். இவ்வாறான திட்டங்கள் மக்க ளுக்கு போய்ச் சேரும் போது எதிர்காலத்தில் முதி யோரின் பிரச்சினைகளுக்கு உடன் தீர்வு காணக் கூடியதாக இருக்கும் என்றார்.

(இ)

## கஞ்சாவிற்ற நால்வர் இலுப்பைக்கடவையில் கைது

மன்னார் பாலி ஆறு - இலுப்பைக் கடவைப் பிரதேசத்தில் 9 கிலோ கஞ்சாவை விற்பனை செய்ய முயன்ற 4 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். கடந்த வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் இவர்களை பொலிஸார் கைது செய்தனர். கஞ்சாவை வாங்கச் செல்வது போன்று சென்ற பொலிஸாரே குறித்த நால்வரையும் கைது செய்தனர். அத்துடன் 9 கிலோ கஞ்சாவை யும் கைப்பற்றினர். இந்தக் கஞ்சா யாழ்ப்பாணத் தில் இருந்து மன்னாருக்குக் கொண்டு செல்லப்பட்டது என்றும் இதன் மதிப்பு சுமார் 10 இலட்சம் ரூபா என்றும் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் அவர்களிடமிருந்து மோட்டார் சைக்கிள் ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.


## யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் கலம்காரி ஓவியக் கண்காட்சி

யாழ்ப்பாண பல்கலைக்கழக நுண்கலைத் துறையினால் கடந்த 21 ஆம் திகதி புதிய கலைப் பீடக் கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள கலைக் கூடத்தில் கலம்காரி எனும் ஓவியக் காட்சிப்படுத்தல் ஆரம்பமாகியுள்ளது. இக் காட்சிப்படுத்தல் நாளை புதன்கிழமை மாலை 5 மணிவரை இடம்பெறவுள்ளது.

இக் காட்சிப்படுத்தலானது பத்து நாட்களாக இடம்பெற்ற பயிற்சிப்பட்டறையின் வெளியீடாகும். கலம்காரி பாரம்பரியமானது இந்தியாவின் பாரம்பரியக் கலைகளில் ஒன்றுமட்டுமல்லாது யாழ்ப்பாணத்தின் பாரம்பரியத்தோடு தொடர்புடையதுமாகும்.

இக் காட்சிப்படுத்தலில் கலை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ்ப்பாண பல்லைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் பேரா சிரியர் அ.நொ.கிருஷ்ணவேணி கேட்டுக்கொண்டுள் ளார்.

## நிதியுதவி வழங்கல்



(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் மாணவன் ஒருவனுக்கு முழங்காலில் ஏற்பட்ட சுகயீனம் காரணமாக முழங்கால் சிரட்டை மாற்றுவதற்கு நிதிஉதவி வழங்கப்பட்டுள்ளது

வட்டுக்கோட்டை சங்கரத்தையைச் சேர்ந்த சிவபாலன் மகிந்தன் வயது 16 என்பவருக்கே மேற்படி உதவி வழங்கப்பட்டுள்ளது.

இவ் உதவியினைப்பெற்றுக் கொண்ட பாதிக்கப்பட்ட நபரின் குடும்பத்தினர் உதவி வழங்கிய வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்துக்கு தமது நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.

## நவீன மயப்படுத்தப்படும் பழைய தொங்கு பாலம்

(தீவகம்)

தீவகத்தின் தனிவழித்தமான பண்ணை தாம் போதி வீதியில் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் பண்ணைக்கடல் வீதி மூடப்பட்ட பொழுது கட்டப்பட்ட பண்ணை தொங்குபாலம், வீதி அமைப்பாளர்களால் நவீன மயமாக்கும் முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன.

இது பண்ணை ஊர்காவற்றுறை வீதியின் நவீன மயப்படுத்தலின் ஒருபகுதியாகும். இந்த பால திருத்தவேலைகளுடன் 100 மில்லியன் வேலை முடிவுக்குவருமெனப்படுகிறது. பண்ணை வீதியின் ஆற்றுப் பகுதியில் அமைக்கப்பட்ட பால வேலை எதிர்பார்க்கப்பட்டதை விட கூடுதலான காலத்தை விழுங்கி இருந்தது. நிதி செலவும் அப்பிடியாகவே இருந்திருக்கும்.

இந்த ஆற்று பால வேலை முடிந்தாலும் அதன் மேலான வீதிவேலைகள் முடிவுறுத்தப்படவில்லை. வீதியின் உண்மையான அகலத்தில் பாதிவரையேயானதாகவே இந்த வீதி திருத்தப்பட்டுள்ளது.

அதைத் தொடர்ந்தே வைபாஸ் வீதி, போட்டு தொங்குபாலம் நவீனமாகிறது. இதன் பழைய கட்டுமானம் மிகப்பலம் வாய்திருப்பதால் அதன் ஒரு பகுதி நடுவில் இருப்பதற்கு விடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

(23)

## பதிவிறக்கப் பெட்டகம்

கடந்த முறை ஜெயலலிதா குற்றவாளி என்று அறிவிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்ட போது “இந்தத் தண்டனைக்கு முற்றிலும் தகுதியானவர் ஜெயலலிதா” என்று சொல்லியிருந்தேன். எந்த டிவியில் என்று கேட்காதீர்கள். இதே முகநூலில்தான். இப்போது இந்த விடுதலைக்கும் அவர் முற்றிலும் தகுதியானவர் என்றே சொல்ல விரும்புகிறேன். இதைச் சொல்வதில் எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை.

அவருக்கு தண்டனை என்று தெரிந்தவுடன், தமிழ் நாடே ஆபாசக் கடலாக மாறியது. பால் காவடி, அலகு குத்துதல், மொட்டை அடித்துக்கொள்ளுதல், எல்லா கோவில்களிலும் சிறப்பு பூஜை என ஊரே திமிலோகப்பட்டது. இந்த சிறப்பு பூஜையில் சேர்ச்சுகள் மசூதிகளும் கூட கலந்துகொண்டன. மந்திரிகள் மண் சோறு சாப்பிட்டார்கள். உணவு பரிமாறப்பட்ட இலைகளில் உருண்டு பிரார்த்தித்தார்கள் எம்எல்ஏக்கள். எல்லா பிரார்த்தனைகளுக்கும் தேவையான கூலி கட்சிப் பிரதிநிதிகளால் முறையாக வழங்கப்பட்டது. அந்தந்த மாவட்ட ஆட்சியர்களும் கூட இந்த நிகழ்வுகளில் கலந்துகொண்டார்கள். எங்காவது ஒரு ஊரில் ஏதாவது ஒரு பிரார்த்தனையோ ஊர்வலமோ நடந்துகொண்டே இருந்தது. இன்று வரையிலும் நடக்கிறது.

ஓ.பன்னீர் செல்வம் முதல்வராக பதவியேற்றுக்கொண்ட அன்று, கண்ணீரில் மிதந்தது அந்த நிகழ்வு. முத்தாய்ப்பாக, கறுத்த உருவமும், உடல் முழுக்க நகையுமாக, பெரிய மீசையோடு கண்ணீர் விட்டு அழும் கட்சிக்காரர் ஒருவரது புகைப்படம் சமூக வலைத்தளங்களில் உலா வந்து பெரும் கவனத்தை ஈர்த்தது. அப்படி ஒரு வசீகரமான அழுகை அது.

இங்கு தான் கேள்வி எழுகிறது. இந்த நிகழ்வுகளில் பங்கேற்ற யாருக்குமே ஏன் கூச்சமில்லை? இது ஆன்மாவின் சீரழிவு என்று ஏன் யாருக்குமே உறுத்தவில்லை? காசு வாங்கிகொண்டு பிரார்த்தனைகளில் கலந்து கொள்வதற்கு ஏன் யாரும் தயங்கவில்லை. கோவில் பூசாரி முதல், முல்லாக்கள், பாதிரியார்கள் வரை எல்லாரும் வெளிப்படையாக சோரம் போனார்களே ஏன்? இது ஆன்மீக வறுமை இல்லையா, அப்பட்டமான துயரம் இல்லையா?

இந்த ஊழலுக்கு எதிராக, வழக்கு தொடரவோ, அதில் அரசு தரப்பாக இணைந்து கொள்ளவோ எந்த தார்மீகத் தகுதியும் உண்டா தி.மு.க.வுக்கு. ஜெயலலிதாவின் தண்டனையைக் கொண்டாடிய திமுக ஆதரவு கவிஞர்கள், முகநூல் செயற்பாட்டாளர்கள், 2ஜியில் நடந்தது ஊழலே இல்லை என்று நம்பும் அறிவு ஜீவிகள் என இந்த ஆபாசத்தின் பங்குதாரர்களுக்கு ஜெயலலிதாவின் விடுதலையை விமர்சிப்பதற்கு எந்தத் தகுதியும் இல்லைதானே.

இங்கு முடிந்த வரை எல்லாரும் சுருட்டிக்கொண்டிருக்கிறார்கள். எல்லாவற்றிலும் ஊழல் தலைவிரித்தாடுகிறது. இத்தகைய ஒரு சூழலில் ஜெயலிதா மட்டும் எதற்காக ஜெயிலுக்குப் போக வேண்டும். இந்த ஊழலின் பங்குதாரர்களாக, அதிகாரிகளும், கட்சிக்காரர்களும், பெரும்பான்மை மக்களும் ஆகியிருக்கும்போது அவ்வாறு நாம் விரும்புவது அபத்தம் இல்லையா. இப்போதுள்ள சூழலில் இங்கு ஜெயலலிதாக்கள் மட்டும் தான் தலைமையேற்க முடியும், அரசை வழி நடத்த முடியும். அவரை தண்டிக்கும் தகுதியையோ, ஏன் மன்னிக்கும் தகுதியையோ கூட நாம் இழந்திருக்கிறோம். இந்த விடுதலைக்கு முற்றிலும் தகுதியான அவரை வரவேற்போம்.

– முகநூலில் கார்ல் மார்க்ஸ்

எந்த ஒன்றையும் பழக்க வழக்கத்துக்குக் கொண்டுவந்துவிட்டால் அது ஆழ்மனப் பதிவாக ஆகிவிடும்.

– ராஜ்கௌதமன்

உலகம் சுற்றும் வாலிபன் படப்பிடிப்பை முடித்து, ஜப்பானிலிருந்து திரும்பியிருந்தார் எம்.ஜி.ஆர்., ராமாவரம் தோட்டத்தில் அவரைச் சந்தித்த பத்திரிகை நிருபர்களில் ஒருவர், ‘ஜப்பானில் உங்களுக்கு எது பிடித்தது என்று சொல்ல முடியுமா?’ என்று கேட்டார்.


‘அங்கே எனக்குக் கொஞ்சம் சதை பிடித்தது…’ என்று சிரிக்காமல் சொன்னார் எம்.ஜி.ஆர்.,

*** ****

“நாற்பது வருஷமாக உங்களைத் தொடர்ந்து படித்து வருகிறேனே… என்னைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?” என்ற கேள்விக்கு சுஜாதா சொன்ன பதில் :

“நாற்பது வருஷம் உங்களைத் தொடர்ந்து படிக்க வைத்திருக்கிறேனே, என்னைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ அதேதான்!”

## விளக்கமறியல்



சதொச ஊழல் தொடர்பில் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருக்கும் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை எதிர்வரும் யூன் 8ஆம் திகதிவரை தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்கும்படி குருநாகலை மஜிஸ்திரேட் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

# மத்திய வங்கி பிணைப்பத்திர விற்பனை தடுக்க முயன்றும் தோற்ற ரணில்

## விக்கிலீக்ஸ் ளியிடும் தகவல்

(கொழும்பு)

500 மில்லியன் அமெரிக்க டொலருக்கு விற்பனையான இலங்கை மத்திய வங்கியின் பிணைப்பத்திரங்களின் விற்பனையை தடுக்க ரணில் விக்கிரமசிங்க முயற்சி செய்ததாக விக்கிலீக்ஸ் இணையத்தளம் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கையில் 2006ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை அமெரிக்காவுக்கான தூதுவராக பணியாற்றியவர் ரொபேர்ட் ஓ பிளேக். அவர் கடந்த 2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் எழுதிய கடிதத்தினை விக்கிலீக்ஸ் தகவல் தளம் வெளியிட்டுள்ளது.

அக்கடிதத்தில், இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ஆட்சியின் போது இலங்கையின் அரசாங்கப் பிணைப்பத்திரம் 500 மில்லியன் அமெரிக்க டொலருக்கு விற்பனையானதாகவும் அதை வாங்கிய சர்வதேச முதலீட்டாளர்களில் 40 சதவீதம் பேர் அமெரிக்க முதலீட்டாளர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் இந்த விற்பனையைத் தடுக்க எதிர்க்கட்சியாக இருந்த ஐக்கிய தேசிய கட்சி பல முயற்சிகளை மேற்கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் நிலையான பொருளாதார முன்னேற்றம் ஏற்படுவதற்காக மகிந்த அரசு வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவர பல முயற்சிகளை மேற்கொண்டது.




அதேவேளை ஐக்கிய தேசிய கட்சி ஆட்சிக்கு வந்தால் இந்த பத்திர விற்பனைக்கு முக்கியத்துவம் கொடுக்கமாட்டோம் என்று எதிர்த்தனர்.

இதனால் முதலீட்டாளர்களிடம் சிறிது அச்சம் ஏற்பட்டது. அப்போதைய மத்திய வங்கியின் ஆளுநர் இந்த விற்பனை மூலம் கிடைக்கும் பணத்தை அரசாங்கம் நாட்டின் உள்கட்டமைப்புக்கு செலவிடும் என்று தெரிவித்தார்.

அப்போது இருந்த மகிந்த அரசாங்கத்தின் பொறுப்பற்ற தன்மை எதிர்க்கட்சிகள் இந்த விற்பனையை எதிர்ப்பதற்கு ஒரு காரணமாகவும் இருந்திருக்கலாம் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் அரசாங்கப் பத்திரங்கள் விற்பனையில் வெளிப்படைத்தன்மை வேண்டும் என்ற முதலீட்டர்ளர்களின் வேண்டுக்கோளை அரசாங்கம் சிறந்தமுறையில் பூர்த்தி செய்தது என்று எழுதியுள்ளார்.

மேலும் ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஏனைய எதிர்ப்பாளர்கள் அரசாங்க பத்திர விற்பனை சட்டவிரோதமானது மற்றும் விவேகமற்ற செயல் என ஊடகங்கள் மூலம் தங்கள் எதிர்ப்பை தெரிவித்தனர்.

இந்த விற்பனை நாடாளு மன்றத்தின் செயற்பாட்டின் கீழ் நடைபெறவில்லை ஆகவே இது சட்டவிரோதமான்து. மேலும் இதன் மூலம் அரசாங்கம் மக்களின் தலையில் கூடுதல் சுமையை ஏற்ற முயற்சி செய்கின்றது எனவும் அவர்கள் தெரிவித்தனர் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பசில்,கோத்தாவிற்கு வேட்புமனு வழங்காதீர்

## கோருகிறார் வாசு



முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் வேட்புரிமை வழங்கக் கூடாது என, ஜனநாயக இடது சாரிகள் கட்சியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார கேட்டுக் கொண்டுள்ளார்.

ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பசில் ராஜபக்ஷ மற்றும் கோத்தாபய ராஜபக்ஷ ஆகியோர அரசாங்கத்தை நடத்திச் செல்வதற்கான தகுதியற்றவர்கள் எனவும் வாசுதேவ நாணயக்கார கூறியுள்ளார்.

இதேவேளை மகிந்த ராஜபக்ஷ ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பிரதம வேட்பாளராக நிறுத்தப்பட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

## தலைக்கவச பாவனை புதிய சட்டம் வர்த்தமானியில்

முகத்தை முழுமையாக மறைக்கும் தலைக்கவச பாவனை மற்றும் விற்பனை தொடர்பிலான புதிய சட்டங்கள், விரைவில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுமென நுகர்வோர் விவகார அதிகாரசபை நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

பொலிஸ் தலைமையகம் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆணைக்குழு ஆகியவற்றின் வேண்டுகோளுக்கிணங்க இச் சட்டங்கள் வர்த்தமானியிடப்படும் என அதிகார சபையின் தலைவர் ரூமி மர்சூக் தெரிவித்தார்.

இலங்கை தர நிர்ணய நிறுவகத்தின் ஆய்வின் பின்னர் புதிய சட்டங்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நிதி மோசடிகுற்றச்சாட்டு மேல்நீதிமன்றில் குற்றப்பத்திரிகை

## வருகிறது புதிய முறை

முன்னைய ஆட்சியின் போது நிதி மோசடிகளில் ஈடுபட்டு மோசடி தவிர்ப்பு பிரிவினரின் விசாரணைக்கு உள்ளாகியிருக்கும் அதிகாரம் மிக்க அரசியல்வாதிகள் மற்றும் பொதுத் துறை பணியாளர்கள் மீது நேரடியாகவே மேல்நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்படவுள்ளன.

இதுவரைகாலமும் மோசடி தவிர்ப்பு பிரிவினரின் விசாரணைக்கு உள்ளாகி வரும் அரசியல்வாதிகள் உட்பட்டோர், விசாரணையின் பின்னர் நீதிமன்றங்களில் ஆஜர் செய்யப்படுகின்றனர்.

புதியமுறைப்படி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னரே ஒருவர் கைதுசெய்யப்படவுள்ளார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ, தாம் கைது செய்யப்படுவதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தடை ஆணையை பெற்ற நிலையிலேயே இந்த புதிய முனைப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.



## கணனி ஆய்வுகூட வசதிகளை பாடசாலைகளில் ஏற்படுத்தத் திட்டம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் கணனி ஆய்வுகூட வசதிகளை ஏற்படுத்த வெளிவிவகார அமைச்சின் தகவல் தொழில் நுட்ப மற்றும் தொடர்பாடல் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

பாடசாலை மாணவர்களின் தகவல் தொழில்நுட்ப அறிவை விருத்தி செய்வதற்கான வசதிகளை வழங்கும் பொருட்டு வெளிவிவகார பிரதி அமைச்சர் அஜித் பெரேராவின் வழிகாட்டலின் பிரகாரம் இந்நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கிணங்க10 மேசைக் கணனிகள் பிரிண்டர் ஸ்கானர் உட்பட 1.7மில்லியன் ரூபா பெறுமதியான ஆய்வுகூட தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன. இதற்கமைய அமைச்சின் அதிகாரிகள் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு விஜயம் செய்து கணனி ஆய்வுகூடத் தேவைகள் தொடர்பில் கண்டறியவுள்ளனர்.

சில பாடசாலைகளில் கணனி ஆய்வுகூடங்கள் உள்ள போதிலும் அவை முறையாக பயன்படுத்தப்படாதுள்ளது. அவற்றிலுள்ள கணனிகள் பயன்படுத்தப்படாது பழுதடைந்துள்ளன.

சில பாடசாலைகளில் கணனிகள் உள்ள போதிலும் அவற்றைப் பாதுகாப்பாக வைத்துப் பயன்படுத்துவதற்கான வசதிகள் கொண்ட தனிப்பட்ட பிரிவுகள் காணப்படாதுள்ளன. இவ்வாறான பாடசாலைகளுக்கு கணனிகள் வழங்கப்படாது என்றும் இக்கணனிகளை கொண்டு அவற்றை முறையாகப் பயன்படுத்துவதற்கான தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கேன்ஸ் திரைப்பட விழாவில் தீபனுக்கு பாம்தோர் விருது

(பரிஸ்)

பிரபல பிரெஞ்சு திரைப்பட இயக்குநர் ஷாக் அவ்தியா(த்) இயக்கிய தீபன் திரைப்படம் கேன்ஸ் சர்வதேச திரைப்பட விழாவில் சிறந்த திரைப்படத்துக்கான பாம்தோர் விருதை வெற்றிகொண்டுள்ளது.

பிரான்ஸிசிற்கு அகதித் தஞ்சம் கோரி குடியேறும் மூன்று தனித்தனி ஈழத்தமிழர்களின் வாழ்க்கைப் போராட்டத்தை விளக்கும் வகையில் இந்தத் திரைப்படம் உருவாக்கப்பட்டுள்ளது.

ஈழத்தமிழ் எழுத்தாளர் ஷோபாசக்தி கதாநாயகனாகவும், தமிழகத்தைச் சேர்ந்த மேடை நாடகக் கலைஞர் காளீஸ்வரி கதாநாயகியாகவும் இந்த திரைப்படத்தில் நடித்துள்ளனர்

ஹொலிவூட்டின் முன்னணி திரை நட்சத்திரங்கள் நடித்த திரைப்படங்களுடன் போட்டியிட்டு, புதுமுகங்களும் தொழில்முறை திரைப்பட முன் அனுபவமற்ற நடிகர்களும் நடித்த தீபன் திரைப்படம் இந்த சிறப்பு விருதை வெற்றிகொண்டுள்ளமை ஐரோப்பிய திரை விமர்சகர்கள் பலரையும் பெரும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது



கேன்ஸில் இந்த திரைப் படத்தை பார்த்த முன்னணி திரை விமர்சகர்கள் பலரும் இந்த திரைப்படத்தையும், ஷோபாசக்தி மற்றும் காளீஸ்வரியின் நடிப்பையும் பெரிதும் பாராட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மீளவும் நித்திரையில் ஆழ்ந்த மிஹின் லங்கா விமானி

(கொழும்பு)

மிஹின் லங்கா பயணிகள் விமானத்தில் பணிபுரியும் இந்திய விமானி மீண்டும் ஒருமுறை தமது உறுதிமொழியை தகர்த்து விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிஹின் லங்கா விமானியான கப்டன் வாஹ், ஏற்கனவே இரண்டு தடவைகள் விமான ஓட்டத்தின் போது நித்திரை செய்த குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருந்தார்.

இதன்பின்னர் அவர் மீது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு எச்சரிக்கப்பட்டார்.

இந்தநிலையில் தாம் இனிமேல் விமானப் பயணங்களின் போது நித்திரை கொள்ள மாட்டேன் என்று அவர் எழுத்துமூலம் உறுதியளித்திருந்தார்.

எனினும் பங்களாதேஷ் - கொழும்புக்கு இடையிலான சேவையின் போது அவர் நித்திரை கொண்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதியும் அவர், சார்ஜா- கொழும்பு சேவையின் போது தமது அறையை தாழிட்டு நித்திரை கொண்டதும் பின்னர் அவசர கதவின் ஊடாக சென்று அவரை ஏனைய விமானிகள் எழுப்பிய சம்பவமும் குறிப்பிடத்தக்கது.


30. பாத்திரம் ஒன்றில் $\frac{2}{3}$ பங்கு நீர் உள்ளது மேலும் 4லீற்றர் நீர் ஊற்றியதும் பாத்திரம் நிறைந்தது எனின் பாத்திரம் கொள்ளும் நீரின் அளவு யாது?
1)12லீற்றர்　2)15லீற்றர்　3)10லீற்றர்

31. தொடக்கத்தில் உள்ள உருவை ஓர் ஆடியில் பார்க்கும் போது தோன்றும் வடிவத்தை தெரிவு செய்க



32. எண் ஒன்றில் இருந்து 6ஐ கழித்து வரும் விடையை மூன்றால் பெருக்கினால் வரும் விடை 12 எனின் அந்த எண் யாது?
1)10　2)8　3)6


33. அடுத்து வரும் உருவை தெரிந்து கோடிடுக



34. இலங்கை நேரப்படி மு.ப 9மணிக்கு கொழும்பில் இருந்து புறப்பட்ட ஆகாய விமானம் ஒன்று இங்கிலாந்து நேரப்படி பி.ப 5மணிக்கு இங்கிலாந்தை சென்றடைந்தது இலங்கை நேரம் மு.ப.5 மணியாகும் போது இங்கிலாந்து நேரம் மு.ப 1மணியாகும் விமானம் பயணத்திற்கு எடுத்த நேரம் யாது?
1)13 மணித்தியாலம்　2)10 மணித்தியாலம்　3)11 மணித்தியாலம்

35. பரீட்சை ஒன்றுக்கு தோற்றிய 26 மாணவர்களில் 18பேர் கணித பாடத்தில் சித்தியடைந்தனர். 16பேர் விஞ்ஞானப் பாடத்தில் சித்தியடைந்தனர் சில மாணவர்கள் இரு பாடங்களிலும் சித்தியடைந்தனர் இரு பாடங்களிலும் சித்தியடைந்த மாணவர்கள் எத்தனை பேர்?
1)5பேர்　2)8பேர்　3)6பேர்

36.



உருவுடன் பொருந்தும்படி சொற்கள் அடங்கிய விடையை தெரிவு செய்க
1)மகரந்தச்சேர்க்கை - வலை - பறத்தல்
2)ஆறுகால் - முட்டை - டெங்கு
3)உறிஞ்சுதல் - நீர் - வாந்திபேதி

37. உடலிற்குத் தேவைப்படும் விற்றமினைப் பெற்றுக்கொடுப்பது?
1)பயறு,பருப்பு
2)முட்டை, பால்
3)மரவள்ளி,கடலை
4)கரட்,போஞ்சி

நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (01)01.2 | 02.1 | 03.1 | 04.2 | 05.3 | 06.3 | 07.3 |
| 08.2 | 09.3 | 10.3 | 11.1 | 12.1 | 13.1 | 14.1 |
| 15.3 | 16.3 | 17.2 | 18.2 | 19.2 | 20.1 | (02)01.86 |
| 02.93 | 03.99 | 04.510 | (03).01.சதீஸ் | 02.அபி | 03.ரவி | (04)01.786 |
| 02.981 | 03.824 | (05)01.40 | 02.6 | 03.தரம் - 04 | (06)01.08 | 02.02 |
| 03.14 | 04.900 | 05.112 | 06.32 | 07.74,80 | 08.7.30 | 09.953 |
| 10.6cm | 11.90ரூபா | 12.183 | (07)01.2 | 02.1 | 03.2 | 04.3 |
| 05.2 | 06.1 | 07.1 | 08.2 | 09.3 | 10. | 11.1 |
| 12.1 | 13.3 | 14.3 | 15.1 | | | |

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை முன்னோடி - 2015　பகுதி - I　1 மணி 15 நிமிடம்




# கல்வி முரசு


எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

*(01)ஒரே கூட்டத்தை சேர்ந்த பொருட்கள் இடம்பெறும் விடையை தெரிவு செய்க*

01.



02.



*(02)3ஆம், 4ஆம் வினாக்களில் A,B இடத்திற்கு வரவேண்டிய இலக்கங்களை தெரிவு செய்க*

03. | 3 | 6 | 5 | + | A | 9 | = | B | 3 | 4 |

1)5,2　2)6,4　3)4,4


04. | 3 | A | 8 | - | 2 | 9 | 5 | = | 0 | 7 | B |

1)6,3　2)8,3　3)7,3


05. முதலில் தரப்பட்டுள்ள வாக்கியத்துடன் பொருந்துகின்ற விடையை தெரிவு செய்க
நேற்று இடியுடன் கூடிய மழை பெய்தது
1)சிறுவர்கள் கடற்கரையில் பட்டம் விட்டனர்
2)வெள்ளத்தினால் பல குடும்பங்கள் பாதிப்புற்றனர்
3)குளங்கள் வற்றி வறண்டு காணப்பட்டன

06. தரப்பட்டுள்ள கவிதையில் வெற்றிடத்திற்குரிய விடையை தெரிந்து கீறிடுக
வயலை உழுதல்
நாற்று நடுதல்
அரிவி வெட்டுதல்　1)போடுதல்　2)மிதித்தல்　3)கட்டுதல்
சூடு ....................

07.



சதுரத்தின் ஒரு பக்க நீளம் 4சதுரcm ஆகும். சதுரத்தில் நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவு யாது?
1)4சதுரcm
2)2சதுரcm
3)3சதுரcm

08. 

செவ்வகத்தின் ஒரு பக்க நீளம் 2m 40cm ஆகும். செவ்வகத்தின் சுற்றளவு 7m எனின் செவ்வகத்தின் அகலம் யாது?
1) 1m 40cm 2) 1m 10cm 3) 1m 80cm

09. 10ரூபா காசுத்தாள் தொடக்கம் 1000ரூபா வரையான காசுத்தாள்களை ஒவ்வொன்று வீதம் எடுத்தால் அவற்றின் மொத்த பெறுமதி யாது?
1) 1830ரூபா 2) 1680ரூபா 3) 1720ரூபா

10. வீதிஅபிவிருத்தி பணி ஒன்று இரு கட்டங்களில் செய்யத் தீர்மானிக்கப்பட்டது. முதல் கட்டத்திற்கு 8 மாதங்களும் இரண்டாம் கட்டத்திற்கு 10மாதங்களும் எடுக்கின்றன. வீதி அபிவிருத்தி பணிகள் 2014ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்டால் எந்த ஆண்டில் அபிவிருத்தி பணி முடிவடையும்?
1) 2017ம் ஆண்டு 2) 2015ம் ஆண்டு 3) 2016ம் ஆண்டு

11. ஆகாயவிமானம் ஒன்று காலை 7மணி 50நிமிடத்திற்கு புறப்பட்டு மு.ப 9மணிக்கு மாலைதீவை அடைந்தது. விமானம் பயணிக்க எடுக்க காலம் யாது?
1) 1மணி 30நிமிடம் 2) 1மணி 40நிமிடம் 3) 1மணி 10நிமிடம்

12. நாட்டின் பல பிரதேசங்களில் ஆறுகளும் அருவிகளும் வற்றிப்போகின்றன இதற்கான காரணமாக அமைவது
1) மக்கள் விவசாயத்திற்கு நீரை பயன்படுத்துகின்றமை
2) மக்கள் தொடர்ந்து மரங்களை வெட்டுகின்றமை
3) ஆற்றுநீரை மக்கள் குழாய்நீர் மூலம் பயன்படுத்துகின்றமை


13.




| | | | | |
|---|---|---|---|---|
| 9 | 18 | 36 | | 144 |

எண்கோலத்தில் வெற்றுக்கட்டத்திற்கு வரவேண்டிய எண் யாது?
1) 72 2) 90 3) 81


14. சிவாவின் வயதை கேட்டால் அவர் நேரடியாக சொல்லாமல் இவ்வாறு கூறினார் என் வயதில் உள்ள இரு எண்களையும் கூட்டினால் ஒன்பதாகும் அவ்விரு எண்களையும் இடம் மாற்றினால் என் வயதின் ஒன்பது கூடி விடும் அப்படியானால் சிவாவின் வயது யாது?
1) 45 2) 54 3) 36




15. A தராசு சம நிலையில் உள்ளது B தராசின் நிறை சமநிலையாவதற்கு குறைவான பக்கத்திற்கு இடப்பட வேண்டிய உருக்கள் எவை?




1)  2)  3) 

16. கீழே தரப்பட்டுள்ள மூன்று உருக்கள் ஒரு குறித்த ஒழுங்கு முறையில் அமைக்கப்பட்டுள்ளன அவ் ஒழுங்கு முறையில் அடுத்து வரும் உரு எது?



1)  2)  3) 


***(03) பாடலின் உதவியுடன் 17ஆம், 18ஆம் வினாக்களுக்கு விடை தருக***

மீன்கள் கோடி கோடி சூழ வெண்ணிலாவே - ஒரு
வெள்ளியோடம் போல வரும் வெண்ணிலாவே
வான வெங்கதிர் குளிக்கும் வெண்ணிலாவே - நித்தம்
பாற்கடலும் ஆடுவையோ வெண்ணிலாவே

17. பாடலின் படி வெண்ணிலாவை சூழ வருபவை எவை?
1) பறவைகள் 2) நட்சத்திரங்கள் 3) சூரியன்

18. வெண்ணிலா எது போல வருவதாக கூறப்படுகிறது
1) படகு போல 2) வெள்ளி போல 3) மீன்கள் போல

***(04) தரப்பட்ட கோட்டுப்படத்தின் உதவியுடன் 19ஆம், 20ஆம் வினாக்களுக்கு விடையை தெரிக***






19. தேங்காய் ஒன்றின் விலை யாது?
1) 35ரூபா 2) 40ரூபா 3) 32ரூபா

20. முட்டை ஒன்றின் விலை யாது?
1) 14ரூபா 2) 16ரூபா 3) 13ரூபா

21. 
உருவில் உள்ள உபகரணத்திற்கு பொருத்தமான சொல் யாது?
1) மட்பாண்டம்
2) விவசாயம்
3) அகழ்வுத்தொழில்

22. பெற்றோர் கூட்டத்திற்கு வருகை தந்தவர்களில் அதிகமானவர்கள் பெண்கள் அதன்படி
1) ஆண்கள் வருகை தரவில்லை
2) ஆண்களும் வருகை தந்தனர்
3) பெண்கள் மட்டுமே வருகை தந்தனர்


23. 



A கனவுருவிலுள்ள B அளவுடைய எத்தனை சதுர முகிகளை அடுக்க முடியும்?
1) 20 2) 12 3) 8


24. யூலை மாதம் 1ஆம் திகதி செவ்வாய்க்கிழமையாகும் ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும் வெள்ளிக்கிழமைகளிலும் கணனி வகுப்பு நடைபெறும் எனின் யூலை மாதத்தில் நடைபெற்ற கணனி வகுப்புக்கள் எத்தனை?
1) 8 2) 10 3) 9

25. கண்ணன் வீட்டில் இருந்து பாடசாலைக்கு சென்ற பயணப்பாதை காட்டப்பட்டுள்ளது அவன் திரும்பச் சென்ற பக்கங்கள் முறையே




1) வலது - இடது - இடது - வலது
2) வலது - இடது - வலது - இடது
3) இடது - வலது - இடது - வலது

26. A பெட்டியில் 25பந்துகள் உள்ளன. B பெட்டியில் 17 பந்துகள் உள்ளன. இரு பெட்டிகளிலும் உள்ள பந்துகளின் எண்ணிக்கை சமமாக வேண்டும் எனின் A பெட்டியில் இருந்து எத்தனை பந்துகளை B பெட்டியில் போட வேண்டும்
1) 4 2) 6 3) 5




27. 8 பேருக்கு 3 நாட்களுக்கு போதுமான உணவு 6 பேருக்கு எத்தனை நாட்களுக்கு போதுமானது
1) 6பேருக்கு 2) 8பேருக்கு 3) 4பேருக்கு

28. பெயராகவும், வினையாகவும் வரக்கூடிய சொற்கள் அடங்கிய விடை எது?
1) சிலை, குடை, வழி 2) பார், கரை, பாய் 3) மலை, அழை, ஓடு

29. புனிதா 2004ஆம் ஆண்டு மேமாதம் பிறந்தாள் 2014ஆம் ஆண்டு மார்ச் மாதம் புனிதாவின் வயது யாது?
1) 10ஆண்டுகள் 2மாதம்
2) 10ஆண்டுகள் 6 மாதம்
3) 9 ஆண்டுகள் 10 மாதம்

# தேசிய கல்வியியற்கல்லூரிகளின் அனுமதி முறையில் மாற்றம்

நாடளாவிய ரீதியில் உள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு மாணவர்களை அனுமதிக்கும் தேசியக் கொள்கையில் மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் உபாலி மாரசிங்ஹ தெரிவித்துள்ளார்.

கல்வியமைச்சின் புதிய மாற்றத்துக்கு அமைய இதுவரை தேசிய கல்வியியற் கல்லூரிகளை ஆரம்பக் கல்வித்துறைக்கு கலைப பிரிவு மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்குத் தமிழ்ப் பாடம் கட்டாயமாக்கப் பட்டிருந்தது. ஆனால் 2016 முதல் கணிதம், விஞ்ஞான, வர்த்தகத் துறைகளில் க.பொ.த.உயர்தரப் பரீட்சைகளில் சித்தி பெற்றோரும் ஆரம்பக் கல்வித் துறைக்கு இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

அத்துடன் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக மாவட்ட மற்றும் தேசிய மட்டங்களிலான தெரிவு முறைநிறுத்தப்பட்டு பிரதேச செயலக மட்டத்தெரிவு முறை அமுல்படுத்தப்படுகிறது.

அதேபோன்று ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பத் துறைகளுக்கான போட்டிப்பரீட்சை மூலமான தெரிவு முறை இரத்துச் செய்யப்பட்டு பிரதேச மட்டத்தில் கூடிய இஸட் புள்ளிகளைப் பெற்றோர் மேற்படி பாடநெறிகளுக்குத் தெரிவு செய்யப்படுவர். ஆரம்பக் கல்விக்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்களுள் ஆசிரியர் நியமனம் பெறுவோரில் தேசிய மட்டத்தில் நான்கு சிங்கள மொழி மூல ஆசிரியர்களும் தமிழ் மொழிமூலஆசிரியர் ஒருவரும் கொழும்பு லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையில் உள்ள ஆரம்பப் கல்விப்பரிவில் இணைக்கப்படுவதுடன் ஓய்வு பெறும்வரை ஆரம்பக் கல்வி ஆசிரியர்களை ஆரம்பப் பாடசாலையிலேயே கட்டாயம் கடமையாற்ற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## ஸ்ரீ ஜெய நீராவியடி வீரகத்தியானின் 4ஆம் நாள் திருவிழா இன்று



விநாயகனே! வெவ்வினைகள் தீர்ப்போனே!
ஆறுதலும் தேறுதலும் நீ எமக்குத் தருவாயே!
ஆனை முகத்தோனே! ஐங்கரனே! விநாயகனே!
தொப்பை அப்பனே! உந்தன் பக்தர்களைக் காப்பவனே!
மண்ணிலே மாந்தரெல்லாம் மகிழ்வுடன் வாழ்ந்திரவே!
திருவருள் புரிவாய் நீராவிப்பதி விநாயகனே!
ஓங்கார முதற்பொருளே ஞான கணபதியே!
திருக்காட்சி தந்தருள்வாய் திருவடியே சரணம் ஐயா!

# சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுக்க விசேட பொலிஸ் பிரிவு

மகளிர் மற்றும் சிறுவர்கள மீதான துஷ்பிரயோகங்களை தடுப்பதற்கு பிரதிப் பொலிஸ் மா அதிபர் தலைமையில் விசேட பொலிஸ் பிரிவொன்றை அமைக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஸி. சேனாநாயக்கா தெரிவித்தார்.

2012 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டுகளுக்குள் சிறுவர் மற்றும் யுவதிகள் பெண்கள் மீதான துஷ்பிரயோக சம்பவங்கள் 20 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக பொலிஸ் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இதை உடனடியாக கட்டுப்படுத்தும் நடவடிக்கையாகவே இந்த விசேட பொலிஸ் பிரிவு அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக நான் பிரதமருடன் பேசியுள்ளேன். நாடு முழுவதிலுமுள்ள நீதிமன்றங்களில் சிறுவர்,சிறுமியர,யுவதிகள் தொடர்பான வழக்குகள் 20 சதவீதமானதாக இருக்கின்றன. எனவே இந்த வழக்குகளை விசாரணை செய்ய தனியான ஒரு தினத்தினை ஒதுக்க வேண்டும். அல்லது தனியான நீதிமன்றங்களை அமைக்க வேண்டுமெனவும் நாங்கள் நீதியமைச்சரிடம் கோரிக்கை விடுக்கின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பிரதமரை திட்டும் அளவிற்கு சுதந்திரம் நிலைநாட்டப்பட்டுள்ளது

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



நாட்டின் பிரதமராகிய என்னையே நாடாளுமன்றில் கெட்ட வார்த்தையினால் திட்டும் அளவுக்கு நாட்டில் சுதந்திரமும், ஜனநாயகமும் நிலைநாட்டப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கத்தின் கீழ் சமூகத்தில் எடுத்துக்காட்டக்கூடிய மாற்றங்கள் இடம் பெறுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குளியாப்பிட்டிய நகரசபையில் இடம்பெற்ற ஐக்கிய தேசிய கட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே பிரதமர் ரணில் விககிரமசிங்க இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் சுதந்திரம் மற்றும் ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரதமராகிய என்னையே நாடாளுமன்றில் கெட்ட வார்த்தையினால் திட்டும் அளவுக்கு நாட்டில் சுதந்திரமும், ஜனநாயகமும் நிலைநாட்டப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார். மத ஸ்தலங்களுக்குச் சென்று உயிரிழந்த உறவுகளை நினைவு கூருவதற்கான சுதந்திரம் அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கில் கடந்த வாரத்தில் உயிரிழந்தோரை நினைவு கூர்ந்தது, தீவிரவாதம் மீண்டும் தலைதூக்குவதற்கான அர்த்தம் இல்லை என பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

பாடசாலை மாணவியை கூட்டு வன்புணர்வுக்குட்படுத்தி கொலை செய்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களின் மூலம் பிளவடைந்து காணப்பட்ட நாடு தற்போது ஒன்றுபட்டுள்ளதனைத் தெளிவாக காண முடிந்ததென பிரதமர் ரணில் மேலும் தெரிவித்துள்ளார்.

# மகிந்தவின் நாளாந்த செயற்பாடு விபரம் வெளியிடும் முதல்வர் ஹரின்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நாளாந்த செயற்பாடுகள் தொடர்பாக ஊவா மாகாண முதலமைச்சர் ஹரின் பெர்னாண்டோ விபரித்துள்ளார்.

நேற்று முன்தினம் பண்டாரவளையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட போதே, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நாளாந்த செயற்பாடுகள் தொடர்பில் அவர் விபரித்தார்.

முன்னாள் ஜனாதிபதி தொடர்ந்தும் பேராசையுடன் செயற்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் உயர்ந்த இடத்திற்கு சென்று கீழ் நிலைக்கு வருவதற்கு யாரும் விரும்ப மாட்டார்கள். ஆனால் இலங்கை வரலாற்றில் அவ்வாறான ஒருவர் மாத்திரமே இருக்கின்றார். அவர் தான் மகிந்த ராஜபக்ஷ.

அவரின் நாளாந்த செயற்பாடுகள் குறித்து ஒரு சகோதரர் எனக்கு குறுஞ்செய்தியொன்றை அனுப்பினார்.

காலையில் எழுந்தவுடன் அவர் வசியம் செய்யும் பந்தை சுழற்றுகிறார். மலர் தட்டை எடுத்துக்கொண்டு விகாரைக்குச் செல்கின்றார். அதனை அடுத்து பிரதமர் பதவியை வழங்குமாறு கோரி அனைவரிடமும் கெஞ்சுகிறார்.

மோசடிக்கார நண்பர்களை சந்திப்பதற்கு பழங்களை எடுத்துக்கொண்டு சிறைச்சாலைகள் தோறும் செல்கிறார். தொடர்ந்து தம்மை பழிவாங்க முற்படுகிறார்கள் எனத் தெரிவித்து மாலைப் பொழுதில் மீண்டும் அழுகின்றார்.

தம்மால் மோசடி செய்யப்பட்ட ரில்லியன் கணக்கான நிதி தொடர்பாக இரவு நேரங்களில் புதல்வர்களுடன் உரையாடிவிட்டு நடுக்கத்துடன் மீண்டும் வசிய பந்தை சுழற்றிவிட்டு நித்திரை கொள்கிறார். என்றார் முதலமைச்சர் ஹரின்.

# அரசமொழி திறனாய்வு எழுத்துப்பரீட்சை 31 இல்

அரச மொழி திறனாய்வு எழுத்துப் பரீட்சைகளை எதிர்வரும் 31 ஆம் திகதி நாடத்துவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள்திணைக்களம் அறிவித்துள்ளது.

திணைக்களத்தின் ஆணையாளர் டபிள்யு.எம்.என்.ஜே.புஸ்பகுமார இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அரச மொழி திறனாய்வு எழுத்துப் பரீட்சைகளுக்காக நாடளாவிய ரீதியாக 505 மத்திய நிலையங்களில் 65 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். இந்தநிலையில், பரீட்சைகளுக்கான அனுமதிப் பத்திரங்களைப் பெறாத விண்ணப்பதாரிகள் உடனடியாக பரீட்சைகள் திணைக்களத்தை அணுகி கோரிக்கைகளை முன்வைக்க முடியும் என ஆணையாளர் தெரிவித்தார்.

# இந்திய போலி நாணயத்தாள் இரண்டு சந்தேக நபர்கள் கைது

போலி இந்திய நாணயத்தாள் பாவனையில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் இருவர் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜா-எல ரயில் ஒழுங்கையில் வைத்தே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வத்தளை - எதெரமுல்ல பகுதியைச் சேர்ந்த 28 வயதான சந்தேகநபரிடம் இருந்து போலி ஆயிரம் ரூபா நாணயத்தாள்கள் 25 மீட்கப்பட்டுள்ளது.

மற்றைய சந்தேகநபர் திருகோணமலை பகுதியைச் சேர்ந்தவர் என்பதுடன் போலி ஆயிரம் ரூபா நாணயத்தாள் 156, போலி இந்திய ஐநூறு ரூபா நாணயத்தாள் 66 அவரிடம் இருந்து மீட்கப்பட்டுள்ளதாக கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

மீட்கப்பட்ட இந்திய போலி நாணயத்தாள்களின் இலங்கை பெறுமதி இரண்டு இலட்சத்து 71,600 ரூபா என தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்கள் குறித்து குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வாய்ச்சுகாதார ஆய்வு இன்று நாடளாவிய ரீதியில்

நான்காவது தேசிய வாய்ச் சுகாதார ஆய்வு இன்று ஆரம்பமாகவுள்ளது.

இவ் ஆய்வில் கர்ப்பிணிகளுக்கு வாய் நோய்த் தவிர்ப்பு வேலைத்திட்டம், பாடசாலைச் சிறுவர் பற்சுகாதார மேம்பாட்டுத்திட்டம் போன்றன தொடர்பில் கவனம் செலுத்தி கடந்த ஆய்விலிருந்து இதன் முன்னேற்றத்தைப் பரிசீலிப்பதற்கு இம்முறை ஆய்வு பயன்படும் எனவும் இதற்கான ஏற்பாடுகளை சுகாதார அமைச்சு மேற்கொண்டிருப்பதாகவும் அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இவ் ஆய்வு அடுத்தாண்டு மே மாதம் 26 ஆம் திகதி வரையான ஓராண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ளது எனவும் வாய்ச் சுகாதாரம் தொடர்பான முதலாவது ஆய்வு 1984 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டது. அதன் பின்னர் இரண்டாவது ஆய்வு 1994 ஆம் ஆண்டிலும் மூன்றாவது ஆய்வு 2003 ஆம் ஆண்டிலும் நடைபெற்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

இம் முறை ஆரம்பமாகவுள்ள நான்காவது வாய்ச்சுகாதார ஆய்வு சுகாதாரம் மற்றும் உள்நாட்டு மருத்துவ அமைச்சர் டொக்டர் ராஜித சேனாரட்ணவின் ஆலோசனையின் அடிப்படையில் ஆரம்பமாகவுள்ளது.

இவ் ஆய்வு இலங்கையில் நடைமுறையில் இருக்கும் சமூக பற் சிகிச்சை நிகழ்ச்சித் திட்டம் மற்றும் பற்சிகிச்சைத் திட்டம் என்பவற்றின் நிலைமைகளை மதிப்பிடுவதற்கு பெரிதும் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2003 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட ஆய்வின்படி 5-6 வயதுக்கு இடைப்பட்ட சிறுவர்களில் 65 வீதமும் 35- 44 வயதுக்கிடைப்பட்டவர்களுக்கு 90 வீதமான அளவு பற்சிதைவு நோயும் முதியவர்களில் 90 வீதமானவர்களுக்கு முரசு கரைதல் நோயும் காணப்படுவதாக இனங்காணப்பட்டது.

# பாரிய மனிதப் புதைகுழி மலேசியாவில் கண்டுபிடிப்பு



(கோலாலம்பூர்)

தாய்லாந்து நாட்டு எல்லையை ஒட்டியுள்ள மலேசிய நிலப்பரப்பில் நேற்று 100 இற்கும் மேற்பட்ட எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து அந்நாட்டில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம் எலும்புக்கூடுகள் தோண்டப்பட்ட வடக்கு மலேசிய எல்லைப்பகுதியில் 139 கல்லறை தளங்களும், 28 கடத்தல் முகாம்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டின் மூத்த பொலிஸ அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

கண்டுபிடிக்கப்பட்ட 139 கல்லறை தளங்களிலும், எத்தனை சடலங்கள் உள்ளது பற்றி எதுவும் கூறமுடியாது என்று மலேசியப் பொலிஸ் அதிகாரி காலித் அபுபக்கர் கூறினார்.

கடத்தல் முகாம்கள் ஒவ்வொன்றிலும் 300 பேர் வசித்து வருவதாகவும் காலித் மேலும் கூறியுள்ளார். அப்பகுதியில் கண்டெடுக்கப்பட்ட சடலங்களும், தற்போது கடத்தல் முகாம்களில் வசிப்பவர்களும், மியான்மர் மற்றும் பங்களாதேஷ் நாடுகளில் இருந்து அடைக்கலம் தேடி வந்தவர்களாக இருக்கலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

## நோபல் பரிசு பெற்ற கணித மேதை

# அமெரிக்காவில் கார் விபத்தில் பலி



நோபல் பரிசுபெற்ற கணித மேதை ஜோன் நாஷ் கடந்த ஞாயிற்றுக்கிழமை அமெரிக்காவில் நடந்த கார் விபத்தில் காலமானார்.

"A Beautiful Mind" என்கிற உலகப்புகழ்பெற்ற திரைப்படம் அவரது வாழ்க்கையின் அடிப்படையில் எடுக்கப்பட்டது.

86 வயதான ஜான் நாஷும் அவரது மனைவி அலிசியாவும் பயணம் செய்துகொண்டிருந்த டாக்ஸி சாலைத்தடுப்பில் மோதி விபத்துக்குள்ளானதில் இருவருமே இறந்துவிட்டதாக பொலிஸ் தெரிவித்துள்ளது.

Paranoid schizophrenia என்னும் தீவிர மன அழுத்தநோயால் தன் வாழ்நாளின் பெரும்பகுதி அவதிப்பட்ட ஜோன் நாஷ் 1994 ஆம் ஆண்டு பொருளாதாரத்திற்கான நோபல் பரிசை வென்றார்.

Game theory என்று ஆங்கிலத்தில் சுருக்கமாக அழைக்கப்படும் கணித சூத்திரத்தில் ஜோன் நாஷ் செய்துக்காட்டியிருக்கும் ஆழமான ஆய்வுப்பணியும் அதனால் கிடைத்திருக்கும் விளக்கங்களும் அவருக்குப் பிறகான பல தலைமுறைகளைச் சேர்ந்த கணிதவியலாளர்கள், பொருளாதார நிபுணர்கள் மற்றும் விஞ்ஞானிகளுக்கு வழிகாட்டியாக நின்று பயன்படும் என்று அவர் பணிபுரிந்த பிரின்ஸ்டன் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

# அதிக எடையில் பீற்றூட் விவசாயி சாதனை




உத்தரப்பிரதேச மாநிலத்தில் ஒவ்வொன்றும் சுமார் 4 கிலோ எடை கொண்ட பீற்றூட் கிழங்குகளை விளைவித்து விவசாயி ஒருவர் சாதனை படைத்துள்ளனர்.

சாதாரணமாக ஒரு பீற்றூட் 250 கிராம் எடை கொணடதாக மட்டுமே இருக்கும். ஆனால் ராம்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயியான புல்சிங் என்பவர் அதைவிட 8 மடங்கு எடைகொண்ட பீற்றூட்டுகளை விளைவித்துள்ளார்.

கடந்த டிசம்பர் மாதம் விதைத்து, தற்போது, சுமார் ஒரு ஏக்கர் நிலத்தில் 5 ஆயிரம் கிலோ பீற்றூட்டுகளை விளைவித்து சாதனை படைத்துள்ள இவர், பருவமற்ற காலத்தில் பெய்த பெருமழையால் சில பயிர்கள் நாசமாகி விட்டன. இல்லையெனில், ஒரு ஏக்கரில் 7 ஆயிரம் கிலோ விளைச்சல் கிடைத்திருக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

# 201 புதிய “அம்மா” உணவகங்கள் ஜெயாவால் திறந்துவைப்பு



தமிழகத்தின் முதல்வராக மீண்டும் பொறுப்பேற்றுக்கொண்டுள்ள ஜெயலலிதா, நேற்று முன்தினம் தமிழகம் முழுவதும் 201 புதிய “அம்மா” உணவகங்களை வீடியோ கான்பரன்ஸ் மூலம் திறந்து வைத்தார்.


மேலும் 5 புதிய திட்டங்களிலும் கையெழுத்திட்டார். குறைந்த விலையில் துவரம் பருப்பு மற்றும் உளுத்தம் பருப்பு விற்பனை செய்யும் திட்டத்தையும் ஆரம்பித்து வைத்தார்.

தமிழக முதல்வராக 5 ஆவது முறையாக கடந்த சனிக்கிழமை பதவியேற்ற ஜெயலலிதா, நேற்று முன்தினம் முதல்முறையாக தலைமைச் செயலகம் வந்தார்.

பிற்பகல் 3.00 மணி அளவில் வந்த முதல்வரை சட்டப்பேரவைத் தலைவர் ப.தனபால், அரசு ஆலோசகர் ஷீலா பாலகிருஷ்ணன், தலைமைச் செயலாளர் ஞானதேசிகன், டி.ஜி.பி. அசோக்குமார், சென்னை மாநகர பொலிஸ் கமிஷனர் ஜோர்ஜ், உளவுப்பிரிவு ஐ.ஜி கண்ணப்பன் ஆகியோர் பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர்.

சட்டப்பேரவை கட்டடத்தின் முதல் தளத்தில் உள்ள தனது அறைக்குச் சென்ற முதல்வர் ஜெயலலிதா, முறைப்படி பொறுப்பேற்றுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து தமிழகம் முழுவதும் கட்டப்பட்டுள்ள 201 அம்மா உணவகங்களின் திறப்பு விழா நிகழ்ச்சி நடந்தது.

# அனல் காற்றினால் இந்தியாவில் அதிகரிக்கும் உயிரிழப்புக்கள்



(ஆந்திரா)

இந்தியா முழுவதும் அனல் காற்றிற்கு பலியானோரின் எண்ணிக்கை 432 ஆக அதிகரித்துள்ளது. கடந்த சில நாட்களாக இந்தியா முழுவதும் அனல் காற்று வீசிவரும் நிலையில், வெயிலின் தாக்கத்தால் உயிரிழப்புகள் தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றன.

தெலுங்கானா மற்றும் ஆந்திரப்பிரதேசத்தில் மட்டும் கடந்த இரண்டு நாட்களில் சுமார் 145 பேர் உயிரிழந்தனர். ஆந்திராவில் அதிகபட்சமாக பிரகாசம் மாவட்டத்தில் மட்டும் 57 பேர் வெயில் தாக்கத்தினால் உயிரிழந்துள்ளனர். இந்த இரு மாநிலங்களிலும் தொடர்ந்து அனல் காற்று வீசும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் வெப்பநிலை 40 டிகிரி செல்ஷியஸுக்கும் அதிக அளவிலேயே பதிவாகியுள்ளது. புது டில்லியில் அதிகபட்சமாக 43.5 டிகிரி செல்ஷியஸ், ஹிஸ்ஸாரில் 44 டிகிரி செல்ஷியஸ், ராஜஸ்தான் மாநிலத்தின் ஜெய்சால்மர் உள்ளிட்ட பகுதிகளில் 45.6 டிகிரி செல்ஷியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளது.

# ஐ.எஸ். தீவிரவாதிகள் அமெரிக்காவை தாக்க வாய்ப்பு

## பிரித்தானிய நாளிதழ் எச்சரிக்கை

ஐ.எஸ். தீவிரவாதிகள் அமெரிக்காவைத் தாக்கும் வாய்ப்பு அதிகமாக உள்ளது என்று பிரித்தானிய நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஐ.எஸ். அமைப்பின் இதழான “டபிக்”கில் வெளியான அறிவிப்பில், நங்கள் அமைப்பு மிகப் பெரிய அளவில் விரிவடைந்து வருவதாகவும், 12 மாதங்களுக்குள் பாகிஸ்தானிலிருந்து அணு ஆயுதங்களை வாங்குவோம் எனவும் கூறியுள்ளனர்.

இந்நிலையில் இந்தத் தகவலை மேற்கோள் காட்டி, பிரித்தானியாவின் “டெலிகிராப்” நாளிதழ் வெளியிட்டுள்ள செய்தியில், பாகிஸ்தானில் உள்ள ஊழல் அதிகாரிகளுடன் தொடர்புடைய ஆயுதத் தரகர்கள் மூலமாக அணு ஆயுதத்தை ஐ.எஸ் தீவிரவாதிகள் வாங்க வேண்டும்.

அவ்வாறு பெறப்படும் அணு ஆயுதத்தை லிபியா, நைஜீரியா, மெக்ஸிகோ வழியாக அமெரிக்காவுக்குக் கடத்திச் செல்லலாம்.

இந்தத் திட்டம் கற்பனைக்கு எட்டாததாக உள்ளது எனத் தோன்றக்கூடும்.

ஆனால் மேற்கத்திய உளவு அமைப்புகள் இவ்வாறு நடக்கும் என அஞ்சுகின்றன. இவ்வாறு நடக்குமா என்ற நிலை இருந்தது போக, ஒரே ஆண்டில் இது நடக்கலாம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

அமெரிக்கா மீது மாபெரும் தாக்குதலை நிகழ்த்த ஐ.எஸ் திட்டமிட்டு வருகிறது என்பதில் எந்த இரகசியமும் இல்லை என்றும் “டெலிகிராப்” பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

# இஸ்ரேல் முன்னாள் பிரதமருக்கு ஊழல் வழக்கில் சிறைத்தண்டனை

இஸ்ரேல் முன்னாள் பிரதமர் எஹுட் ஓல்மர்ட் மீதான ஊழல் வழக்கில் அவருக்கு 8 மாத சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு மற்றொரு ஊழல் வழக்கில் 6 வருடச் சிறை தண்டனை விதிக்கப்பட்ட ஓல்மர்ட், அந்நாட்டு வரலாற்றில் ஊழல் குற்றச்சாட்டுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட முதல் பிரதமர் என்ற பெருமையை பெற்றார். எனினும் இத்தண்டனைக்கு எதிராக அவர் மேன்முறையீடு செய்துள்ளார். தற்போது வேறொரு ஊழல் வழக்கில் அவருக்கு 8 மாத சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் உள்ள தனது ஆதரவாளர் ஒருவரிடமிருந்து கடிதம் மூலம் பணம் பெற்றதற்காக ஓல்மர்ட்டுக்கு தற்போது தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டுவரை ஓல்மர்ட் பிரதமராக பதவி வகித்தது குறிப்பிடத்தக்கது

# 400 பேரைக் கொன்றது ஐ.எஸ்.

(பால்மைரா)

சிரியாவின் புராதான நகரமான பால்மைராவை கடந்த புதனகிழமை கைப்பற்றிய ஐ.எஸ். தீவிரவாதிகள், குழந்தைகள், பெண்கள் உள்பட 400 பேரை கொன்று குவித்துள்ளதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

டட்மூர் என்று அழைக்கப்படும் பால்மைரா நகரின் பல பகுதிகளில் இறந்தவர்களின் பிரேதங்கள் சிதறிக் கிடப்பதாக தெரிவிக்கும் இந்தச் செய்திகள், இங்குள்ள ரோமானியப் பேரரசு காலத்து பழம்பெருமை வாய்ந்த நினைவுச் சின்னங்களை அழித்து, தரைமட்டமாக்க ஐ.எஸ். தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளதாகவும் குறிப்பிடுகின்றன.

# புங்குடுதீவு கொலையாளிகளுக்கு உச்சக்கட்ட தண்டனை வேண்டும்

புங்குடுதீவு மாணவி வித்தியா சிவலோகநாதனின் மீதான வன்முறை மற்றும் அவர் படுகொலை செய்யப்பட்டமை போன்றவற்றை நாம் வன்மையாகக் கண்டித்திருக்கிறோம் என்று ஈ.பி.டி.பி. வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்தக் குற்றச்செயல்களைச் செய்தவர்களையும் இதனுடன் தொடர்பு பட்டவர்களையும் சட்டத்தின் முன் நிறுத்தி, தண்டனைகளை வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளோம். இத்தகைய செயல்களால் தனியாக ஒருவரோ ஒரு குடும்பமோ மட்டும் பாதிப்படைவதில்லை. ஒட்டுமொத்த சமூகத்தையும் இந்தச் செயல்கள் பாதிக்கின்றன. சமூகத்தின் அமைதியைக் குலைத்து, அதன் நிம்மதியையும் நம்பிக்கையையும் சிதறடிக்கின்றன.

வித்தியாவின் படுகொலை தமிழ் மக்களின் மனங்களை மட்டுமல்ல, யாழ்ப்பாணச் சமூகத்தை மட்டுமல்ல, ஒட்டுமொத்த இலங்கையையும் அதற்கப்பால் முழு உலகையும் பாதிப்படைய வைத்துள்ளது. ஆகவேதான் இத்தகைய செயல்களைச் செய்வோர் சட்டத்தின் முன்னே நிறுத்தப்பட்டு, முறையான நீதி விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு உயர்ந்தபட்சம் தண்டிக்கப்பட வேண்டும் என்று கேட்கிறோம்.

ஆனால், இந்தப் படுகொலையுடன் தொடர்புடைய குற்றவாளிகளைக் காப்பாற்றும் வகையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர் ஒருவர் செயற்பட்டிருக்கிறார். இதை மக்கள் அறிந்து அவருக்கு எதிராக களமிறங்கிப் போராட்டங்களை நடாத்தியும் உள்ளனர்.


இவையெல்லாம் இன்று உலகமறிந்த உண்மைகள். இதனால் தமது அரசியல் நலன்கள் பாதிக்கப்படும் என்று அச்சமடைந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தற்போது இந்தப் படுகொலையைப் பற்றி பொய்யான கதைகளைப் புனைந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தப் படுகொலையைப் பற்றி முழு உண்மைகளையும் அறிந்த மக்களை முட்டாள்களாக்கும் வகையில், தமது பொய்களைச் சொல்லி வருகிறார்கள். இந்தப் படுகொலையை ஈ.பி.டி.பி.யே செய்தது என்ற மாதிரியான தோற்றத்தை உருவாக்கிப் பழியை எம்மீது சுமத்தி விட்டுத் தாம் தப்பி விடவும் தமது அரசியல் ஆதாயங்களைக் காப்பாற்றிக் கொள்ளவும் முனைந்து கொண்டிருக்கிறார்கள்.

இது உண்மைக்கும் உண்மையை ஆதாரமாகக் கொண்டு வாழும் சமூகத்துக்கும் செய்கின்ற துரோகமாகும். அத்துடன் சட்டத்தை ஏமாற்றி, குற்றவாளிகளைத் தண்டனையிலிருந்து காப்பாற்றுவது நீதிக்கு எதிரான செயலாகும். மொத்தத்தில் மக்கள் விரோதப் போக்கை வளர்த்து விடும் நடவடிக்கையாக இது அமைகிறது. பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியைப் பெற்றுக்கொடுக்கப் போராட வேண்டியவர்கள், அந்த மக்களுக்கு இவ்வாறான துரோகம் இழைப்பதை யாரும் அனுமதிக்க முடியாது. மக்கள் இந்தக் கயமைத்தனத்தைக் கண்டு எதிர்க்க வேண்டும். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் இந்த நடவடிக்கையை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

குற்றச்செயல்களில் எமது ஆதரவாளர்களோ கட்சி உறுப்பினர்களோ ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்ட சந்தர்ப்பங்களில் எல்லாம் நாம் சட்டத்துக்கும் மக்களுக்கும் மதிப்பளித்து முறையான நீதி விசாரணைக்கும் சட்ட நடவடிக்கைக்கும் திறந்த மனதுடன் இடமளித்திருக்கிறோம் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். நீதியின் முன்னே அனைவரும் சமம் என்பதை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் எமது அன்பான மக்களும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

# கெட்ட வார்த்தையைத் தேடினேன் கிடைத்தால் திட்டித் தீர்த்திருப்பேன்



பிரத்மர் ரணிலை திட்டியதனை போன்று வேறு தகாத வார்த்தைகள் தெரிந்திருந்தால் அதனையும் பயன்படுத்தி திட்டியிருப்பேன் என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றிற்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தின் நன்மைக்காகவே தான் அவ்வாறான வார்த்தைகளை பயன்படுத்தினேன். எப்படியிருப்பினும் எனக்கும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிற்கும் இடையில் எவ்வித முரண்பாடுகளும் கிடையாது.

நாடாளுமன்றத்தில் இவை ஒரு சாதாரணமான விடயமாகும். அந்த நேரத்தில் ஏற்பட்ட அளவுக்கு அதிகமான கோபம் காரணமாகவே இவ்வாறு பேசினேன். நான் அவ்வாறு திட்டியதற்காக ஒரு போதும் கவலைப்படுவதில்லை.

குறித்த சந்தர்ப்பத்தின் போது நான் பயன்படுத்தியமை வெறும் கடுமையான வார்த்தைகளை மாத்திரம் அல்ல, அவரை தாக்கும் வகையிலான வார்த்தைகளைத்தான் பயன்படுத்தினேன்.

அதனையும் விட கடுமையான வார்த்தைகள் தெரிந்திருந்தால் அதனையும் நான் பயன்படுத்தியிருப்பேன்.

பிரதமர் நடந்து கொண்ட முறையும் அவ்வாறானதே. நான உரையாற்றுவதற்காக ஒதுக்கப்பட்ட நேரம் அது. பிரதமர் என்னைப் பேச விடாமல் அமர வைக்கப் பார்த்தார் எனவே தான் நான் அவ்வாறு பேசினேன்.

பிரதமர் கடவுள் அல்ல என்றாலும் சட்டதிட்டங்களுக்கும், சம்பிரதாயங்களுக்கும் அமையவே செயற்பட வேண்டும். பிரதமர் யானைத் தலையுடனே செயற்படுகின்றார்.

என்னிடம் போன்று எத்தனை பேரிடம் அவர் அவ்வாறு நடந்து கொண்டுள்ளார். இவ்வனைத்தையும் பொறுமையுடன் பார்த்துக் கொண்டிருந்து இறுதியில் இவ்வாறு பேசிவிட்டேன்.

அதன் பின்னரும் நான் பிரதமரை சந்தித்தேன். நாங்கள் ஒருவருக்கு ஒருவர் சுமுகமாக கலந்துரையாடிக் கொள்ளவில்லை.

அவசியம் என்றால் கடமை நடவடிக்கைகளுக்காக கலந்துரையாடுவேன் என அவர் மேலும குறிப்பிட்டுள்ளார்.

# ரணில் மீதான பிரேரணை விரைவில் நாடாளுமன்றுக்கு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்வரும் சில தினங்களில் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் கையளிக்க நடவடிக்கை எடுத்து வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பு - நாரஹேன்பிட்டியிலுள்ள அபயராமயவில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றம் கலைப்பதற்கு முன்னர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் பிரதமர் ஒருவரை நியமித்துக் காட்டுவதாகவும் அவர் இதன் போது சவால் விடுத்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் எதிர்கொள்ளாத பல்வேறு வகையிலான நிதி மோசடிச் சம்பவங்கள் தற்போது முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக கடந்த கால நாடாளுமன்ற அமர்வுகளின் போது எதிர்க்கட்சிகளினால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் புறந்தள்ளப்பட்டன. இதன் காரணமாக வூராந்தம் பல மில்லியன் ரூபா நட்டத்தை இந்த அரசாங்கம் சந்தித்து வருகின்றது.

ஒரு நாட்டின் பொருளாதார முதுகெலும்பு மத்திய வங்கியே. ஆனாலும் இந்நாட்டின் மத்திய வங்கியின் ஆளுநர் முன் வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு அவரால் உரிய பதில் வழங்க முடியாதுள்ளது.

மத்திய வங்கியின் ஆளுநரை விலகச் சொன்னோம். எனினும் அவரை தற்காலிகமாக இடைநிறுத்திய அரசாங்கம், மீண்டும் பதவிக்கு அமர்த்தியது.

அதேவேளை, எதிர்வரும் தேர்தலுக்கு முன்னர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கமொன்றை அமைப்பதற்கான யோசனைக்கு கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பச்சைக் கொடி காட்டியுள்ளார்.

அதன்படி பிரதமர் பதவிக்கு உரித்துடைய நபரது பெயரை வெகு சீக்கிரத்தில் அறிவிப்போம் என்றார்.

# ஊறணியில் விபரீதம் இருவருக்கு வெட்டுக்காயம்

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை, ஊறணியில் நேற்றிரவு 7.30 மணியளவில் வீடு புகுந்து யுவதி ஒருவரை வெட்டிய இளைஞர் தனது கழுத்தையும் வெட்டிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஊறணியில் உள்ள யுவதியின் வீட்டுக்குச் சென்ற இளைஞன் அங்கு அவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதையடுத்து அவரை கத்தியால் வெட்டியதுடன் தானும் கழுத்தில் வெட்டியுள்ளார்.

வேம்படி, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த உதயகுமார் லவன் (வயது - 20), ஊறணியைச் சேர்ந்த புவனேந்தி சதினயா (வயது - 19), ஆகிய இருவருமே இதில் படுகாயமடைந்து மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (18)

## பரவுகிறது...

கொழும்பு, பதுளை, கேகாலை, மொனராகலை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய பகுதிகளில் இன்ப்ளூவன்சா ஏ.எச்.1 என்.1 வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் பதிவாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கர்ப்பிணிப் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் காய்ச்சல் காணப்படுமிடத்து, தாமதமின்றி சிகிச்சைகளை பெற்றுக்கொள்ள வேண்டுமென டாக்டர் பபா பலிஹவடன கோரியுள்ளார்.

## யாழ். வன்முறைக்கு...

ஒருவர் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்தின் போது முழு இந்திய நாடுமே கொந்தளித்தது.

ஜனநாயக சூழலில், தமது சமூகத்தைப் பாதிக்கின்ற சம்பவங்கள் நடைபெறும்போது மக்கள் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்த முனைவது இயல்பு.

யாழ்ப்பாணத்தில்கூட மக்கள் தங்களது உணர்வுகளை அமைதியான முறையிலேயே வெளிப்படுத்த ஆரம்பித்திருந்தனர். ஆனால் இடைநடுவில் இதனை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட சில சந்தர்ப்பவாத சுயநலமிகள், அதனை ஒரு வன்முறை வடிவமாகக் காட்ட முனைந்துள்ளனர். பொதுவாக, இவ்வாறு இடம்பெறுவது தென்பகுதிக்கு ஒன்றும் புதிதல்ல.

மேற்படி மாணவியின் கொலை தொடர்பான விசாரணைகள் பாரபட்சமற்ற முறையில் நடைபெற்று, குற்றவாளிகள் கடுமையான தண்டனைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும். இவர்களுக்கு வழங்கப்படும் தண்டனையானது ஏனையவர்களுக்கு ஒரு பாடமாக அமையவேண்டும் என நாம் கேட்டிருக்கின்றோம்.

அதேநேரம், எமது நாட்டின் சட்டத்தை மீறிய வகையிலான சில கருத்துக்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும், அரசின் பிரதி அமைச்சர் ஒருவரும் கூறி, தூண்டிவிடப்பட்ட சிலரும் இவ்வாறான குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளதாகவும் அறியமுடிகிறது.

எனவே, இங்கு வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் எமது அப்பாவி பொதுமக்கள் அல்லர். ஒரு சில சுயநல அரசியல் வாதிகளின் அடியாட்களே ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இதனை எமது மக்கள் மேற்கொண்ட வன்முறையாக உருவாக்கம் செய்வது தவறானது என்றும் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# சுங்கப் பணிப்பாளர் திடீர் இராஜினாமா

இலங்கை சுங்கத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம், பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஜகத் பீ விஜேவீர நேற்று தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார். பதவி விலகல் கடிதம் அமைச்சு செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட காரணங்களுக்காக இவ்வாறு பதவியை இராஜினாமா செய்வதாக விஜேவீர தெரிவித்துள்ளார். நேற்றைய தினம் பதவி விலகல் கடிதத்தை ஒப்படைத்த விஜேவீரவின், இராஜினாமா ஏற்றுக் கொள்ளப்பட்டதா என்பது குறித்து அரசாங்கம் அறிவிக்கவில்லை.

## நாணய...

செய்யப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி ஆகியவற்றிடமும் இது குறித்து ஏற்கனவே முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் சர்வதேச நாணய நிதியத்தின் மேலதிக பணிப்பாளர்களில் ஒருவராகவும் கடமையாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

மத்திய வங்கியின் ஆளுநர் இந்த மோசடிகளுக்கு பதில் சொல்ல வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடமராட்சியில்...

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்திருந்தனர். பொலிஸாரின் விண்ணப்பம் தொடர்பாக ஆராய்ந்த பருத்தித்துறை மாவட்ட நீதிபதி பொலிஸாருக்குத் தெரிவிக்கையில், ஜனநாயக நாட்டில் ஊர்வலம் நடத்த எவருக்கும் உரிமையுண்டு.

ஊர்வலத்தில் அசம்பாவிதங்கள், வன்முறைகள், பொதுமக்கள் மற்றும் அரச சொத்துக்களுக்குச் சேதம் விளைவிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்றால் சம்பந்தப்பட்டோரை உடன் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதோடு, ஊர்வலத்தின் பாதுகாப்பையும், பொதுமக்களின் பாதுகாப்பையும் பொலிஸார் உறுதிப்படுத்தவேண்டும் என்றார். (18)

# கொழும்பு புறக்கோட்டையில் நேற்று கவனயீர்ப்பு போர்



## மாணவி கொலைக்கு கண்டனம்

(கொழும்பு)

புங்குடுதீவில் பாடசாலை மாணவி படுகொலை செய்யப்பட்ட சம்பவத்திற்க எதிர்ப்பு தெரிவித்து, சுதந்திரத் திற்கான பெண்கள் அமைப்பு கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தது.

நேற்றுக் காலை 9 மணியளவில் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னால், முன்னெடுக்கப்பட்ட இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் இன, மத, மொழி பேதமின்றி சகல மக்களும் பங்கேற்றதோடு, கொலைக் குற்றவாளிகளுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்ததனர்.

மேலும், இதற்கு முன்னரும் இவ்வாறான பல சம்பவங்கள் இலங்கையில் நடந்தேறியுள்ளதை வலியுறுத்திய ஆர்ப்பாட்டக்காரர்கள், இனியும் இவ்வாறான அசம்பாவிதங்கள் நடைபெறுவது தடுக்கப்பட வேண்டுமென அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை படுகொலை செய்யப்பட்ட மாணவிக்கு ஆதரவான ஆர்ப்பாட்டங்களை சில அரசியல்வாதிகள் தங்களுக்கு சாதக்மாக பயன்படுத்திக்கொள்ள முயல்வதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பாலியல் வன்புணர்விற்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட புங்குடுதீவு மாணவிக்கு ஆதரவாகவும், குற்ற வாளிகளுக்கு எதிராகவும் வடக்கு கிழக்கு உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் போராட்டங்கள் மற்றும் பேரணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

எனினும் சில சுயநல அரசியல்வாதிகள் இதனைத் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு அதற்கு அரசியல் சாயம்பூச முயல்வதாக மனித உரிமை செயற்பாட்டாளர் நளினி இரட்ணராஜா தெரிவித்துள்ளார்.

# ஆசிரியர் பயிற்சிக்கு விண்ணப்பிக்க வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வியற் கல்லூரிகளில் தொழில்முறை ஆசிரியர் பயிற்சிக்கான பட்டப் படிப்புக்காக தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.


2013 ஆம் ஆண்டில் கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சையில் சித்தியெய்தி கல்வியற்கல்லூரிக்கு அனுமதி பெறத் தயாராகும் அனைத்து மாணவர்களும் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்களுக்கான முடிவுத் திகதி எதிர்வரும் 29 ஆம் திகதியெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மூன்று வருடங்களைக் கொண்ட இப்பாடத்திட்ட நெறிக்காக ஒவ்வொரு வருடமும் சுமார் 3500 ஆசிரியர்கள் உள்வாங்கப்படுகின்றனர். இம்மூன்று வருடங்களில் முதல் இரண்டு வருடங்களும் கல்வியற்கல்லூரியில் படித்து விட்டு மூன்றாவது வருடம் பயிற்சி நெறிக்காக பாடசாலைக்கு அனுப்பப்படுவர்.

இரண்டாவது வருட இறுதியில் கல்வி திணைக்களத்தினால் நடாத்தப்படும் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஒவ்வொரு மாணவ ஆசிரியர்களும் 90 சதவீத வருகைப்பதிவினை கொண்டிருக்க வேண்டும். முதல் இரண்டு வருடங்களும் கல்வியற் கல்லூரியில் படிக்கும் மாணவ ஆசிரியர்களுக்காக ஒவ்வொரு மாதமும் 3500 ரூபா அடிப்படையில் அறவிடப்படும். ஆனால் உணவு தங்குமிடங்கள் உட்பட அனைத்து வசதிகளும் கல்வியற் கல்லூரியினால் வழங்கப்படும். மூன்றாவது வருடம் பாடசாலையில் பயிற்சி நெறியில் ஈடுபடும் போது 4000 மாத வருமானமாக வழங்கப்படும்.

தற்போது 2015 ஆம் ஆண்டில் உள்வாங்கப்படும் இப்பயிற்சி ஆசிரியர்கள் 2018 ஆம் ஆண்டில் பிரதேசங்களில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யும் வகையில் பாடசாலைகளுக்கு நியமிக்கப்படுவர். இது குறித்து மேலும் தகவல்களுக்கு 08.05.2015 அரசாங்க வர்த்தமானி அறிவித்தலைப் பார்வையிடலாம்.

# வவுனியா வளாகத்தில் நேற்றும் கண்டனப்போர்




(வவுனியா)

புங்குடுதீவு் மாணவி வித்தியாவின் படுகொலையைக் கண்டித்து யாழ். பல்கலைக்கழத்தின் வவுனியா வளாக மாணவர்கள் நேற்று திங்கட்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.


வவுனியா, பூங்கா வீதியில் அமைந்துள்ள யாழ். பல்கலைக் கழத்தின் வளாகத்தின் முன் ஒன்று கூடிய மாணவர்கள், வித்தியாவின் படுகொலை வன்புணர்வு குற்றவாளிகளை தூக்கில் போடுமாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது சில மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் கூரை மேல் ஏறியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# அந்த நாள் ஞாபகங்கள் வாஞ்சையுடன் ஒரு சந்திப்பு

(கொழும்பு)

இரண்டாம் உலகப் போரின் போது இரானுவ சிப்பாயாக கடமையாற்றிய தனது பழைய நண்பர் சோமவர்டன வீரசிங்கவை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேரில் சென்று நலம் விசாரித்தார்.

பொலன்நறுவைக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி, தனது நண்பரான சோமவர்டன வீரசிங்கவின் இல்லத்திற்கு சென்று சந்திப்பை மேற்கொண்டிருந்தார்.



ஜனாதிபதியை ஆனந்தக்கண்ணீருடன் சோமவர்டன வரவேற்றார். இதன்போது சில சுவாரஸ்யமான அனுபவங்களை ஜனாதிபதி மைத்திரிபாலவுடன் பகிர்ந்து கொண்டார்

## சுவிஸ்குமார் எங்கள் நாட்டு பிரஜை அல்ல

மாணவி வித்தியாவை வன்புணர்வுக்குட்படுத்தி படுகொலை செய்த சம்பவத்தில் குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டுள்ள சுவிஸ் குமார் எனப்படும் மகாலிங்கம் சிவகுமார், தமது நாட்டு பிரஜை இல்லையென சுவிஸ் தூதரகம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து கொழும்பிலுள்ள சுவிஸ் தூதுவராலயம் நேற்று அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளது.

# தேசிய வர்த்தக மாநாடு அடுத்த மாதம் கொழும்பில்

(கொழும்பு)

இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய வணிக சிறப்பு மாநாடு எதிர்வரும் ஜூன் மாதம் 5 மற்றும் 6 ஆம் திகதிகளில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விரிவுரைகள், தலையங்கங்களுடனான தயார்படுத்தல்கள் மற்றும் போட்டி நிகழ்ச்சிகளும் இம் மாநாட்டில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க விமானி மரணம்; சூடு பிடிக்கிறது விசாரணை

(கொழும்பு)

கொழும்பிலுள்ள ஐந்து நட்சத்திர விடுதி ஒன்றில், அமெரிக்க விமானப்படை விமானி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டது குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸ் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

அமெரிக்க விமானப்படையில் பணியாற்றும் விமானி ஒருவர் கடந்த வியாழக்கிழமை இரவு கொழும்பிலுள்ள ஐந்து நட்சத்திர விடுதியில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

அதற்கு முதல் நாளே அவர், அந்த ஐந்து நட்சத்திர விடுதியில் அறையொன்றை வாடகைக்குப் பெற்றிருந்தார். பல அழைப்புகளுக்கு விமானியிடம் இருந்து பதில் கிடைக்காத நிலையில், விடுதிப் பணியாளர்கள் சந்தேகமடைந்து, பொலிஸாருக்குத் தகவல் கொடுத்திருந்தனர். இதையடுத்து விமானியின் சடலம் மீட்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பிரேத பரிசோதனையின் பின்னரே, மேலதிக தகவல்கள் வெளியாகும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வற்றாப்பளை பொங்கல் ஏற்பாடுகள் மும்முரம்



வரலாற்றுச்சிறப்பு மிக்க வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை சிறப்பாக இடம்பெறவுள்ளது. இந்த உற்சவத்தின் முன் நிகழ்வான தீர்த்தமெடுக்கும் நிகழ்வு நேற்று மாலை 5.30 மணிக்கு நடைபெற்றது.

• தீர்த்தம் எடுக்கப்பட்டு காட்டா விநாயகர் ஆலயத்துக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு விளக்கேற்றப்படும். தொடர்ந்து ஏழாம் நாளான ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காட்டா விநாயகர் ஆலயத்திலிருந்து பண்டமெடுக்கப்பட்டு வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தை அடையும். மறுநாள் பொங்கல் உற்சவம் நடைபெறும்.

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 மே 26ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.